www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 10/00
දිනමුරසු වාරමලර්
வெ.05-11,1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 88

## முல்லைத் தீவில் புலிகளின் ஆயுதக் கப்பல்!



திகைக்கவைக்கும் திரைமறைவுத் தகவல்கள்

## பேச்சு முறிந்தால் போருக்கு தயார்

ரசிகன் வழங்கும் கிரைம் டயரி



சினி விசிட்

## போலிச்சாமிக்கு சிறைக்குள் சமாதி?

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
எட்டாவது தமிழாராய்ச்சி
மாநாட்டில் நம்மவர்களை
"எட்டநில் கிட்டவராதே"
என்றுவிட்டார் செல்வி.

நம்மவருக்கு ஏற்பட்ட
மாபெரும் அவமானம் அது!

கண்டிக்கவேண்டியவர்கள் பலரே
கைகளை கட்டிக்கொண்டிருந்தார்கள்;
கண்களை மூடிக்கொண்டிருந்தார்கள்;
களம் இருந்தும்
அவர்கள் கண்டனங்களை
முன்வைக்கத் தவறிவிட்டார்கள்.

பாராளுமன்றத்தில்-
முன்னாள் அமைச்சர் அஸ்வர்
பிரச்சனை எழுப்பியிருந்தார்.
ஏனைய தமிழ் பேசும் பா.உக்கள்
மௌனமாகத்தான் இருந்தார்கள்.

தமிழ்-முஸ்லிம் அரசியல் கட்சிகள்
எதுவுமகூட
வாயைத் திறக்கவேயில்லை!

காரணம்-அரசியல்!
நாளை தமிழ் நாட்டுக்கு
சென்று வரவேண்டியிருக்கலாம்;
செல்வியின் கோபத்தை ஏன்
சம்பாதிக்கவேண்டும் என்கின்ற
எச்சரிக்கை உணர்வு!

இந்த நேரத்திலே
பேராசிரியர் சிவத்தம்பி பற்றியும்
ஒரு விமர்சனம்:

"அழைத்தார்கள்-போனேன்;
திருப்பி அனுப்பிவிட்டார்களே!"
என்று வருத்தப்படுகிறார்.

நம்நாட்டு அறிஞர்களை
உரிய முறையில் அழைக்காத
மாநாட்டுக்கு
இவர் ஏன் போனார்?

'நம்மவர் பலர் புறக்கணிக்கப்பட
நான் மட்டும்
அங்கு வருவது முறையல்லவே'
என்று பதில் அனுப்பியிருக்கலாமே;
அப்படிச் செய்திருந்தால்
அவருக்கு ஏற்பட்ட அவமானமும்
நேர்ந்திருக்காது அல்லவா?

ஒருவேளை பேராசிரியர் சிவத்தம்பி
மாநாட்டில் பேச
அனுமதி கிடைத்திருக்குமானால்
அது நம்மவர்களுக்கு
கிடைத்த அங்கீகாரமாகியிருக்குமா?
பத்துப்பேரை எட்டி உதைத்துவிட்டு
ஒருவரை மட்டும் தட்டிக்கொடுப்பதால்
நமக்கு ஏற்பட்ட
அவமானம் அகன்று போயிருக்குமா?

பேராசிரியர் சிவத்தம்பி
சிறந்த பண்பாளர்- மூத்த அறிஞர்-
அவரே தவறிழைக்கலாமா?
இதனைச் சுட்டிக்காட்டுவதால்
அவருக்கு நடந்த அவமானத்தை
சகித்துக்கொள்ளவேண்டும்
என்று அர்த்தமல்ல.

இன்றைய கவிதைப் போட்டி
கவிதைகள்
சமகால அநியாயம் மீது
சாட்டையாக வீசப்படுகின்றன.
கவிதைப்போட்டி மூலமாக
பரவலான கண்டனத்தை
திரட்டி-அவற்றிலே
சிறந்தவற்றை தெரிவு செய்து
இடம்பிடிக்க வைத்திருக்கிறோம்.

வந்து குவிந்த மடல்களில்
ஒரு மடல்கூட
செல்வியின் செயலை
சற்றும் நியாயப்படுத்தவில்லை.

எந்தளவுக்கு-
நம்மவர் கோபம் இருக்கிறது
என்பதற்கு அதுவே சான்று.

□□

காவித் திரைக்குள்
காமகூடம் நடத்தியவர்
பிரேமானந்தா.

கண்டனம் தொடுக்க
உங்களுக்கு
ஒரு சந்தர்ப்பம்.
புகுந்து விளையாடுங்கள்.
கவிதைப்போட்டி 88
உங்கள் கவிதைகளுக்காகக்
காத்திருக்கிறது.

□□

பாப்பரசர் அவர்கள் வருகையும்
வழங்கப்பட்ட மகத்தான வரவேற்பும்
நம நாட்டின்
பண்பாட்டுக்கு சிறப்பு.

சர்வமத தலைவர்கள் கூட்டத்தில்
பௌத்த மதகுருமார்கள்
எவரும் கலந்துகொள்ளவில்லை
என்பது வருத்தத்திற்குரியது.

இது பௌத்த நாடு;
இங்கு அவருக்கு ஏன் வரவேற்பு
என்று கேட்டு
கண்டனம் தெரிவித்துள்ளார்
ஒரு பௌத்த மத குரு.

மிகவும் பின் தங்கிய சிந்தனை-
மக்களின் உணர்வுகளை
நச்சுப்படுத்தும் போக்கு அது.
இவ்வாறான போக்குகளே
விபரீத விளைவுகளுக்கு காரணம்
என்பதை இப்போதுகூட
புரிந்துகொள்ளக்கூடாதா?

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்



## இயேசுவின் நாமமே அன்புதான்!

அன்பு வாசகரே, உங்களில் அதிகமாய் அன்பைச் செலுத்த ஒருவர் இருக்கிறார். இயேசுவே அந்த நெருக்கமான நபரும், உங்கள் சிநேகிதருமாக இருக்கிறார். உங்களின் அன்பை புரிந்துகொண்டவராக இவ்வுலகில் மானிடனாக அவதரித்தார். தம்மைக் கல்வாரிச் சிலுவையில் ஒப்புக்கொடுத்ததன் மூலம் தமது ஆச்சரியமான அன்பை வெளிப்படுத்தினார்.

உங்கள் பாவத்துக்கு பரிகாரமாக தம்மைக் கொடுப்பதையே அவரின் அன்பை உங்களுக்கு உறுதிப்படுத்த ஒரே வழியாகத் தெரிந்து கொண்டார். நீங்கள் நித்திய காலமாய் வாழ்வதற்காக தமது இரத்தத்தையும், ஜீவனையும் கொடுத்தார். அவர் மரித்தோரிலிருந்து எழுந்து உங்களுக்காக எப்போதும் ஜீவிக்கிறார். இவ்வுலகில் பிறந்த நாம் தெரிந்தோ, தெரியாமலோ பாவங்களைச் செய்துவிட்டு பரிகாரம்தேடுகிறோம்.

மத்தேயு 1:21ல் அவருக்கு இயேசு என்று பெயரிடுவார்கள்; அவர் ஜனங்களின் பாவங்களை நீக்கி இரட்சிப்பார் என எழுதப்பட்டுள்ளது.தேவனின் முழு அன்பும் இயேசு கிறிஸ்து மூலமாய் சிலுவையில் வெளிப்படுத்தப்பட்டது. அவரின் நாமமே அன்புதான். அதனால்தான் அதே இயற்கையான முறையில் அவர் மனித குலத்தை உருவாக்கினார்.

இயேசு கிறிஸ்துவிடம் முழுமையாக உங்களை அர்ப்பணித்தால் மட்டுமே இத் தெய்வீக அன்பைப் பெற்று ஒரு சகஜமான வாழ்க்கை வாழ முடியும். விடுதலையும் பெற முடியும்.

போதகர் டி.ஜே.ஜே.அதிசயராஜ்-வத்தளை.

## 'அவுலியாக்களின் அமுதமொழிகள்'

இவ்வுலகை நோன்பாக நோற்றுக்கொள்! மறுமையை நோன்பு திறக்கும் இடமாக ஆக்கிக்கொள்!

நீ சிங்கத்தைக்கண்டு மிரண்டு ஓடுவதைப்போல இக்காலத்தின் மனிதர்களைக் கண்டு மிரண்டு ஓடிவிடு!

ஒரு அடியான் இந்த உலகத்தை துறந்தால், அவன் உள்ளம் ஞானத்தில் ஒளிரும். அவனது அங்கங்கள் (அல்லாஹ்வின்) வணக்கத்திலேயே உதவி தேடிடும்.

அல்லாஹ்வின் பொருத்தம் பெற்றவர்களின் அந்தஸ்து அவனுக்கு பக்கத்தில் இருப்பவர்களின் அந்தஸ்தாகும். அல்லாஹ்வுக்கும் அவர்களுக்கும் இடையிலே எந்தவித உணர்வும் மணமும் இல்லாமலில்லை.

கெட்ட நண்பர்களுடன் இருப்பதைவிட தனிமையில் இருப்பது சிறந்ததாக இருக்கும்.

இரவு நேரங்களில் நின்று தொழுபவர், நோன்பு நோற்றிட ஸஹர் செய்பவரைப் போலாவார்.

இறை சிந்தனை என்பது உள்ளமும் அறிவும் ஹஜ்ஜிச் செய்வதைப் போலாகும். புகழை அங்கீகரிப்பதின் மூலம் மனம் அமைதி பெறுவது பாவத்தைவிட ரொம்ப கடினமானதாயிருக்கும்.

இறை சிந்தனை என்பது கண்ணாடியைப் போல! அதில் நீ உனது நலனையும் பார்க்கலாம். உனது கெட்டதையும் பார்க்கலாம்.

கவிப்பிரியா நிஷா-வெல்லம்பிட்டிய.

## கவிதைப்போட்டி இல-85

**வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும்
வியக்கப்பட்டவற்றிவ் இடம் பிடித்தவையும்**

### பரிசுக்குரிய கவிதை

### மறவாதே!

எட்டாவதுலகத் தமிழாய்வு மாநாட்டின்
கட்டாய அழைப்பேற்று கதவுவரை சென்றவரை
ஒட்டாமல் எட்டி உதைத்துவிட்ட தமிழ் நாடே!
சுட்டாலும் வெண்தரும் சங்கு, நம் ஈழம் மறவாதே!

வாழையூர்-வைரமுத்து.

### கண்டனக் கவிதைகள்

அறியாமை தூங்குகிறது,
அழகு தமிழ் வாழ்கிறது.
வி.கதிரவேலு
வவுனியா.

**யார்?**
செந்தமிழர் மரபையும்
சுந்தரத் தமிழையும்
இச் சிறையினுள்ளே
பூட்டியது யார்?
யாழ் அமீர் மர்சூன்
கல்கிஸ்ச.




எதிர்நாட்டுத்
தமிழர்களை
எளிதில்
வென்றோம்
என்ற களைப்போ
தமிழ் நாட்டு-
ராணிக்கு!
கணேஷ்(எம்)தர்மலிங்கம்
புறக்கோட்டை.

**கெ(க)ட் அவுட்**
கட் அவுட்
காப்பியத்தை
காது குளிர
பாடாதோருக்கு
'கெட் அவுட்'தான்.
கே.இளங்கோவன்
வவுனியா.

**அவமதிப்பு**
யாதும் ஊரே
யாவரும் கேளிர்
ஏன்?
நாம் மட்டும்
அவமதிக்கப்பட்டோம்?
ஏ.எச்.எம்.மௌஜூத்
திருகோணமலை

**இழப்பு!**
செல்வியின் செயலால்
செம்மை இழந்தது-
நாமல்ல!
செல்வியேதான்!
கே.இன்பத் இர்பான்
ஏறாவூர்-2.

**புரட்(டு)(சி)த் தலைவி**
ஈழத் தமிழரின் தலையில்
கொச்சிக்காய் அரைத்துவிட்ட
களைப்பில்தான்
இளைப்பாறுகிறார்!
புத்தளம் பொற்கவி.

**என்ன நிலையோ**
முதலமைச்சருக்கோ
முப்படைகள் காவல்.
முதலமைச்சரோ
தஞ்சை மாநாட்டுக்குக்
காவல்...
எம்.துரையன்
அக்கரைப்பற்று-8.

**பூட்டு**
எட்டாவது மகாநாடு
கிட்டாது போக
திட்டமிட்ட பூட்டு!
ஈழத் தமிழறிஞர்க்கா?
இன்பத் தமிழுக்கா?
ஓடையூரான்.
வாழைச்சேனை.

**பயிரை மேய்ந்த வேலி**
தமதுயிரே போனதுபோல்
தமிழறிஞர் ஏங்குகையில்
தமிழுக்கு தாளிட்ட
நிம்மதியில் தூங்குகிறார்.
எம்.ஏ.எம்.மர்சூக்
மருதமுனை.

**கதவடைப்பு**
தன் புகழ் பாட
தலைவிக்கோர்
தமிழாராய்ச்சி மகாநாடு
எம் தமிழ் மேதைகளுக்கு
அங்கே கதவடைப்பு
ஜி.அருளேந்திரன்
திருமலை.

தமிழக முதல்வரின்
தமிழ்ப் பண்பாட்டை
மூடிய கதவு
முரசறைந்து
சொல்லுதோ?
சு.காயத்திரி
அக்கரைப்பற்று-7.

**தலை குனிவு!**
போரினால் தேசம்
எரிகின்ற வேளையிலும்
தமிழுக்கு எழிலூட்டித்
திரிகின்ற அறிஞர்களை
தஞ்சைத் தமிழ் மேடை
தள்ளி உதைத்ததனைத்
தமிழன்னை கண்டு
தலை குனிந்திருப்பாள்!
ரேணுகா றிபாய்தீன்
ஏறாவூர்-2.

**பயமோ?**
கொசுவுக்குப் பயந்து
கோட்டையை விட்டதுபோல்
குண்டுக்குப் பயந்து
கலைஞரை விரட்டுவதோ?
ச.மகாலிங்கம்-வெளிமடை.

**'பெருமிதம்'**
கவிஞர் போல் வந்திறங்கி
கரும்புலி ஆகிவிடுவார் என்றஞ்சி
தமிழுக்கே கதவடைத்து தானுறங்கும்
'ஜெ'யின் வெற்றி உறக்கம் இதுதானோ!
கே.சிறிகாந்தகுமார்-பிரான்ஸ்.

**ஏன்?**
தமிழுணர்வைத் தள்ளி வைத்து
தரங்கெட்டு நிற்பதும் ஏன்?
அதிகாரப் பூட்டுக்குள்
ஆணவமாய் தூக்கமும் ஏன்?
ஆணை அசைவதற்கு
ஆடம்பரங்களும் ஏன்?
அட்டதிக்கும் சொட்டும் தமிழ்
எட்டிலே பட்டதும் ஏன்?
இ.இந்திரராஜா-சூரிச்(சுவிஸ்)

## கவிதைப் போட்டி இல-88



*சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 11.02.1995.*

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 88
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

## வாசகசாலை

**'ரசிகனுக்கு-கைகுலுக்கு!'**

ரசிகன் தரும் இலக்கிய நயம் இனிக்கிறது. வாரா வாரம் வசந்த வரிகளினால் வசீகரிக்கிறது. இளமை+இனிமை+ படிப்பினை கலந்த அருமை. கூடவே, முடிவுற்ற 'ஒரு அழகி, ஒரு அமைச்சர், ஒரு டாக்டர்' தொடரிலும் ரசிகனின் கை வண்ணம் பிரமாதம்.

வாஹிட் ஏ.குத்தூஸ்-பதுளை.

□□

மக்சீம் கார்க்கியின் 'தாய்' தொடர் முரசிற்கு மென்மேலும் தரத்தை- மெருகைச் சேர்த்து வருகிறதென்றால் அது மறுக்க முடியாத நிஜம். இன்றுகளுக்கும் கதைக்கும் மிகப் பொருத்தம். பொருத்தம் பார்த்துக் கதை பிரசுரிப்பதில் தனிப் பெருமை முரசிற்கே சாரும்.. வாழ்க முரசு. வளர்க உன் பணி!

நிஸ்வா நிஷா-தர்காபிட்டிய.

□□

தகவல் கெட்டி, பாப்பா முரசு, மகாபாரதம், அதிரடி அய்யாத்துரை, எக்ஸ்ரே ரிப்போர்ட் அனைத்து அம்சங்களும் சூப்பர். நண்பா நீ பார் எங்கணும் புகழ் பரப்ப என் வாழ்த்துக்கள்.

செல்வன்கள் ஸ்ரீரவி, குமார்
நிரஞ்சன்-இரத்தினபுரி.

□□

முரசே, நீ வாரம் தோறும் எம் கையில் வரும்போது புதிய வசந்தத்தின் தரிசனத்தை பெறுகின்றோம். பலரின் தரமுள்ள சிந்தனைக் கருவூலங்களைத் தாங்கி வரும் உன் வரவு யாவருக்கும் புது வாழ்வு தருவதாக!

எஸ்.எச்.முபாறக்-கல்முனை.

□□

'தாய்' என்னும் தொடர் கதை என்னை மிகவும் கவர்ந்துள்ளது. உன்னை நான் என்னவென்று வர்ணிப்பேன்?

செல்வி ரா.ராஜனி-தெய்கலை.

□□

என் இதயம் கவர்ந்த இனிய முரசே, உன் வரவால் மகிழ்ச்சி அடையும் என் உள்ளம். அற்புதன் எழுதும் அரசியல் தொடர் அற்புதம்.

எஸ்.சசி-நீர்கொழும்பு.

□□

வாந்தோறும் எம் சிந்தனை கடலில் மிதந்து வரும் தினமுரசே, ஊற்றெடுக்கும் நீராய் உமது கவிதை கதை அம்சங்கள் என் இதய தடாகத்தில் வந்து நிறைந்தோடுகின்றன! நித்தமும் நீ என் மனதில் வாழ வாழ்த்துக்கள்!

எஸ்.தியாகராஜா-காவத்தை.

□□

முரசே, உன் படைப்புகளை உற்று நோக்கும் ரசிகர்களில் நானும் ஒருவன். எழுத்தாளரும் சிந்தனைவாதியுமாகிய 'மக்சீம் கார்க்கியின்' 'தாய்' என்ற சிந்தனை தொடரை படிக்கும்போது அடங்கியொடுங்கி வாழும் சமூகத்தை தட்டியெழுப்பும் முரசின் பணியை பாராட்டுகிறேன்.

த.நடராசா-வெல்லம்பிட்டி.

□□

**உள்ளத்துக்கு திருப்தி**

என் அன்புக்கினிய முரசே,

நீ வாரா வாரம் சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் சூப்பர் ஹிட். நீ தரும் 'தாய்' தொடரை பார்ப்பதில் என் உள்ளத்துக்கோ ஓர் திருப்தி.

மொஹமட் டீன்-ஹுனுபிடிய.

□□

**சூப்பர் ஐடியா!**

பார் புகழ்பெற்ற பாப்பரசின் படத்தை அவரை கௌரவிக்குமுகமாக, முரசின் முன் அட்டையில் தந்தது சூப்பர் ஐடியா! தருணம் அறிந்து அவரின் வருகைக்கு, பெருமை சேர்த்து விட்டீர்கள் தலைவா! தொடரட்டும் உங்கள் (வித்தியாச) பாணி!

து.சர்மிளாதேவி-கலஹா.

□□

சினிமா ரசனைக்கு
சினி விசிட் பலவிதமாய்
சிறுகதை பல தந்து
இலக்கிய நயம் ததும்ப
இரசனைக்கு விருந்தாய்
ரசிகனின் கதை தந்து
கவிப்பிரியர் உளமறிந்து
கவி பல தேன்கிண்ணமதில்
பாப்பாக்கள் படியுயர
பாப்பா முரசு வேறு
அரசியல் அறிந்திட
நேர்மையான அலசல்

திவுளானை சவாஹீர்-பொலன்னறுவை.

□□



அன்பின் முரசே!

நீ சுமந்து வரும் ஒவ்வொரு அம்சமும் இனிமையே! பாப்பா முரசு, சிறுகதைகள் அத்தோடு மக்சீம் கார்க்கி எழுதும் 'தாய்' நாவலைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

ம.வினோதினி-மட்டக்களப்பு.

# தொடரும் மோதல் தவிர்ப்பும்-வளரும் முரண்பாடுகளும்!

# கிழக்கில் முறுகல் நிலை! வடக்கே கண்டனப் பிரசாரங்கள்!!

(அரசியல் நிருபர்)

**மோதல் தவிர்ப்பு நீடித்தாலும் இரு தரப்புக்கிடையிலும் முரண்பாடுகள் வளர்ந்து வருகின்றன. அரச தரப்பு மோதல் தவிர்ப்பை சரிவர அமுல் நடத்தவில்லை என்று புலிகளது பிரசார சாதனங்கள் கூறிவருகின்றன.**

### உயர்மட்ட உத்தரவு

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒரு சில வாரங்கள் நிலமை சுமுகமாக இருந்தது.

கிழக்கு மாகாணத்தில் புலிகள் அமைப்பினர் ஆயுதங்களோடு நடமாடியதையும் படையினர் கண்டும் காணாமல் நடந்து கொண்டனர்.

மட்டக்களப்பில் புலிகள் அமைப்பினர் நிதி திரட்டலில் ஈடுபட்டமையும், தடை செய்யப்பட்ட பொருட்களை தமது பகுதிகளுக்குப் பெருமளவில் கொண்டு சென்றதும் பாதுகாப்பு படையினரால் தமது உயர்மட்டத்தின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டது.

போர் தவிர்ப்பு ஒப்பந்த விதிகளின்படி நடந்துகொண்டால் போதும். விதிகளை மீறி நடந்தால் படையினர் தலையிடலாம் என்று மேல்மட்டத்தில் இருந்து கூறப்பட்டதாகத் தெரிகிறது.

இதனையடுத்து படையினர் கிழக்கு மாகாணத்தில் தமது முகாம்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதில் ஈடுபடத் தொடங்கினார்கள்.

முகாம்களின்மீது புலிகள் நோட்டமிட்டுச் செல்வதாகவும் கருதப்பட்டது.

முகாம்கள் அமைந்துள்ள சூழல், அவற்றின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி புலிகள் அவதானித்துச் செல்வதாக படை வட்டாரங்கள் சந்தேகப்பட்டன.

இதனையடுத்து முகாம்கள் முன்பாகவும், முகாம்களைச் சுற்றியும் முள்வேலிகள், மண்மூட்டைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

முகாம்கள் சிலவற்றின் முன்பாக தடை போடப்பட்டு மக்கள் வேறு பாதையால் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### புலிகள் புகார்

கிழக்கு மாகாணத்தில் தமது உறுப்பினர்கள் சுதந்திரமாக நடமாட படையினர் தடைவிதித்துள்ளனர் என்று புலிகள் யாழ்ப்பாணத்தில் அறிவித்துள்ளனர்.

அரசியல் அவதானிகளை மேற்கோள் காட்டி 30.1.95 அன்று புலிகளின் குரல் வானொலி வெளியிட்டுள்ள செய்தியில், "சந்திரிக்கா அரசின் போக்கு மீண்டும் மோதலை ஆரம்பிக்கலாம். இராணுவத் தீர்வில் அரசு நாட்டம் கொண்டுள்ளது. இராணுவ வெற்றியில் சந்திரிக்கா நம்பிக்கை வைத்துள்ளார். பேச்சுவார்த்தையில் அரசு தாமதப் போக்கை கடைப்பிடிக்கிறது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் 'புலிகளின் குரல்' வானொலி மற்றும் அங்கிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் மோதல் தவிர்ப்பு அரச தரப்பால் சரிவர அமுல்படுத்தவில்லை. புலிகள் மிகக் கவனமாக ஒப்பந்த விதிகளை அமுல் நடத்திவருகிறார்கள் என்று தினமும் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

23.01.95 அன்று மட்டக்களப்பு உன்னிச்சையில் தமிழ் பெண்கள் இருவரை படையினர் கைது செய்தனர்.

கிழக்கு மாகாணத்தை தென் தமிழீழம் என்று குறிப்பிட்டுள்ள புலிகள் அமைப்பினர், தென் தமிழீழத்தில் படையினரின் கெடுபிடி தொடர்கிறது. புலிகள் போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை அவதானமாக கடைப்பிடித்து வருகின்றனர் என்று கூறியுள்ளனர்.

### புதிய ஒலிபரப்புக்கள்

வடக்கில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் புதிய ஒலிபரப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. அவற்றில் புலிகளுக்கு எதிரான பொய்யான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று 'புலிகளின் குரல்' வானொலி கூறியிருக்கிறது.

அரசு-புலிகள் பேச்சுவார்த்தைக்கு பின்னரே இந்த ஒலிபரப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. புலிகளுக்கு எதிரான சிறீலங்கா அரசு மேற்கொள்ளும் உண்மைக்கு மாறான பிரசாரங்கள் சிறீலங்கா அரசின் சமாதானம் குறித்த நடவடிக்கைகளில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் 28.01.95 அன்று புலிகளின் குரல் வானொலி கண்டனம் தெரிவித்தது.

மோதல் நிறுத்தம் தொடரவேண்டும் என்பதையே வடக்கு-கிழக்கு மக்கள் விரும்புகிறார்கள்.

மோதல் தவிர்ப்பு நிறுத்தம் முடிவுக்கு வருமானால் அதற்கு தாம் பொறுப்பல்ல என்று கூறுவதைப்போலவே புலிகளது பிரசாரங்கள் அமைந்து வருகின்றன.

### பதில் இல்லை

போர் தவிர்ப்பு நடைமுறைகள் குறித்து எழுந்த சிக்கல்களை களையும் நோக்கில் தம்மால் அனுப்பப்பட்ட கடிதத்துக்கு இது வரை அரசு பதில் அனுப்பவில்லை என்று புலிகள் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் தமது உறுப்பினர்களின் நடமாட்டத்திற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகள், மீன்பிடித்தலுக்கான தடை போன்றவை போர் தவிர்ப்பு ஒப்பந்தத்திற்கு முரணாக உள்ளன. போர் இடை நிறுத்த கண்காணிப்புக் குழுக்களை அமைப்பதில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளன என்று புலிகள் தமது கடிதத்தில் அரசுக்கு சுட்டிக் காட்டியுள்ளனர்.

## விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான செயற்பாடு!

## 'புளொட்' உறுப்பினர்கள் சரணடைந்தார்களாம்

**வ**வுனியாவில் இருந்து ஆயுதங்களுடன் வந்து 'புளொட்' உறுப்பினர்கள் இருவர் தம்மிடம் சரணடைந்ததாக யாழ்ப்பாணத்தில் புலிகள் கூறியுள்ளனர்.

26.01.95 அன்று யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பின் உளவுப் பிரிவைச் சேர்ந்த பொஸ்கோ பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக செயற்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ் அமைப்புக்களில் உள்ள இளைஞர்கள் விடுதலைப் புலிகளிடம் சரணடையுமாறு அந்த மாநாட்டில் பொஸ்கோ பகிரங்கமாக அறிவித்தார்.

போர் தவிர்ப்பு ஒப்பந்த காலத்தில் உள்ள நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்தி ஏனைய தமிழ் அமைப்புக்களது உறுப்பினர்கள் சரணடையலாம் என்று பொஸ்கோ கூறினார்.

இதே வேளையில் தமது இரண்டு உறுப்பினர்களை புலிகள் கடத்திச்சென்றுவிட்டு சரணடைந்ததாக கூறி வருகின்றனர். மோதல் தவிர்ப்பு நேரத்தில் நடந்த அத்துமீறல் இது என்று 'புளொட்' வட்டாரங்கள் கூறியுள்ளன.

மோதல் தவிர்ப்பு நேரத்தில் புலிகள் விடுத்துள்ள அறிவித்தல் போர் தவிர்ப்பு ஒப்பந்த மீறலாகும் என்று ஏனைய தமிழ் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பதவி விலக தங்கா மறுப்பு!

## கூட்டணிக்குள் திருமலையில் பூசல்!

(திருமலை நிருபர்)

**தி**ருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பாக திரு. சம்பந்தனும் திரு.தங்கத்துரையும் செய்துகொண்ட ஒப்பந்தமொன்றின்படி 95 ஜனவரியோடு திரு.தங்கத்துரை பதவி விலகவேண்டும். ஆனால் திரு.தங்கத்துரை பதவி விலகாமற் போகலாம் என்ற முரசின் ஊகம் சரியாகி விட்டது.

தனது பதவியை ஜனவரி 31உடன் இராஜினாமாச் செய்யப்போவதில்லை எனப் பத்திரிகை ஒன்றின் வாயிலாகப் பகிரங்கப் படுத்தியிருக்கும் திரு.தங்கத்துரை, தனக்கும் சம்பந்தனுக்குமிடையில் உடன்படிக்கை எழுதப்பட்டது என்பதையும் ஒத்துக் கொண்டுள்ளார்.

தங்கத்துரையின் இந்த அறிவிப்பால் திருமலைக் கூட்டணி வட்டாரங்கள் அதிருப்தியடைந்துள்ளன. கட்சிக் கிளையை சம்பந்தனின் ஆதரவாளர்கள் என அவர்கள் கருதக்கூடாது என்றும் அவை தெரிவிக்கின்றன. இதுபற்றிக் கருத்து தெரிவித்த கூட்டணி தீவிர ஆதரவாளர் ஒருவர், "தங்கத்துரையும் அவரது ஆதரவாளர்களும் நினைப்பதுபோல் நாங்கள் சம்பந்தன் ஆதரவாளர்களல்லர். எங்களுக்குக் கட்சிதான் முக்கியம். தனது வெற்றி பலவீனமானது என்பதால்தான் அவர் திரு.சம்பந்தனோடு ஒப்பந்தத்துக்குப் போனார் என்பதை திரு.தங்கத்துரை மறக்கக்கூடாது" என்று அவர் கூறினார்.

"77 தேர்தலில் சம்பந்தனுக்கு கட்சி டிக்கட் கொடுத்து தங்கத்துரையை தேர்தலில் நிறுத்தாமல்விட்டபோது ஆயிரக் கணக்காகத் திரண்டு திரு.தங்கத்துரையை தோளில் சுமந்து ஊர்வலம் சென்றவர்கள் நாங்கள் என்பதை அவர் மறவாதிருக்க வேண்டும்" என்று அவர் மேலும் கூறினார்.

திரு.சம்பந்தனோடு திரு.தங்கத்துரை செய்துகொண்ட உடன்படிக்கை மீறல்பற்றி ஆராய்வதற்காக இவ்வாரம்கூட இருக்கும் கூட்டணியின் திருமலைக் கிளையின் இவ்விடயம் சம்பந்தமான கடுமையான சில முடிவுகளை எடுக்கக்கூடும் எனத் தெரியவருகிறது.

இதேவேளை திரு.தங்கத்துரை பதவி விலகக்கூடாது என்று அவரது ஆதரவாளர்கள் வற்புறுத்தி வருகின்றனர்.

## "இலங்கை இரு நாடுகள் கொண்ட ஒரு தீவு!

## இனப்பிரச்சனை தீர்வுக்கு அதுவே அடிப்படை!"

## புலிகளது உலகத் தமிழர் பத்திரிகை தெரிவிப்பு

**ச**ந்திரிக்கா குமாரதுங்காவை சற்று வித்தியாசமாக நம்பியிருந்தவர்களுக்கு அவரது பாராளுமன்ற உரை பெரிய ஏமாற்றமாகும்.

இவ்வாறு கனடாவில் இருந்து வெளிவரும் புலகளது 'உலகத் தமிழர்' பத்திரிகை (15.01.95) விமர்சித்திருக்கிறது.

அதிகாரப் பரவலாக்கம் என்பது இனப்பிரச்சனைக்கு தீர்வாக அமையாது. அது புற்றுநோய்க்கு அஸ்பிரின் மாத்திரை கொடுப்பது போன்றதே என்று 'உலகத் தமிழர்' தெரிவித்துள்ளது.

மேலும் அப்பத்திரிகையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

இலங்கை, சிறீலங்கா, தமிழ் ஈழம் என்ற இரண்டு நாடுகளையும் தமிழர், சிங்களவர் என்ற இரண்டு தேசிய இனங்களையும் உள்ளடக்கிய தீவு. சிங்களவர்களுக்கு இராச்சியங்கள் இருந்தது போலவே தமிழர்களுக்கும் இராச்சியம் இருந்திருக்கிறது.

இந்த வரலாற்று உண்மையின் அடிப்படையிலேயே இரண்டு தேசிய இனங்களின் அரசியல், பொருளாதார சமத்துவ அடிப்படையிலேயே இனப்பிரச்சனை தீர்த்து வைக்கப்படவேண்டும்.

அதிகாரப் பரவலாக்கல் மூலம் தமிழினத்தின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்துவிடலாம் என்ற கனவுலகத்திலிருந்து விடுபட்டு ஜனாதிபதி சந்திரிக்கா யதார்த்த பூர்வமான அரசியல் உலகுக்கு முகம் கொடுக்க வேண்டும்.

அப்படி அவர் இறங்கிவராவிட்டால் அமெரிக்க சி.ஐ.ஏ. உளவு நிறுவனம் ஆருடம் கூறியுள்ளது போல அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் போர் கடுமையாக மூளும் என்பதை சந்திரிக்கா மெய்ப்பித்து விடுவார்.

"இது யாருக்கும் நல்லதல்ல, நாட்டுக்கும் நல்லதல்ல."

இவ்வாறு 'உலகத் தமிழர்' பத்திரிகை தனது அரசியல் விமர்சனத்தில் தெரிவித்துள்ளது.

## கருவிலே கற்பனைக் குழந்தை

**பு**லிகள் அமைப்பின் ஆஸ்தான கவிஞர் என்று அழைக்கப்படுபவர் புதுவை இரத்தினதுரை.

அவர் சமீபத்தில் எழுதிய கவிதை ஒன்று 20.01.95 அன்று யாழ்ப்பாணத்தில் வெளியான 'ஈழநாதம்' பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளது.

பேச்சுவார்த்தை குறித்து மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை பின்வருமாறு தனது கவிதையில் சாடுகிறார் புதுவை இரத்தினதுரை.

**"கற்பனைக் குழந்தையை கருவில்**
**சுமந்து பத்தியத்திற்கு**
**உள்ளிப்பூடு தேடுகிறாள்."**

## தமிழ் பா.உக்கள் ஒற்றுமை முயற்சி!

## இ.தொ.கா. நடவடிக்கையால் தடங்கல்!

**பா**ராளுமன்றத்தில் உள்ள தமிழ் கட்சிகளது சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் புரிந்துணர்வுடனும், பொதுப் பிரச்சனைகளில் ஒருமித்த முடிவோடு செயற்படுவதற்கான முயற்சி ஒன்று நடைபெற்று வந்தது.

மூத்த தலைவர் என்ற வகையில் திரு.தொண்டமான் அவர்கள் தலைமையில் கூடி தமிழ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வந்தது.

இதற்கிடையே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அந்த முயற்சியை தமது கட்சியின் அரசியல் நடவடிக்கை போல் பத்திரிகைகள் மூலம் செய்திகள் வெளியிட்டனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமான் கையொப்பமிட்ட கடிதங்கள் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதனை தமிழ் கட்சிகளது பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் விரும்பவில்லை.

மூத்த தலைவர் என்ற வகையில் அவரது தலைமையில் கூடி கலந்துரையாடுவதற்கு நாம் தயார். அதனை ஒரு கட்சியின் நடவடிக்கையாக அரசியல் சாயம் பூசுவது தவறான கருத்துக்களையே ஏற்படுத்தும் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

27 பாராளுமன்ற உறுப்பினர்களது ஒன்றுகூடலே இன்னமும் நடைபெறவில்லை. அதற்கு முன்னரே 27 தமிழ் எம்.பிக்கள் தன்னை தலைவராக தெரிவு செய்துவிட்டார்கள் என்று திரு.தொண்டமான் மலையகத்தில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் தெரிவித்திருந்தார். இதுவும் தமிழ் கட்சி வட்டாரங்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

## வடக்கே உணவுப் பொருட்களுக்கு கியூ

**வ**டபகுதியில் அரிசி, மா, சீனி போன்ற பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இவற்றைப் பெறுவதற்காக மக்கள் கியூ வரிசைகளில் காத்து நிற்கின்றனர்.

தாண்டிக்குளத்தின் ஊடாக பொருட்களை ஏற்றிவரும் லொறிகளை படையினர் தடுத்து வைத்து, தாமதப்படுத்துவதே உணவுத் தட்டுப்பாட்டுக்கு காரணம் என்று புலிகள் வடக்கில் குற்றம் சாட்டியுள்ளனர்.

## பொலிஸ்மா அதிபர் கூற்று

## புலிகள் உடனடி மறுப்பு!

**தி**ருகோணமலையில் கெடுபிடிச் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்று பொலிஸ்மா அதிபர் தெரிவித்த கருத்து தவறானது என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

26.01.95 இல் திருகோணமலை கட்டைபறிச்சான் கல்லூட்டாறு பகுதியில் தமிழர் ஒருவர் படையினரால் தாக்கப்பட்டார்.

மூதூர் பகுதியில் படையினர் மறைந்திருந்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்றும் புலிகள் தமது மறுப்பில் தெரிவித்துள்ளனர்.

30.01.95 அன்று யாழ்ப்பாணத்தில் வெளியான புலிகளது செய்திக்குறிப்பில் இந்த மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளிடம் வாகன பதிவு

**பு**லிகள் அமைப்பினர் தமது நிர்வாக அமைப்புக்களை பரவலாக்கி வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் மோட்டார் வாகனங்கள் வைத்திருப்போர் தமது வாகனங்களை பதிவு செய்துகொள்ளுமாறு புலிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

ஜனவரி 25ம் திகதி மன்னாரில் புலிகளது 'தமிழீழ மோட்டார் ஊர்த்தி பதிவு செயலகம்' திறந்துவைக்கப்பட்டுள்ளது. அங்கு சென்று பதிவு செய்யுமாறு புலிகள் அறிவித்துள்ளனர்.

## "கல்விபீடங்கள் ஒன்றாக வேண்டும்"

கிழக்கு மாகாணத்தில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் என்ற பெயரில் ஒரு பிரசுரம் வெளியாகியுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்திற்குரிய சகல கல்விப்பீடங்களும் வந்தாறுமூலையில் இயங்கவேண்டும் என்று அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

றுகுணு பல்கலைக்கழகமும் கிழக்கு பல்கலைக்கழகமும் ஒரே ஆண்டில் உருவாகியது. ஆயினும் றுகுணு பல்கலைக்கழக வளர்ச்சி மலையாக இருக்கிறது. கிழக்கு பல்கலைக்கழக வளர்ச்சி மடுவாக இருக்கிறது என்றும் அப்பிரசுரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

## தண்டிக்கப்படவேண்டியவர்களுக்கு பதவியாம்

## சட்டத்தரணி விநோதன் மீது பாய்ச்சல்!

**சி**றீலங்கா சுதந்திரக் கட்சியின் உடுவில் தொகுதி அமைப்பாளராக இருந்தவர் கு.விநோதன்.

இவர் தற்போது சமாதான கருத்தரங்குகளில் பேசிவருகிறார். இலங்கை வானொலியிலும்-இவரது உரைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

இது பற்றி கண்டித்துள்ள புலிகளது 'உலகத் தமிழர்' பத்திரிகை தெரிவித்துள்ளதாவது:

"எழுபதுகளில் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் கையாளாக, ஐந்தாம் படையாக ஓடித்திரிந்தவர்களில் ஒருவரான குமாரசுவாமி விநோதனுக்கு மீண்டும் தலைப்பா கட்டும் முயற்சி நடக்கிறது." என்று தெரிவித்துள்ளது.

"விடுதலைபெற்ற தமிழீழ நீதிமன்றத்தில் தேசத்துரோக குற்றச்சாட்டில் நிறுத்தப்பட்டு அதற்குரிய தண்டனை பெறவேண்டியவர்களை சந்திரிக்கா குமாரணதுங்கா பதவிகளை வீசி வளைத்துப் பிடித்திருக்கிறார்."

என்றும் அப்பத்திரிகை எழுதியிருக்கிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## 'தேனீ'யின் தேனகச் செய்திகள்

# மோதல் நிறுத்தம்-புலிகள் திரட்டினர் மூன்று இலட்சம்!

# சவக்காலையில் குழந்தையை வீசிய தாய்

### இரு நேரப் பாடசாலை

மட்டக்களப்பு நகரப் பகுதி-புளியந்தீவு கோட்டத்தைச் சேர்ந்த ஏ.பி.சி. பாடசாலைகள்-இரு நேரப் பாடசாலைகளாக இயங்கத் தொடங்கியுள்ளன. உயர் கல்லூரிகளின் உயர் வகுப்பு மாணவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தோரணையில் போர்க்கொடி உயர்த்தவும் தவறவில்லை. எல்லோருமே மட்டக்களப்பு பிராந்திய கல்வித் திணைக்களத்தில் திரண்டு தமது ஆட்சேபனையைத் தெரிவிக்கவும் மறக்கவில்லை.

### படையினர் ஜரூர்

போர் நிறுத்தம் என்ற சொற்றொடருக்கு 'பகைமை நிறுத்தம்' என்ற புதிய சொற்பதம் பிரயோகத்திற்கு வந்துள்ளது. ஏதோ-போர் தணலுக்குள் இப்புதிய சொற்பதம் -ஜாலம் காட்டினாலும்-மட்டக்களப்புப் பகுதியில் சென்றிகளில் சோதனை நிறுத்தம் இல்லை. மாறாக இறுக்கமாகவே உள்ளது. படையினரும், பொலிசாரும் பிரதேசத்தின் நாற்கோணத்திலும் ஜரூர் நிலைதான்.

### வெள்ளத்தின் கொடூரம்

மட்டக்களப்புப் பகுதியில் வெள்ளத்தின் கோரம் மீண்டும் தலைகாட்டியது. மண்டூர்,வெல்லாவெளி, பாலையடி வட்டை, போரதீவுப் பிரதேசமே வெள்ளக் காடாய் மாறியது-மதகுகளின் குறுக்கே-வெள்ளம் பீறிட்டுப் பாய்ந்தது. காட்டு வெள்ளத்தைத் தாக்குப்பிடிக்க முடியாத கால்நடைகள் மேட்டு நிலப்பகுதியை நாடியுள்ளன.

### வெங்காயம் நாசம்

வெள்ளத்தின் கொடுமையால்- மட்டக்களப்பு விசவாயிகள் கவலையுற்றுள்ளனர். பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் செய்கை பண்ணப்பட்ட வெங்காயப் பயிர் செய்கை நீர் ஊற்றுப் பிடித்ததனால் அழுகியுள்ளன.

### காந்தி சதுக்கம்

மட்டக்களப்பு மாநகர சபைப் பகுதியில் அமைந்துள்ள காந்தியடிகளின் சிலை நகரின் மத்தியில் நடு நிலைப்படுத்தப்படவுள்ளது. அத்துடன்-இப்பகுதிக்கு 'காந்தி சதுக்கம்' என பெயர் சூட்டப்படவுள்ளது. மாநகர முதல்வரைச் சந்தித்த மட்டக்களப்பு காந்திய சேவா சங்கத்தின் தூதுக்குழுவினர்- இந்த ஆலோசனையை முன்வைத்துள்ளனர். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்திலும் உறுப்பினர்கள் இக்கோரிக்கையை ஏற்றுள்ளனர் என்று தெரிகிறது.

### அடி உதவியது

கல்லடிப் பகுதியில்-பொதுமக்களிடம் புலிகளுக்கென நிதி சேர்த்த ஒருவரைப் பிடிக்க கல்லடி இராணுவத்தினர் வலை விரித்தபோது தப்பித்துக்கொண்டார். ஆனால் அவர் விட்ட தவறு என்னவென்றால்-காசு கொடுத்தவர்களின் விபரம் அடங்கிய புத்தகத்தை வீதியில் தவறவிட்டமைதான். இதனால் வந்தது ஆபத்து. காசு வழங்கியவர்களுக்கு- வாங்கிய அடி பொறுக்க முடியாது. ஒருவர் சொன்னார்- ஐம்பது கேட்டார்கள். பத்துத்தான் கொடுத்தேன்" என்று.

### 'பேழை' வெளியீடு

மட்டக்களப்பு- வின்சன்ட் மகளிர் கல்லூரியின் சஞ்சிகையான 'பேழை' வெளிவந்துள்ளது. இனிக்கும் கட்டுரைகள், இன்னோரன்ன சுவைக் குறிப்புக்கள் பேழையை நிறைவு செய்துள்ளன. அட்டைப் படம் பலே ஜோர்.

### பகைமை ஒழிப்பு

'பகைமை ஒழிப்பு' வந்தது வந்ததுதான். அதற்கு முன்னதாக மேலெழுந்தவாரியாக நடையோடு நடையாக உள்ளூருக்குள் 'நிதி சேர்க்க' எல்.ரி.ரி.இ.யினர் மறக்கவில்லை. மட்டக்களப்பு பார் வீதிப் பகுதியில் சுமார் மூன்று இலட்சம் சேகரிப்பாம்!

### பாதுகாப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. மட்டக்களப்பு வாவியில் படகு ரோந்தும் உஷார் படுத்தப்பட்டுள்ளது.

### ஆசைக்கொரு ஆண்! ஆண்டவன் கொடுத்தான்.

மட்டக்களப்பு- கிரான்குளம் சவக்காலையில் பால்மணம் மாறா பச்சிளங் குழந்தை கண்டெடுக்கப்பட்டது. திடீரென ஆட்டோவில் கைக்குழந்தையுடன் ஒரு தாய் வந்து பிரதான வீதி ஓரத்தில் இறங்கினாராம். ஆட்டோ நகர்ந்ததாம். கையோடு கொண்டுவந்த குழந்தையை சவக்காலையில் கிடத்தி தாய் மாயமாக மறைந்திருக்கிறார். பற்றைக் காடு பகுதிக்குச் சென்ற கிராமத்தவர் குழந்தையைக் கண்டுள்ளார். பெண்பிள்ளைகள் அதிகமாக உள்ள குடும்பத்தினர் இந்த 'ஆண் மகவை' எடுத்து ஆசைக்கொரு ஆண் இல்லாக் குறையை ஈடுசெய்துள்ளனராம்.

# விபரங்கள் கோருகிறது ஜனாதிபதி ஆணைக்குழு!

(ஏறாவூர் நிருபர்)

காணாமல் போனோர், கடத்தப்பட்டோர் பற்றிய விசாரணை மேற்கொள்ளவென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மூன்று ஆணைக்குழுக்களும் அந்த சம்பவங்கள் பற்றிய தகவல்களை தற்போது சேகரித்து வருகின்றன.

1988 ஜனவரி மாதம் 1ம் திகதிக்கு பின்னர் இடம்பெற்ற மேற்குறித்த சம்பவங்கள் பற்றிய விசாரணைகளை இந்த ஆணைக்குழுக்கள் நடாத்தும்.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக இந்த ஆணைக்குழுவிற்கு தெரிவிக்கப்படவேண்டிய விபரங்கள் யாவும் எதிர் வரும் பெப்ரவரி 14ம் திகதிக்கு முன்- செயலாளர், வடக்கு-கிழக்கு மாகாணங்களிலிருந்து தன்னிச்சை இல்லாதவாறு அகற்றப்பட்ட காணாமற் போயுள்ளவர்கள் பற்றி விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு, நீதியமைச்சு, உயர் நீதிமன்றக் கட்டிடம், கொழும்பு-12 எனும் முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும்.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் காணாமற் போனோர், கடத்தப்பட்டோர் பற்றிய விசாரணைகளை நடத்தவென நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அலுவலகம் கொழும்பு உயர் நீதிமன்ற கட்டிடத்தில் இருக்கும் நீதி அமைச்சில் செயற்படும்.

கடத்தப்பட்டவர்களை கண்டுபிடிப்பதற்கும் இது சம்பந்தப்பட்ட சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு பொறுப்பாயிருந்தவர்களை இனம் காண்பதற்கும் இவ்விவரங்களை ஆணைக்குழுக்கள் பயன்படுத்தும். இந்த சட்ட விரோத நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் நடைபெறுவதை தடுப்பதற்கும் இச்சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கும் ஆணைக்குழுக்கள் பரிந்துரை செய்யும்.

# குறைகள் தீருமா?

(குருநாகல் நிருபர்)

குருநாகல் நகருக்கு மிக அண்மையில் உள்ள- முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் கிராமமே அஸ்வத்துமை. இக்கிராமத்துக்கு சீரான பாதை வசதிகள் இல்லை. குன்றும் குழியும் நிறைந்த பாதைகளாகவே தினமும் காட்சியளிக்கின்றன. பஸ் போக்குவரத்து இல்லை. இப்பகுதி மக்கள் தங்கள் சகல தேவைகளுக்கும் குருநாகல் நகரை நோக்கி செல்லவேண்டி இருப்பதால் கால அட்டவணைப்படி ஓடும் பஸ்சேவை அவசியம். குருநாகல் நகரில் சீரான தொலைபேசி சேவைகள் இருந்தும், இக்கிராமத்துக்கு இன்னும் தொலைபேசிச் சேவை இல்லை. இவ் வசதி இல்லாமையால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. கடந்த அரசாங்கத்தில் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டபோதும் அவை நிறைவேற்றப்படவில்லை எனவும், இந்த அரசாவது தங்கள் குறைகளை தீர்த்து வைக்குமா எனவும் எதிர்பார்த்திருக்கின்றனர் இக்கிராம மக்கள்.

# பொத்துவிலுக்கு வந்த இராணுவ உபகரணங்கள்!

## புலிகளுக்காக கொண்டுவரப்பட்டதாக சந்தேகம்!

பொத்துவில் பகுதியில் கட்டப்பட்டு வரும் உல்லாச பயண விடுதி ஒன்றுக்கான உபயோகப் பொருட்கள் என்ற போர்வையில் ஹொங்கொங்கிலிருந்து இராணுவ உபகரணங்கள் கப்பலில் வந்தமை தொடர்பாக குற்றப் புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இராணுவ சீருடைகள், தொலை நோக்கிகள், மருத்துவ படுக்கைகள் ஆகியவை மூடப்பட்ட கொள்கலன்களில் எடுத்துவரப்பட்டதாக கூறப்படுகிறது.

ஹொங்கொங் நகரில், இராணுவ முகாம்களில் ஏலத்திற்கு விடப்பட்டு விற்பனை செய்யப்பட்ட பொருட்களே சட்ட விரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள முக்கியமான தமிழ் வர்த்தகர் ஒருவரும், பிரிட்டிஷ் பிரஜை ஒருவரும் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. பிரிட்டனில் உள்ள ஜெர்மன் பிரஜை ஒருவரும் விசாரணைக்கு தேவைப்படுவதாக கூறப்படுகிறது.

பொத்துவிலில் உள்ள சம்பந்தப்பட்ட விடுதி வெளிநாட்டவர் ஒருவருக்கு சொந்தமானதாகும். இலங்கைப் பெண் ஒருவரை திருமணம் செய்துள்ள அந்த விடுதி உரிமையாளரும் விசாரிக்கப்பட்டு வருகிறார். இறந்தவர்களின் சடலங்களை எடுத்துச் செல்வதற்குரிய விசேட உபகரணங்களும் கைப்பற்றிய பொருட்களில் இருந்தனவாம்.

# "மாகாணசபை களமாக அமையும்"

(கண்டி நிருபர்)

"மலையக மக்களின் பிரச்சனைகள் பல. அவற்றைத் தீர்த்து வைக்க மத்திய மாகாண சபையை ஒரு களமாக அமைத்துக் கொள்வேன்" என தினமுரசுக்குத் தெரிவித்தார் மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் தலவாக்கெல தமிழ் மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபருமான திரு வீ.டி.தர்மலிங்கம்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பிரதி அமைச்சருமான திரு.பீ.சந்திரசேகரன் நாடாளுமன்றம் சென்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு திரு.தர்மலிங்கம் மாகாண சபையின் உறுப்பினரானார். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் திரு சந்திரசேகரன், திரு.தர்மலிங்கம் திரு.பீ.எம். காதர் ஆகியோர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணையின் இறுதியில் திரு.சந்திரசேகரனும் திரு.காதரும் விடுதலையானார்கள். என்றாலும் திரு.தர்மலிங்கம் மீதான வழக்கு தொடர்ந்து அப்படியே இருக்கின்றது. திரு தர்மலிங்கம் மத்திய மாகாண சபைத் தலைவர் திரு சரத் கோங்கஹகே முன்னிலையில் தமிழில் சத்தியப் பிரமாணம் எடுத்து உறுப்பினராகினார். அவரை வரவேற்பதற்கு அவரது ஆதரவாளர்கள் மாகாண சபைக்கு வந்திருந்தனர். ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் திரு தர்மலிங்கத்திற்கு கைலாகு கொடுத்து பாராட்டுதல்களைத் தெரிவித்தனர்.

## விளம்பரப் பகுதி

### வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்

| குவைத்-பெண்கள் | சம்பளம் |
|---|---|
| வீட்டுப் பணிப்பெண்கள்- | KD 40 |
| குழந்தை பராமரிப்பாளர்கள்- | KD 40 |
| சமையல்காரர்கள்-பேசித்தீர்க்கலாம். | |
| தையல்காரர்கள்- | KD 50 |
| வீட்டுத் தாதிகள்- பேசித்தீர்க்கலாம். | |
| **குவைத்-ஆண்கள்** | |
| சாரதிகள் (குவைத் லைசன்ஸ்)- | KD 60 |
| சாரதிகள் (கல்ப் லைசன்ஸ்)- | KD 50 |
| சாரதிகள் (இலங்கை லைசன்ஸ்)- | KD 45 |
| சமையல்காரர்கள்-பேசித்தீர்க்கலாம். | |
| **சிங்கப்பூர்-பெண்கள்** | |
| வீட்டுப் பணிப்பெண்கள்-சி.டொ.180-220 | |

வதிவிடம், உணவு, வைத்திய வசதி, விமான டிக்கட் இலவசம்.
பாஸ்போர்ட் அளவு நான்கு வர்ணப் புகைப்படங்களுடன் நேரில் வரவும்.

மாஸ்டர் மேன்பவர் கொன்ஸல்டண்ட்
181/1, மோதர, (புதிய பாலத்தருகில்) மொரட்டுவை.
அரசு அனுமதிப்பத்திர இல. 1009

பிரபல வர்த்தக நிலையம் ஒன்றுக்கு

### தமிழ் தட்டெழுத்தாளர் தேவை

ஆங்கிலத்தில் ஓரளவு ஆற்றலும் தமிழில் நல்லாற்றலும் இருத்தல் அவசியம். தங்களது சுயவிபரக் கோவை மற்றும் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:
விளம்பரதாரர் — ADVERTISER
தமிழ் தட்டெழுத்தாளர் — C/O.THINAMURASU VARAMALAR
மே/பா.தினமுரசு வாரமலர் — 
த.பெ.எண்.1772 — P.O.BOX: 1772
கொழும்பு. — COLOMBO.
ADVT



### அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாடனங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ!

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்சுமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்சுமி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—
மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

தலைமையகம்
மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28

### நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:


ஒரு வருடத்திற்கு ரூபா 492/= (52 வாரங்கள்)
ஆறு மாதங்கள் ரூபா 251/= (26 வாரங்கள்)
மூன்று மாதங்கள் ரூபா 128/= (13 வாரங்கள்)

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர் — THINAMURASU VAARAMALAR
த.பெ.இல:1772 — P.O.BOX: 1772
கொழும்பு — COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

# நவீன உலகில் ஒரு நலிந்து கிடக்கும் பாடசாலை



ஊவா மாகாணத்தில்- ஊவா பரணகம என்ற தேர்தல் தொகுதியைச் சேர்ந்த உடப்புசலாவ கேர்க்கிலிஸ் (கம்பாயம்) தோட்ட தமிழ் பாடசாலை. இங்கு கிட்டத்தட்ட 700 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர்.

ஊவா மாகாணம் நான்கு தமிழ் மாகாணசபை உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. ஒரு பெருந்தோட்ட பாடசாலையும் கல்வி அமைச்சும் உள்ளது. இந்த பாடசாலையில் ஆரம்பக் கல்வியை கற்ற பழைய மாணவர் ஒருவரும் கடந்த பலவருடங்களாக மாகாணசபை உறுப்பினராக உள்ளார்.

ஆனால் இப்பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கீழ் தரையும் சுற்றிவர சுவரும் மண் சுவர்கள் கொண்டு கட்டப்பட்ட இப்பாடசாலையின் உள்-வெளித் தோற்றங்களைக் கொண்ட படங்களை இத்துடன் அனுப்பி உள்ளேன். தயவு செய்து இச்செய்தியை பிரசுரித்து உரிய நடவடிக்கை எடுக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு.கோவலன்.

# கிராம அதிகாரிகள் ஒன்று கூடினார்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்ட சிறிலங்கா ஐக்கிய கிராம அதிகாரிகள் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சி கடந்த 1995.01.14 சனிக்கிழமை மன்னார் உதவி அரச அதிபர் அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. தலைவர் ஜனாப் ஏ.ஆர். அலிகான் தலைமைதாங்க, நிகழ்ச்சிகளை திரு.எஸ்.ஏ. பெர்னாண்டோ அவர்கள் தொகுத்தளித்தார்.

பிரதம அதிதிகளாக அரச அதிபர் திரு.கே.கணேஷ், மேலதிக அரச அதிபர் திரு.எஸ்.எம் குரூஸ் உதவி அரச அதிபர். செல்வி ச.கணபதிப்பிள்ளை, காணி அதிகாரி எஸ்.ஏ மார்க், அலுவலக மேலாளர் செல்வி ஏ.அர். ஐயாப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

புதிதாக அரச அதிபராக பதவியை பொறுப்பேற்கவிருக்கும் மேலதிக அரச அதிபர் திரு.எஸ்.எம்.குரூஸ் அவர்கள் பேசுகையில், மாவட்ட நிர்வாகத்தில் பிரதான இடத்தை வகிக்கும் கிராம அதிகாரிகள்தான் எமது கண்களும் காதுகளும் என பாராட்டுரை வழங்கினார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# முல்லைத்தீவில் புலிகளின் ஆயுதக் கப்பல்

சற்றுத் தாமதமாக வெளியே வந்திருக்கும் செய்தி இது.

எதிர்க்கட்சி தலைவரும், ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளருமான காமினி திசநாயக்கா 23.09.94 அன்று நள்ளிரவு கொல்லப்பட்டார்.

இலங்கை அரசின் முப்படைகளும் கொழும்பை நோக்கி தம் கண்களை திருப்பிக் கொண்டன.

24ம் திகதி நள்ளிரவு முல்லைத்தீவு கடலில் புலிகளுக்கு சொந்தமான கப்பல் வந்து நங்கூரமிட்டு நின்றது.

இந்திய கடல் எல்லைக்குள் பிரவேசிக்காமல் முல்லைத்தீவு கடலுக்குள் பிரவேசிக்குமாறு பிரபா உத்தர விட்டிருந்தார்.

இலங்கை கடற்படையினர் மீது தொடர்ச்சியாக நடைபெற்ற தாக்குதல்களும் இக் கப்பலின் வருகையை முன்னிட்டே நடத்தப்பட்டதாக கூறுவதை மறுக்கமுடியாமல் இருக்கிறது.

19.09.94 அன்று சாகரவர்த்தன கப்பல் மீது கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டது.

கடற்படையினரின் தீவிர ரோந்து நடவடிக்கையை கட்டுப்படுத்தவே கடலில் தொடர்ச்சியான தற்கொலைத் தாக்குதல்கள் திட்டமிட்டு நடத்தப்பட்டதாக கருத இடமுண்டு.

பாதையை சுத்தப்படுத்தி தமது கப்பலை கொண்டுவருவதற்கான உத்தி என்று அவற்றை கூற முடியும்.

புலிகளின் யாழ் மாவட்ட தளபதி கிட்டு உட்பட 10 புலிகள் ஆயுதங்களோடு வந்த கப்பல், 1993ம் ஆண்டு ஜனவரி மாதம் இந்திய கடற்படையால் தடுக்கப்பட்டது.

கப்பலோடு சேர்ந்து தம்மையும்

**— நாரதர் —**

அழித்துக்கொண்டனர், கிட்டு உட்பட 10 புலிகள்.

அந்த கப்பலோடு சேர்ந்து பெருந்தொகையான ஆயுதங்களை புலிகள் இழந்திருந்தனர்.

எனவே - மீண்டும் அவ்வாறான ஒரு இழப்பை சந்திக்காத வகையில் மிகத் திட்டமிட்டு செயற்பட்டார்கள் புலிகள்.

கடற்பாதையில் கடற்படையின் ரோந்தை கட்டுப்படுத்துவது:

காமினி கொலைச் சம்பவத்தை யடுத்து முப்படைகளும் தமது கவனத்தை தலைநகரில் வைத்திருக்கும் போது கப்பலை உள்ளே அழைப்பது என்பதுதான் திட்டம்.

காமினி கொலைச் செய்திக்காக காத்திருந்தது புலிகளது தலைமை.

புலிகளது தலைமையின் உத்தரவுக்காக இந்திய -இலங்கை கடற்பரப்புகளுக்கு வெளியே காத்திருந்தது புலிகளது கப்பல்.

காமினி கொலை நிறைவேற்றப்பட்ட செய்தியறிந்தவுடன் தொலைத் தொடர்பு சாதனம் மூலம் புலிகளது தலைமை, கப்பல் உள்ளே வரலாம் என்ற உத்தரவை வழங்கியது.

24ம் திகதி நள்ளிரவு முல்லைத்தீவு கடலில் வந்து நங்கூரமிட்ட கப்பலுக்கு கடற்புலிகளின் முப்பதுக்கு மேற்பட்ட அதிவேக விசைப்படகுகள் வியூகம் அமைத்து பாதுகாப்பு வழங்கின.

தயார் நிலையில் கடற்கரும்புலிகள் வெடி மருந்து நிரப்பிய படகுகளோடு காத்து நின்றனர்.

கடற்படைக் கப்பல் எதுவும் மோப்பம் பிடித்து வந்தால் வெடி மருந்து நிரப்பிய படகுகளோடு சென்று கரும்புலிகள் தற்கொலை தாக்குதல் நடத்தி அழிப்பது என்று தீர்மானிக்கப் பட்டிருந்தது.

முல்லைத்தீவில் உள்ள புலிகளது துணைப்படையைச் சேர்ந்தவர்கள் 40 படகுகளில் ஏற்றப்பட்டனர்.

பொது மக்களுக்கு ஓரளவு ஆயுதப் பயிற்சி கொடுத்து போர் நடவடிக்கையில் தமக்கு உதவும் குழுக்களாக புலிகள் உருவாக்கியிருக்கிறார்கள்.

இவர்களே துணைப்படை என்று அழைக்கப்படுகிறார்கள். 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் கூட துணைப்படையில் சேர்க்கப்படுகிறார்கள்.

அந்த துணைப்படையினர்தான் கப்பலில் இருந்து ஆயுதப் பொதிகளை இறக்குவதற்காக படகுகளில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

கப்பலில் இருந்து துரித வேகத்தில் இறக்கப்பட்ட ஆயுதப் பொதிகள் படகுகளில் ஏற்றப்பட்டு கரைக்கு கொண்டுவரப்பட்டன.

எவ்வகையான ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் கப்பலில் இருந்து இறக்கப் பட்டன என்பது எவருக்கும் தெரியாது.

அனைத்தும் பொதிகளாக கட்டப்பட்டிருந்தன. பாரம் மட்டும் அதிகமாக இருந்தது என்று இறக்குவதில் பங்கு கொண்டவர்கள் சிலர் தெரிவித்தனர்.

பணி முடிய கப்பல் திரும்பிச் சென்று விட்டது.

ஆனால், இந்தச் செய்தி எப்படியோ கசிந்து-திரிவுபட்டு பாதுகாப்பு படையினரின் காதுகளை எட்டிவிட்டது.

அதனால்தான் புலிகளது ஆயுதக் கப்பல் ஒன்று வந்துகொண்டிருப்பதாக படை வட்டாரங்கள் பத்திரிகைகளுக்குத் தெரிவித்தன.

ஆயுதக் கப்பல் வந்து சென்ற பின்னர் தான், இனித்தான் கப்பல் வரப்போகிறது என்று படை வட்டாரங்கள் கடலை கவனித்துக் கொண்டிருந்தன.

முகாம் தாக்குதல்கள் மூலம் பெருமளவான ஆயுதங்களை புலிகள் சேகரித்துள்ளார்கள்.

ஆனாலும், ஆயுதங்களுக்குரிய ரவைகள், மற்றும் வெடிமருந்துகள் போன்றவற்றை வெளியே விலைகொடுத்து பெறும் தேவை புலிகளுக்கு இருக்கிறது.

புலிகளது தாக்குதல் நடவடிக்கைகளில் மிக அதிகமான ரவைகள் பயன்படுத்தப் படுகின்றன.

கெரில்லாத் தாக்குதல்களில் எதிரியை அச்சமடையச் செய்ய துப்பாக்கிகள் இடைவிடாமல் முழங்கி எழுப்பும் ஓசையும் ஒரு முக்கியமான அம்சமாகும்.

துப்பாக்கி ரவைகள் பற்றாக்குறையாக இருந்தால் அது சாத்தியமில்லை.

ஆனால், புலிகள் போதியளவு ரவைகளையும், மோட்டார் குண்டுகளையும், வெடி மருந்துகளையும் சேகரித்து வைத்திருக்கிறார்கள்.

இரண்டு வழிகளில் அவை பெறப் படுகின்றன.

ஒன்று, படையினர் மீதான கெரில்லா தாக்குதல் மூலமாக.

இரண்டு, சர்வதேச ஆயுத வியாபாரிகளிடம் பணம் கொடுத்து பெறுவதன் மூலமாக.

யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினரால் குறும்படங்கள் தயாரிக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம் ஸ்ரீதர் திரையரங்கிலும் மற்றும் வெளிநாடுகளிலும் அவை திரையிடப்படுகின்றன.

இந்தியப் படையோடும், இலங்கைப் படையோடும் நடைபெற்ற மோதல்களும் அப்படங்களில் சித்தரிக்கப்படுகின்றன.

அவை தத்ரூபமாக அமைவதற்காக மோதல் காட்சிகளில் துப்பாக்கிக் குண்டுகள், மற்றும் மோட்டார் குண்டுகள் என்பவை தாராளமாக பயன்படுத்தப்படுகின்றன.

தமது கையிருப்பு குறித்துப் புலிகள் கவலைப்படத்தக்க நிலை இல்லை என்பதை தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

சர்வதேச கறுப்புச் சந்தையில் ஆயுதம் வாங்கப் பணம் தேவை.

தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் விதிக்கும் வரிகள், மண்மீட்பு நிதி, வர்த்தகர்களிடமிருந்து பெறும் நிதி, மற்றும் வெளிநாடுகளில் உள்ள தமிழர்களிடம் திரட்டும் நிதி போன்றவை அந்தத் தேவையில் ஒரு பகுதியை நிறைவேற்றுகின்றன.

இன்னொரு பகுதி வெளிநாடுகளில் வியாபார முதலீடுகள் மூலம் கிடைக்கிறது.

ஆயுதப் போராட்ட காலத்தில் புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் அமைப்புக்களும் வியாபாரத்தில் ஈடுபட்டன.



இந்தியக் கடல் எல்லைக்குள் செல்லாமல் வருமாறு உத்தரவு

ஆனால், அந்த இயக்கங்களால் பயனைப் பெறமுடியவில்லை. அந்த இயக்கங்கள் சார்பாக வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் வேண்டுமானால் பயனடைந்திருக்கலாம்.

உதாரணமாக, புளொட் அமைப்பின் வியாபாரத் தொடர்புகளை கவனித்தவர்களில் ஒருவர் வாமதேவன். மறைந்த உமா மகேஸ்வரன் அவர்மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார். இப்போது அந்த வாமதேவன் பம்பாயில் பிரபல போதை கடத்தல் மன்னனாக இருக்கிறார். கேட்டால் புளொட் அமைப்போடு கொள்கை முரண்பாடு என்று சொல்லுவார்.

நியாயமாகப் பார்த்தால் அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியபொறுப்பு 'புளொட்' அமைப்புக்கு இருக்கிறது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் சார்பாக வெளிநாட்டுத் தொடர்புகளை கவனிக்க நியமிக்கப் பட்டவர் இலண்டன் பாலா என்று ஒருவர். இவர் இப்போது இலண்டனில் இருந்து தன்னை இயக்கங்களோடு தொடர்பு பட்டவராகக் காட்டிக் கொண்டு வியாபாரத்தில் கொடி கட்டிப் பறக்கிறார்.

ரெலோ அமைப்பும் அதன் தலைவர் சிறீ சபாரத்தினம் உயிரோடு இருந்த காலத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டது. அதனோடு தொடர்புடையவர்கள் இப்போது தனவந்தர்களாகி விட்டார்கள். அவர்களுக்கும் கொள்கை முரண்பாடோ தெரியவில்லை.

ஆனால், பிரபாகரன் வியாபார விடயத்திலும் ஒரு வரையறை, கட்டுப்பாடு என்பவற்றை கைக்கொண்டார். எவரையும் இயக்கம் தனது தேவைகள் கருதி பயன்படுத்தலாம். ஆனால் எவரும் இயக்கத்தை பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது என்பதே பிரபாகரனின் அணுகுமுறையாக இருந்தது.

இயக்கத்தோடு கலக்காத ஒன்றாகவே வியாபார நடவடிக்கைகளை புலிகள் அமைப்பு கையாண்டது.

வியாபாரத்தில் ஈடுபட்டு நிதி திரட்ட முற்பட்ட ஏனைய தமிழ் அமைப்புக்கள் நஷ்டக் கடலில் கவிழ்ந்தன.

புலிகள் கவிழவில்லை. கப்பல் வாங்கினார்கள். அதிலே ஆயுதம் கொண்டுவந்து கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் கொள்கை உறுதியால் வியாபாரம் செய்யவில்லை. புலிகள் கொள்கையில்லாமல் வியாபாரம் செய்து கப்பல் வாங்கினார்கள் என்று எந்தவொரு தமிழ் இயக்கம் சொன்னாலும் அது சத்தியமாக சுத்தப் பொய். விழுந்தும் மீசையில் மண் படவில்லை என்ற கதை! மறுத்தால் ஆதாரங்கள் நிறையவே இருக்கின்றன.

ஆக, ஒரு இலக்கை வரையறுத்து அதனை சென்றடைய கண்ணும் கருத்துமாக காரியமாற்றுதல் என்பதில் தவறு கிடையாது.

## பேச்சு முறிந்தால் போருக்கு தயார்!

ஆனால், அரசோடு பேச்சுவார்த்தையை ஆரம்பித்து, முதல் சுற்று முடிந்த பின்னர் தான் புலிகளது ஆயுதங்கள் வந்திறங்கியுள்ளன.

பேச்சை நடத்திக் கொண்டே போருக்கும் தயாராக புலிகள் இருக்கிறார்கள்.

பேச்சுவார்த்தை மூலம் அரசாங்கம் தாம் எதிர்பார்க்கும் தீர்வைத் தரும் என்று புலிகள் நம்பவில்லை.

பேச்சுவார்த்தை ஆரம்பித்தது முதல் இன்று வரை புலிகளது முக்கிய பிரமுகர்கள் ஆற்றும் உரைகள், வெளியிடும் கருத்துக்களில் அவை தெளிவாகப் புலப்படுகின்றன.

மோதல் தவிர்ப்பு காலகட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் 19 இலட்சம் வரை புலிகள் நிதி திரட்டியுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

சற்று மிகைப் படுத்தி கூறப்படுவதாக எடுத்துக் கொண்டாலும் கூட கிழக்கு மாகாணத்தில் புலிகள் நிதி திரட்டிய விசயம் உண்மையானது.

இதில் படையினருக்கு உள்ள சிக்கல் என்னவென்றால் புலிகள் நிதி திரட்டலில் ஈடுபடுவதை போர்த் தவிர்ப்பு ஒப்பந்த மீறல் என்று சொல்ல முடியாது.

மிரட்டி நிதி கேட்பதாக புகார்வந்தால் மட்டுமே அப்,படிக் கூற முடியும்.

புகார் செய்ய எவருமே துணிய மாட்டார்கள்.

இதே சமயம் "புளொட் அமைப்பினர் மன்னாரில் பாலச்சந்திரன் என்பவரை சுட்டுக் சொலை செய்துவிட்டனர். "அவர் எமது ஆதரவாளர். இது மோதல் தவிர்ப்பு ஒப்பந்த மீறல்" என்று புலிகள் சொல்லியிருக்கிறார்கள்.

ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெந்திக்கும் தமிழீழ அரசியல் பொறுப்பாளர் தமிழ் செல்வன் கடிதம் எழுதியுள்ளார்.

மோதல் தவிர்ப்பு நேரத்தில் பாலசந்திரன் கொல்லப்பட்டமை ஒப்பந்த மீறல் என்பதில் ஐயமில்லை.

இது தொடர்பாக புளொட் தெளிவான விளக்கம் எதனையும் வெளியே தெரிவிக்கவில்லை.

கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் தமது இயக்கத்தில் இருந்து விலத்தப் பட்டவர்கள் என்கிறது புளொட் வட்டாரம்.

பிரேமா அரசோடு பேசிய காலத்தில், அமிர் கொலைக்கு புலிகள் அளித்த விளக்கம் மாதிரி இது இருக்கிறது.

அமிர் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் தமது இயக்கத்தில் இருந்து விலத்தப்பட்டவர்கள் என்றனர் புலிகள்.

இதே சமயம் புளொட் உறுப்பினர்கள் இருவர் தம்மிடம் சரணடைந்துவிட்டதாக 27.1.95 அன்று புலிகள் யாழ்ப்பாணத்தில் அறிவித்தனர்.

சரணடையவில்லை- புலிகள்தான் மோதல் தவிர்ப்பை மீறி அவர்களை பிடித்துச் சென்றார்கள் என்று புளொட் கூறுகிறது.

இதில் எது உண்மை என்பது ஒரு புறமிருக்க புலிகள் விடுத்துள்ள அறிவித்தல் கவனிக்கத்தக்கதாகும்.

அதாவது **சகல தமிழ் அமைப்பு உறுப்பினர்களும் தம்மிடம் சரணடைய வேண்டும்** என்று புலிகளது உளவுப் பிரிவைச் சேர்ந்த பொஸ்கோ கூறியிருக்கிறார்.

**சிறி லங்கா இராணுவத்தோடு சேர்ந்து இயங்கும் தேசவிரோத அமைப்புக்கள்** என்ற பதத்தை அவர் பிரயோகித்துள்ளார்.

இதன் மூலம் இரண்டு விடயங்கள் தெளிவாகின்றன.

ஒன்று, சிறி லங்கா இராணுவத்தோடு புலிகள் கைகுலுக்குவது பிறிதொரு நாட்டு படை என்ற அடிப்படையில் மட்டுமே.

இரண்டு, தமிழீழ கோரிக்கையை கைவிட்டுள்ள ஏனைய தமிழ் அமைப்புக்கள் தேச விரோதமானவை என்ற கொள்கையிலும், அவற்றுடன் விரோதமான போக்கைத் தொடர்வதிலும் புலிகளிடம் எவ்வித மாற்றமும் இல்லை.

(6ம் பக்கம் பார்க்க)

# அதிரடி அய்யாத்துரை



புனிதரை தரிசிக்க யாழிலிருந்து வந்தவர்களில் பாதிப்பேர் திரும்பிப்போகேல்லையாம். பொறுப்பு நின்ற பிதாக்கள் முழிக்கினமாம். பயண முகவர்கள் மாதிரி எல்லை தாண்டி கொண்டு போய் விட்டுப்போட்டு வந்திட்டியளோ எண்டல்லோ ரெண்டு எழுத்தார் கேக்கப் போகினம்.

தனித்துவ தலைவர் தலைமையில் தமிழ் வெகுஜன பிரதிநிதிகள் சபையிலை ஒரே குரலில் பேச முடிவெடுத்தா அது ஒரு நல்ல சகுனம்தான் பாருங்கோ. அதிலையும் வெட்டி ஓடல் விளையாட்டு வராமல் பார்த்துக்கொண்டா சரிதான்.

சமாதான கருத்தரங்கிலை முகம் காட்டி பேசுற சிலர் அதை வைச்சே சில பதவிகளுக்கு குறிவைக்கினமாம். மொஸ்கோவிலை மழை பெய்தா கொழும்பிலை குடை பிடிச்ச ஒரு எழுத்தாளர் இப்ப மொஸ்கோவிலை சிவப்பு அலை ஓய்ந்தபடியா வேறு வேலை தேட ஆரம்பிச்சிருக்கிறாராம். அரச பத்திரிகை ஒண்டிலை ஆசிரியர் பதவிக்கு கண் போடுறாராம். ஞானம் பிறந்தது உதுக்குத்தானாக்கும்.

எங்கடை வானொலி ரெண்டு எழுத்தாரை பற்றி நல்லவிதமா சொன்னாலும் ரெண்டு எழுத்தார் விடுற மாதிரி இல்லை. போன கிழமை யாழ்ப்பாணத்திலை கொழும்பு வானொலியைப் பற்றி கிழி கிழியெண்டு கிழிச்சிருக்கினம். தங்களுக்கு எதிரா பிரசாரம் நடக்குதாம்.

தொலைக்காட்சிகளில் இப்பவெல்லாம் அடிக்கடி தமிழ் படங்கள் போடுகினம். சனத்துக்கு சந்தோசம்தான். ஆனால் ஒரு பெரும் குறை. ஒரு நிலையத்தார் போட்ட படத்தைத்தான் மறு நிலையத்தாரும் போடுகினம். அது மட்டுமில்லை ஒரே படத்தையே திருப்பி திருப்பியும் போடுகினம். போன பொங்கலுக்கு பார்த்த பணக்காரன் படத்தை இந்தப் பொங்கலுக்கும் அதே நிலையத்தார் திருப்பிப் போட்டவையல்லோ? இந்தக் குறையை நிவர்த்தி செய்தா படு சோக்கா இருக்குமல்லோ!

தனியார் வானொலியில் 'செருப்பால் அடிப்பேன்' எண்ட மாதிரியான வீரவசனமெல்லாம் கேட்கக்கூடியதா இருக்குது. 'ராமா'... இது என்ன சோதனை?! உன் மகளை தா என்று 'நேயர்' கடிதம் எழுதுகிறார். கடிதத்தை படித்துவிட்டு எனக்கு கை கால் இருக்கிறது என்று மிரட்டுகிறார் நிகழ்ச்சியாளர். தனிப்பட்ட சமாச்சாரங்களை வெளியே வைத்துக்கொள்ளலாம் அல்லோ.

முதலிலை கண்டும் காணாத மாதிரித்தான் பச்சை உடையினர் இருந்தவையாம். எங்கே தங்களுக்கே போட்டியா ரெண்டு எழுத்தார் நிர்வாகம் நடத்திப்போடுவினமோ எண்டுதான் இப்ப திடுக்கிட்டு விழிச்சிருக்கினமாம்.

வடக்கு-கிழக்கு சபையிலை உள்ள அதிகாரமுள்ள ஒருத்தர் தன் வீட்டுக்கு பொதுப் பணத்தில் கட்டியுள்ள சுற்று மதில் விவகாரத்திலை சத்துமாத்தாம். பல இலட்சம் செலவிலை இவருக்கு ஏன் சுற்று மதில்? ஜனாதிபதி மாளிகைக்குக்கூட உப்பிடி மதில் கட்டேல்லை எண்டு சனம் முணுமுணுக்குதாம். மார்க்கண்டேயரை யமனிடம் இருந்து சிவபெருமான் காப்பாற்றினவர். நவீன மார்க்கண்டேயர்கள் பெருமானைவிட பெரு மதில்களை நம்புகினமாக்கும்.

மேலே உள்ளவரின் மாளிகையில் வெடிமருந்து இருந்த விவகாரத்தை எதிரணித் தலைவர் கரிசனமாக விசாரிச்சவராம். அலட்சியம் கூடாது கவனம் தேவை எண்டும் சொன்னவராம்.

சித்தர்களிலை ஒருவர் பாம்பாட்டி சித்தர். அந்த மனுசனுக்கு பொண்களிலை ஏன் கோபம் எண்டு தெரியேல்லை. பாடுறார் கேளுங்கோ.

"செண்டுமுலை வண்டுவிழி கொண்ட தோகையைச்
சித்தம்பால் விழுங்கியே சீயென்று ஒறுத்தோம்.
குண்டு கட்டெ ருமையேறுங் கூற்று பருந்தைக்
கொன்று தின்றுவிட்டோம் நாம் என்று ஆடு பாம்பே"

என்னோடு கோபிக்க வேண்டாம். பாம்பாட்டி சித்தரை திட்டுங்கோ.

# 13 அரசியல் தொடர்

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### அற்புதன் எழுதுவது

# பிரபாமீது அமுதரின் நம்பிக்கை!


பிரிகேடியர் வீரதுங்க

### தொண்டர்கள் பாய்ந்தனர்

மாநாட்டில் துண்டுப் பிரசுரம் விநியோகித்த இளைஞர்களை தமக்கு எதிரானவர்கள் என்றே அமிர் தீர்மானித்து விட்டார்.

"தொண்டர்களே என்ன செய்கிறீர்கள்?" என்று அமுதர் ஒலிபெருக்கியில் கேட்டது தனது ஆதரவாளர்களை உசுப்பிவிடுவதற்காகத்தான்.

கூட்டத்தின் மத்தியில் இருந்து ஒரு தொண்டர் எழுந்தார். அவரை ஒரு குண்டர் என்றும் வர்ணிக்கலாம். வாட்ட சாட்டமாக இருந்தார்.

பிரசுரம் விநியோகித்து கொண்டிருந்த இளைஞர்களில் ஒருவரை சட்டையில் பிடித்து ஒரு அடிகொடுத்து பிரசுரங்களைப் பறித்தார் அந்த தொண்டர்.

அடி வாங்கியவரின் பெயர் சுந்தரலிங்கம். அவரது மூக்குக் கண்ணாடியும் பறிக்கப்பட்டது.

மேடையில் இருந்து இவற்றையெல்லாம் அவதானித்துக்கொண்டிருந்தார் தளபதி அமிர்.

பிரசுரம் விநியோகித்தவரை தாக்கிய தொண்டரை அழைத்து பேச நினைத்தார்கள் சம்பந்தப்பட்ட இளைஞர்கள்.

கூட்டத்தின் மத்தியில் சென்று அந்த தொண்டரை 'பேசவேண்டும் வாருங்கள்' என்று அழைத்து வந்தார்கள்.

வந்தார் தொண்டர்; பேசவில்லை. பிரசுரம் கொடுத்த இளைஞர்கள்மீது அந்த தொண்டர் தாக்குதலை ஆரம்பித்து வைத்தார்.

கூட்டணி விசுவாசிகளால் சுற்றி வளைத்து தாக்கப்பட்டார்கள் ஊர்வலம் வந்த இளைஞர்கள்.

ஈழ விடுதலை இயக்கத் தலைவர் முத்துக்குமாரசாமி, அதே இயக்கத்தில் இருந்த கோவை நந்தன் போன்றவர்கள் தமது ஆட்கள் தாக்கப்பட்டதை தடுக்கவும் பயந்து கூட்டத்திற்குள் பதுங்கிக்கொண்டார்கள்.

அமுதரின் தொண்டர்களாக தாக்குதல் நடத்தியவர்களில் முக்கியமானவர் பரந்தன் ராஜன்.

இவர்தான் புளொட் அமைப்பில் இருந்து விலகி ஈ.என்.டி.எல்.எவ். என்னும் அமைப்பிற்கு தலைவராக இருந்தவர். சொந்தப் பெயர் ஞானசேகரன்.

ஞானசேகரன் மட்டுமல்ல பிரபாகரன் உட்பட தமிழ் இயக்கங்களது தலைவர்களாகவும், முக்கியமானவர்களாகவும் இருந்தவர்கள், இருப்பவர்கள் பலரும் ஆரம்பத்தில் அமுதரின் விசுவாசிகளாகவே இருந்தார்கள்.

### வாயடைக்கும் தந்திரம்

ஆவரங்கால் மாநாட்டில் தமிழீழ தேசிய மன்றத்தை கூட்டுவதற்கான ஒரு குழு அமைக்கப்பட்டது.

கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒழுக்கக் கோர்வை தயாரிக்கவும் ஒரு குழு நியமிக்கப்பட்டது.

இந்த இரண்டு குழுக்களிலுமே வண்ணை ஆனந்தன் இடம்பெற்றார்.

இது ஒரு சிறந்த தந்திரம். சில கருத்துக்கள் உரமாக முன்வைக்கப்படும் போது அதனை ஏற்பதுபோல நடிப்பது. ஆனால் நிறைவேற்றாமல் இருந்து விடுவது.

கருத்து முன்வைப்போரை சமாளிக்க ஒரு கமிட்டி அமைத்து அந்த் கமிட்டியில் அவர்களையும் உறுப்பினர்களாக போட்டுவிடுவது.

"தமிழீழ தேசிய மன்றத்தை கூட்டு" என்றார் வண்ணை ஆனந்தன். அதனால் அந்த மன்றத்தை கூட்டும் குழுவில் அவரும் ஒருவராக இருப்பதால் இனி சத்தம் போடமாட்டார்.

இளைஞர்களை தந்திரமாக சமாளிக்க தலைவர்கள் கையாண்ட தந்திரங்களில் இதுவும் ஒன்று.

வண்ணை ஆனந்தன் பின்னர் வாயே திறக்கவில்லை. சர்வதேச பிரசாரம் நடத்த வென்று ஜெர்மனுக்கு சென்று அங்கு நிரந்தரமாக தங்கிவிட்டார்.

✓ மரம் பழுத்தால் வெளவால் வரும் என்றவர் பழுக்க முன்னரே பறந்துவிட்டார்.

### இளைஞர் பேரவையில் பிளவு

இளைஞர்களை கட்டப்படுத்த தளபதி அமிர் அடிக்கடி கூறும் வார்த்தை ஒன்று மிகப் பிரபலமானது.

**"போர் களத்தில் தளபதியின் கட்டுப் பாட்டை மீறி முன்னால் ஓடுபவனுக்குத்தான் முதல் சூடு!"**

மிக உண்மையான கருத்துத்தான்! ஆனால் 1977ல் ஜெயவர்த்தனா அரசாங்கம் பதவிக்கு வந்தது. தளபதி மௌனமானார்.

ஜே.ஆர்.புத்திசாலி. புன்னகை செய்தே எதிரிகளை நிராயுதபாணிகளாக்கிவிடுவார்.

1977இன் பின்னர் பொதுமக்கள் பங்கு கொள்ளும் அகிம்சை போர்க்களம் எதற்கும் தளபதி அமிர் அழைப்பு விடுக்கவேயில்லை. அரசுக்கு அறிவித்துவிட்டு சுவரொட்டி ஒட்டி துண்டுப் பிரசுரம் விநியோகித்துக் கைதாகும் போராட்டங்கள் மட்டுமே ✓நடத்தினார்கள்.

# வீரதுங்காவுக்கு ஜே.ஆர். போட்ட உத்தரவு

'போர்க்களத்தில்தானே முன்னால் ஓடக்கூடாது போர்க்களமே இல்லையே, பின்னர் தளபதியின் கட்டளைக்கு எங்கே இடம்?'

என்று நினைத்தார்களோ என்னவோ 78ம் ஆண்டில் யாழ் முற்றவெளியில் தமிழ் இளைஞர் பேரவை ஒரு கூட்டம் நடத்தியது.

அதற்கு தலைமை தாங்கியவர் சந்ததியார்.

இவர்தான் பின்னர் புளொட் அமைப்பின் தலைவர்களில் ஒருவராக இருந்து உள் முரண்பாட்டால் கொல்லப்பட்டவர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமை மீது நம்பிக்கையீனம் தெரிவித்து கூட்டத்தில் பேசப்பட்டது.

"தேர்தலுக்காகவே 'தமிழ் ஈழக் கோசம்' தலைவர்களுக்கு தேவைப்படுகிறது."

என்றெல்லாம் கூட்டத்தில் பேசியவர்கள் உணர்ச்சி வசப்பட்டார்கள்.

"தமிழ் இளைஞர் பேரவை இனி தனி வழியே செல்லும்" என்றார் சந்ததியார்.

தமிழ் இளைஞர் பேரவை தலைவராக இருந்தவர் மாவை சேனாதிராஜா.

அமுதர் விசுவாசியாக இருந்த மாவை சேனாதிராஜா மூலமாக தமிழ் இளைஞர் பேரவை தனி வழி செல்லாமல் தடுத்தார் அமுதர்.

இளைஞர் பேரவையில் இருந்து சந்ததியார், இரா.வாசுதேவா, இறைகுமாரன், யோகநாதன் போன்ற பலர் வெளியேறினார்கள்.

தமிழ் இளைஞர் பேரவை (விடுதலை அணி) என்ற பெயரில் அவர்கள் தனி அமைப்பாக இயங்கத் தொடங்கினார்கள்.

### கோவை மகேசன்

தந்தை செல்வநாயகத்தால் தமிழரசுக் கட்சிக்காக ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை சுதந்திரன்.

பின்னர் தினபதி ஆசிரியராக இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியையும், ஈழப் போராட்டத்தையும் கண்டித்தும் கேலி செய்தும் எழுதியவர் சிவநாயகம். இவர்தான் முதலில் சுதந்திரன் ஆசிரியராக இருந்தவர்.

அதன் பின்னர் சுதந்திரன் ஆசிரியராக இருந்தவர் கோவை மகேசன்.

கோப்பாய் தொகுதியைச் சேர்ந்த மகேஸ்வர சர்மா தனது பெயரை சுருக்கி கோவை மகேசன் என்று வைத்துக் கொண்டார்.

தமிழரசுக் கட்சியின் ஏடாக இருந்த சுதந்திரன் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் குரலாக மாறியது.

'அரசியல் மடல்' என்ற பெயரில் கோவை மகேசன் எழுதிய கட்டுரைகள் இளைஞர்கள் மத்தியில் எழுச்சி விதைகளை தூவியதை மறுக்க இயலாது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கு தளபதி அமிர், தமிழீழ முதல்வர் அமிர், சிந்தனைச் சிற்பி, கர்மவீரர், எல்லைக்காவலன், உடுப்பிட்டிச் சிங்கம், (பின்னர் திரு சிவசிதம்பரம் நல்லூர் தொகுதியில் தேர்தலில் நின்றதால் உடுப்பிட்டிச் சிங்கம் என்ற பட்டம் வாபஸ் பெறப்பட்டது) உணர்ச்சிக் கவிஞர், அடலேறு போன்ற பட்டங்களை பிரபலமாக்கியதும் சுதந்திரன்தான்.

அமிர்தலிங்கம் கூட்டத்தில் பேசினால் சுதந்திரன் இப்படித்தான் செய்தி போடும்;

**"தமிழீழ முதல்வர் அமிர் முழக்கம்!"**

மு.சிவசிதம்பரம் அரசைக் கண்டித்தால் அந்த வார சுதந்திரன் செய்தி இப்படி வரும்;

**"உடுப்பிட்டி சிங்கம் சிறீலங்கா அரசுக்கு எச்சரிக்கை."**

அதேபோல தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் எதிரிகளை அக்குவேறு ஆணிவேறாக கிழிப்பதிலும் சுதந்திரன் முன்னால் நின்றது.

### சுதந்திரன் பாய்ச்சல்

அந்த சுதந்திரன் பத்திரிகைதான் 1977இன் பின்னர் கூட்டணி தலைவர்களது போக்கு சரியில்லை என்று எழுதத் தொடங்கியது.

கூட்டணித் தலைவர்கள் ஜே.ஆர். பின்னால் சென்று சுதந்திரப் பயிரை வாட வைக்கிறார்கள் என்று வருத்தப்பட்டார் கோவை மகேசன்.

தனது அரசியல் மடலில் கோவை மகேசன் வருத்தத்தோடு நினைவூட்டிய பாரதியார் பாடல் வரிகள் இவை:

"தண்ணீர் விட்டோ வளர்த்தோம்?
சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம்; கருகத்
திருவுளமோ?"

இவற்றையெல்லாம் கூட்டணித் தலைவர்கள் கண்டுகொள்ளவேயில்லை.

அமுதர் என்ன சளைத்தவரா? திருவள்ளுவரை உதவிக்கு அழைத்து, **"மாற்றான் வலியும் தன் வலியும் அறிந்தே போர் செய்யவேண்டும். திருவள்ளுவரே சொல்லியிருக்கிறார். தம்பிமாருக்கு தெரியவில்லையே"** என்றார்.

இளைஞர்களது கோபத்தை அமுதர் அலட்சியம் செய்தமைக்கு ஒரு காரணம் இருக்கிறது.

புலிகள் இயக்கம் தனது கையை விட்டுப் போகாது என்று அமிர் நம்பியிருந்தார்.

அப்போது தம்பி, கரிகாலன் போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டவர் பிரபாகரன்.

தம்பியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம் என்று நினைத்தார் அமிர்.

அதனால் பிரபாகரனுடன் நெருக்கமான தொடர்புகளையும் வைத்திருந்தார்.

### அடக்குமுறைச் சட்டம்

இதே நேரத்தில் 1979ம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா படு மோசமான ஒரு சட்டத்தை கொண்டுவந்தார்.

78ம் ஆண்டு ஜே.ஆர்.அரசு கொண்டு வந்த புலிகள் தடைச் சட்டத்தை விடவும் மிகக் கடுமையான தடைச் சட்டம் அது.

1979ம் ஆண்டு ஜுலை 29ம் திகதி அமுலுக்கு கொண்டுவரப்பட்ட அச்சட்டம் 'பயங்கரவாத தடைச் சட்டம்' என்று அறிமுகப்படுத்தப்பட்டது.

ஜுரிமார் இல்லாமல் வழக்கு விசாரணை நடத்த அந்தச் சட்டம் அனுமதித்தது.

18 மாத காலத்திற்கு சந்தேக நபர் ஒருவரை வெளியுலக தொடர்பே இல்லாமல் சிறையில் வைத்திருக்கவும் வழி செய்தது.

சித்திரவதை மூலம் பெறப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களை சான்றாக பாவிக்க நீதிமன்றத்திற்கு அனுமதியளித்தது.

எவர் வீட்டுக்குள் புகுந்தும் தேடுதல் நடத்தலாம். எவரையும் கைது செய்யலாம்.

சுருக்கமாக சொன்னால் தமிழ் பேசும் மக்களது போராட்டத்தை ஈவிரக்கமற்ற முறையில் கொலை செய்ய ஜே.ஆர். கொண்டுவந்த சட்டம் அது.

ஆயுதப் படைகளது கரங்களை சுதந்திரமாக்கி வடக்கில் ஒரு வேட்டைக்கான மறைமுக அனுமதி வழங்கப்பட்டது.



பயங்கரவாத தடைச் சட்டத்தை நிறைவேற்றிய சூட்டோடு சூடாக யாழ்ப்பாணத்தில் அவசரகால நிலையை அரசு பிரகடனம் செய்தது.

பிரிகேடியர் வீரதுங்காவை அழைத்தார் ஜே.ஆர்.

**"யாழ் மாவட்ட பாதுகாப்பு படைகளின் முழுப் பொறுப்பும் உங்களுக்கு வழங்கப் படுகிறது. எதிர்வரும் டிசம்பர் மாதம் 31ம் திகதிக்கு (1979) முன்னர் நாட்டிலிருந்து, குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து வன்செயல் ஒழித்துக்கட்டப்படவேண்டும்"**

உத்தரவிட்டார் முப்படைத் தளபதியான ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா.

யாழ்ப்பாணம் சென்ற பிரிகேடியர் வீரதுங்கா சட்டத்தின் பலத்துடன் பயங்கரவாத ஆட்சி ஒன்றை நடத்திக்காட்டினார்.



சித்திரவதை முகாமில் எடுக்கப்பட்டு அரசின் மனித உரிமை மீறலுக்கு சர்வதேச அரங்கில் சாட்சியான புகைப்படம்.

### இன்பம்-செல்வம் கொலை

**வன்செயல் ஒழிக்கப்பட வேண்டும்!**

**யாழ். கமாண்டருக்கு உத்தரவு!!**

**அரசின் சகல துணைவளங்களை பயன்படுத்த ஜனாதிபதி ஆணை**

(நமது நிருபர்)

எதிர்வரும் டிசம்பர் 31-ம் திகதிக்கு முன்னர், நாட்டிலிருந்து, குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வன்செயல் அச்சுறுத்தற் சம்பவங்கள் அனைத்தையும் ஒழித்துக்கட்டுமாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, யாழ். [illegible] பாதுகாப்பு படைகளின் ஏக கமாண்டராக நியமிக்கப்பட்டிருக்கும் பிரிகேடியர் [illegible] உத்தரவிட்டுள்ளார்.

1979இல் வெளியான பத்திரிகைச் செய்தி

நூற்றுக் கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இன்பம்-செல்வம் உட்பட பல இளைஞர்கள் சித்திரவதை செய்யப்பட்டு பிணமாக வீதியில் வீசியெறியப்பட்டனர்.

யாழ் குடாநாடு இராணுவ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கண்டித்தன. ஜே.ஆர். கண்டுகொள்ளவே யில்லை.

அடக்குவதாக நினைத்துக்கொண்டு தமிழ் இளைஞர்களை ஆயுதப் போராட்டத்தை நோக்கி தட்டி எழுப்பினார் ஜே.ஆர். ஜெயவர்த்தனா.

இயக்கங்களது முக்கிய தலைவர்கள் தமிழ் நாட்டுக்குத் தப்பிச் சென்றனர்.

1979-80 காலப் பகுதியில் ஆயுத மேந்திய இயக்க நடவடிக்கைகள் சற்றே ஓய்ந்திருந்தன.

1980இன் முற்பகுதியில் புலிகள் இயக்கத்திற்குள் ஏற்பட்ட பிளவும் அதற்கு ஒரு காரணம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குள் ஏற்பட்ட முதல் பிளவு அதுதான்.

ஐந்துபேர் கொண்ட செயற்குழுவே 1980இன் முற்பகுதிவரை புலிகளது தலைமையாக இருந்தது.

### பிரபாவின் வரையறைகள்

அந்த செயற்குழுவின் தலைவராக உமா மகேஸ்வரன் இருந்தார். இராணுவ தளபதியாகவும் செயற்குழு உறுப்பினராகவும் பிரபாகரன் இருந்தார்.

இதனை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். பிரபாகரன் சில கட்டுப்பாட்டு விதிகள், வரையறைகளை வகுத்தே செயற்பட்டு வந்தார்.

புகைபிடிக்கக்கூடாது- காதலிக்கக் கூடாது. வீண் செலவுகள் கூடாது, இரகசியங்களை வெளியிடக் கூடாது, கட்டுப்பாட்டை மீறக்கூடாது போன்ற விடயங்களை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார் பிரபாகரன்.

ஆனால், உமா மகேஸ்வரன், நாகராசா போன்றவர்கள் இவற்றை விரும்பவில்லை.

இதே சமயம் ஊர்மிளாதேவி புலிகள் அமைப்பின் தீவிர உறுப்பினராக செயற்பட்டுக்கொண்டிருந்தார்.

ஊர்மிளாதேவி விடயத்தில் ஒரு பிரச்சனை ஆரம்பமானது.

(தொடர்ந்து வரும்)

### (எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி)

அது மட்டுமல்லாமல் மோதல் தவிர்ப்பை பயன்படுத்தி ஏனைய தமிழ் அமைப்புக்களை பலவீனப்படுத்தும் அல்லது செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையிலும் புலிகள் கவனம் செலுத்துகிறார்கள்.

அரசாங்கத்தோடு நட்பைப் பேண முடியும்; அரசாங்கத்தோடு இணைந்து செயல்பட முடியும் என்ற நம்பிக்கை புலிகளுக்கு இருந்தால் அரசாங்கத்தோடு இணைந்து நிற்கும் அமைப்புக்களை 'தேச விரோதிகள்' என்று சொல்லமாட்டார்கள்.

ஏனெனில் நாளை தாமும் அரசோடு இணைந்து செயற்பட வேண்டியிருக்கும் என்று நினைப்பார்கள்.

ஆக, மொத்தத்தில் புலிகளது நடைமுறைகள் அவர்கள் தமது கொள்கைகள் எதில் இருந்தும் சற்றும் இறங்காமல் இருப்பதை தெளிவுபடுத்துகின்றன.

போருக்கு சாவு மணி என்பது ஒரு கனவோ என்று நினைத்து வருந்த காரணங்கள் இல்லாமல் இல்லை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# இளம்படை வீரர்களுக்கு அரசியல் உபதேசம்!

அலசுவது – இராஜதந்திரி

## உரிய நேரத்தில் சந்திரிகாவின் சரியான நடவடிக்கை!!

## “போரில் தொடர்ந்து ஈடுபட முடியாது”

### “மக்கள் அமைதியை ஏற்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்”

### எத்தகைய தடைகள் ஏற்படினும் அரசியல் தீர்வு முயற்சிகளை வாபஸ் பெறப் போவதில்லை சந்திரிகா



இலங்கையின் பிரபல பாதுகாப்புத்துறை சார்ந்த உயர்கல்விப்பீடமாக கொழும்பு-இரத்மலானையில் அமைந்துள்ள கொத்தலாவல பாதுகாப்புப் பயிற்சிக் கல்லூரி விளங்குகின்றது. (Kottalawela Defence Accademy)

முன்னாள் இலங்கைப் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலயின் பெயரைத் தாங்கியதாக, அவரது வாசஸ்தலத்தில் இந்த இளம் பாதுகாப்புத்துறை அதிகாரிகளைப் பயிற்றுவிக்கும் கல்லூரி அமைந்துள்ளது.

பிரிட்டிஷாரின் ஆட்சிக்காலத்தில் ஓர் இராணுவ அதிகாரியாகக் கடமையாற்றி பின்னர் அரசியலில் பிரவேசித்து இலங்கையின் பிரதம மந்திரியாகப் பதவி வகித்தவரே சேர் ஜோன் கொத்தலாவல.

கண்டிப்பும், அதே வேளை ஒரு நல்ல கனவானாகவும் அவர் இருந்தார் என்று அவரோடு நெருங்கிப் பழகிய பலர் அவர் குறித்த கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளனர்.

இன்று ஏறத்தாழ ஒரு தசாப்த காலமாக இரத்மலானையிலுள்ள கொத்தலாவல பாதுகாப்புப் பயிற்சி கல்லூரி இயங்கி வருகின்றது. இலங்கையின் முப்படைகளையும் சேர்ந்த இளம் பயிலுநர் அதிகாரிகளுக்கு பாதுகாப்புத்துறை சார்ந்த கல்வி விடயங்களில் போதனைகளையும் பயிற்சிகளையும் வழங்கி ஒரு பல்கலைக் கழக பட்டதாரிக்கு நிகரான அந்தஸ்துடன் இப்பயிற்சிக் கல்லூரி இளம் படை அதிகாரிகளை உருவாக்குகின்றது.

இலங்கையின் முப்படைகளும் தத்தமக்கென சாதாராண சிப்பாய் முதற்கொண்டு அதிகாரிகள் வரையிலான பயிற்சிகளை வழங்க பயிற்சிக் கல்லூரிகளைக் கொண்டுள்ளன.

மலையகத்தில் தியத்தலாவப் பகுதியில் அமைந்துள்ள இராணுவப் பயிற்சிக் கல்லூரி இலங்கையில் மிகப் பழமை மிக்க தொன்றாகும்.

பிரிட்டிஷ் காலத்தைச் சேர்ந்தது. பிரிட்டிஷ் படை நிபுணர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, நன்கு திட்டமிடப்பட்ட முறையில் உருவாக்கப்பட்ட ஒரு பயிற்சித் தலமாகவே தியத்தலாவ இராணுவ பயிற்சி மையம் காணப்படுகின்றது.

இப்பயிற்சி மையத்தின் ஆரம்பகாலப்பகுதியில் பிரிட்டிஷ் அதிகாரிகளே தமது இராணுவ பாரம்பரியங்களுக்கமைய தியத்தலாவயில் பயிற்சிகளை வழங்கி படை வீரர்களையும், அதிகாரிகளையும் உருவாக்கியிருந்தனர்.

எனவே இலங்கையில் முப் படையினரதும் பாரம்பரியம் மற்றும் நடைமுறைகள் என்பன பிரிட்டிஷ் படையினரைத் தழுவியவையாகவே இருந்து வரக் காணப்பட்டன.

இலங்கையில் இராணுவ அதிகாரிகளாக தெரிவு செய்யப்பட்டோர் பிரிட்டனுக்கும் உயர் கல்விக்காக அனுப்பி வைக்கப்படுவதுண்டு.

பிரிட்டனில் உள்ள மிகப் பழமைவாய்ந்த இராணுவப் பயிற்சி கல்லூரியாக சான்ட்ஹேர்ஸ்ட் Sandhurst விளங்குகின்றது.



சான்ட்ஹேர்ஸ்ட் இராணுவக் கல்லூரி சர்வதேச கீர்த்தி மிக்க பிரிட்டிஷ் அதிகாரிகளை உருவாக்கியுள்ளது.

இலங்கையின் படை அதிகாரிகளும் சான்ட்ஹேர்ஸ்ட்டில் பயிற்சி பெறும் வாய்ப்புகளைப் பெற்றிருந்தனர்.

பிரிட்டனின் சான்ட்ஹேர்ஸ்ட் இராணுவ பயிற்சிக் கல்லூரிபோல அமெரிக்காவில் வெஸ்ட் பொயின்ட் (West Point) இராணுவப் பயிற்சிக்கல்லூரி, மற்றும் புதுடில்லியில் உள்ள இந்தியாவின் நெஷனல் டிஃபன்ஸ் கல்லூரி (National Defence College) என்பனவும் தத்தமது நாட்டின் பாரம்பரியங்கள், எதிர்பார்ப்புகளுக்கேற்ற வகையில் இராணுவப் பயிற்சிக் கல்லூரிகளைக் கொண்டுள்ளன.

இந்நிலையில் இலங்கையும் கடந்த சுமார் ஒரு தசாப்த காலமாக சுயமாகவே, சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் படைக் கல்லூரியை நடத்திவருகின்றது.

1983ம் ஆண்டு முதற்கொண்டே இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னை ஓர் ஆயுதப் போராட்டமாக வடிவம் பெறத் தொடங்கியது. இதனையடுத்து இலங்கையின் இராணுவ நடவடிக்கைகளும் விஸ்தரிக்கப்படலாயின.

ஆயுதக் கொள்வனவு, ஆட்சேர்ப்பு, மேலதிக பயிற்சி என்று இலங்கையின் முப்படைகளும் விரிவான விஸ்தரிப்புக்குள்ளாகியிருந்தன.

ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் பூரண நிறைவேற்று அதிகாரம், என்பது இராணுவத்தை பலமடையச் செய்வதாகவும், தேசிய பந்தோபஸ்த்து அமைச்சு என்ற புதிய அமைச்சை உருவாக்குவதாகவும் காணப்பட்டது.

மேலதிக பயிற்சி என்ற ரீதியில் பிரிட்டன், இஸ்ரேல் ஆகியனவற்றைச்சேர்ந்த கூலிப்படையினரும் அழைக்கப்பட்டு இலங்கை இராணுவத்தினருக்கு யுத்த நடைமுறைகளில் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இஸ்ரேலிய, பாலஸ்தீன பிரச்னைகள் வலுவடைந்திருந்த காலத்தில் பாலஸ்தீன கெரில்லாக்களின் வதிவிடம் என்று சந்தேகிக்கப்பட்ட கட்டிடங்கள் வீடுகளை சுற்றிவளைத்து அவற்றை நாசமாக்குவதை இஸ்ரேலிய படையினர் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இதே பாணியிலேயே இஸ்ரேலியர்களால் பயிற்சியளிக்கப்பட்ட இலங்கைப்படையினரும் யாழ்குடா நாட்டில் பல வீடுகளை குண்டு வைத்துத் தகர்த்து நாசமாக்கியிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் குருநகர், நாவற்குழி, மற்றும் டச்சுக் கோட்டை என்பவற்றில் இராணுவத்தினர் குடி கொண்டிருந்தவேளை, தமிழ் தீவிரவாதிகள் தங்கியிருந்தார்கள் அல்லது பதுங்கியிருந்தார்கள் என்று காரணங்காட்டி காத்திரமான வீடுகள் பல, குடாநாட்டில் குண்டு வைத்து தகர்க்கப்பட்டிருந்தன.

எனவே இராணுவ ரீதியிலான விஸ்தரிப்பு என்பது வடக்கு, கிழக்கின் ஆயுதப்போராட்டத்தை மேலும் கொழுந்துவிட்டெரியச் செய்வதாகவே காணப்பட்டது.

இதனால் நாளுக்கு நாள் தமது சொத்து, சுகம், சொந்தபந்தங்களை இழந்த தமிழ் இளைஞர்களும், யுவ்திகளும் ஆயுதப்போராட்டத்தில் குதித்து இன்று வடக்கு, கிழக்குப் பிரச்னையை பெருமளவு இராணுவ ரீதியிலான முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கக் காணப்படுகின்றது.

இத்தகைய சூழ்நிலையிலேயே கடந்த வாரம் ஜனவரியில் சந்திரிகா குமாரதுங்க பண்டார நாயக்க இரத்மலான சேர்ஜோன் கொத்தலாவல பாதுகாப்புத்துறைப் பயிற்சிக் கல்லூரியின் வருடாந்த பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றியிருந்தார்.

தமது பயிற்சிகளை முடித்து வெளியேறும் இளம்படை அதிகாரிகள் மத்தியில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உரையாற்றுகையில் இலங்கை இனப் பிரச்னைக்கு சமாதானத் தீர்வொன்று எட்டப் படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற நாள்முதல், சந்திரிகா பத்திரிகையாளர் மகாநாடு, மற்றும் பாராளுமன்றக் கூட்டத்தொடர், வேறு கருத்தரங்குகள், சந்திப்புகளிலெல்லாமே இனப்பிரச்னைத் தீர்வுகுறித்த தமது நோக்கங்களை வெளியிட்டு வந்தார்.

ஆனால் கடந்த வாரம் முதல் தடவையாக அவர் இராணுவத்துறை சார்ந்தவர்கள் மத்தியில் தமது எண்ணக் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

ஒரு நாட்டின் அமைதி, ஒருமைப்பாடு, தன்னாதிக்கம் என்பவற்றுக்கு அச்சுறுத்தல்கள் வரும் போது படையினர் செயலில் இறங்குவது எந்தவொரு நாட்டிலும் இயல்பானதொன்றே.

ஆயினும் இலங்கையில் தற்போது ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக இடம்பெற்றுவரும் உள்நாட்டு யுத்தம், இருவேறு நாடுகளுக்கிடையே இடம் பெறும் மோதல்களை ஒத்ததாகவே காணப்படுகின்றது.

அவ்வப்போது ஆயிரக்கணக்கில் இராணுவ சேவைக்கு ஆள் திரட்டப்படுகின்றது. இளைஞர்களும் 'இளங்கன்று பயமறியாது' என்பதற்கமைய முண்டியடித்துக் கொண்டு படைகளில் சேர்ந்துவிடுகின்றனர்.

ஆனால் ஒரு நாட்டின் ஒருமைப்பாடு, அமைதி, தன்னாதிக்கம் என்பவற்றைப் பேணி ஒரு நிரந்தரஅமைதியைக் கொண்டுவருவதில் இலங்கையின் படைபலவிஸ்தரிப்பு எவ்வளவு தூரம் வெற்றிகண்டுள்ளதென்பதே கேள்விக்குறியாக இருக்கின்றது.

யுத்தங்கள் மோதல்கள் என்று ஏற்பட்டுவிடும் போது நாட்டில் அனைத்துத்தரப்பினருமே பெரும் பர்திப்புக்குள்ளாகி விடுகின்றனர்.

சேர் ஜோன் கொத்தலாவல இராணுவப்பயிற்சிக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் ஒருதடவை இப்படிக் கூறினார்- “இளம் படை அதிகாரிகள் இப்பயிற்சிக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெறுகின்றனர். வகுப்பறைக் குறும்புத்தனங்கள், கூச்சல்கள், கும்மாளங்கள் அனைத்தையும் உடையவர்களாக பயிற்சிக் காலத்தில் மாணவப் பருவத்தைக்கழித்து இறுதியாக சான்றிதழ்களைப் பெற்று வெளியேறுகின்றனர்.

“ஆனால் ஒருசில மாதங்களில் அவ்வாறு வெளியேறிய மாணவர்களில் அநேகரது பெயர்கள் பத்திரிகைகளில் மரண அறித்தல் பட்டியலில் இடம் பெறுகின்றன.

இவ்வாறு மரணச் செய்திகளைப் கேட்டு பயிற்சிக் கல்லூரியின் ஏனைய மாணவர்கள் துக்கத்தில் ஆழ்வதுமுண்டு.

“இந்நிலையில் சில நேரங்களில் விரிவுரை மண்டபங்களில் இம்மாணவர்களை ஆசுவாசப்படுத்தி இராணுவச் சேவையின் யதார்த்தத்தைப் புரிய வைக்க வேண்டியிருக்கும்” என்று அந்த விரிவுரையாளர் கூறியிருந்தார்.

இழப்புகள், அவலங்களால் வரும் சோகங்கள், எத்தரப்பினரையும் பாதிக்கவே செய்கின்றன. யுத்தப் பிரதேசங்களில் தமது உற்றார் உறவினர், சுற்றம் சூழலை இழந்து அப்பாவிப் பொதுமக்களும் துன்பத்தில் துவண்டு மரத்துப்போய் நிற்கின்றனர்.

இந்நிலையில் சேர்ஜோன் கொத்தலாவல இராணுவப் பயிற்சிக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றி இன்றைய வடக்கு-கிழக்குப் பிரச்னையின் யதார்த்த நிலையை ஜனாதிபதி சந்திரிகா தெளிவாக எடுத்துரைத்தார்.

இராணுவப் பயிற்சி, செயற்பாடுகள், போர்த்தந்திரங்கள் என்பன பற்றியே பெரிதும் பயின்றுவரும் அந்த இளம் படை அதிகாரிகளுக்கு தமது நாட்டின் தலைவி மூலமாக கூடவே முப்படைகளினதும் பிரதம தளபதி என்றிருக்கும் ஜனாதிபதி மூலமாக நாட்டின் அரசியல் யதார்த்தம் புரிய வைக்கப்பட்டது ஓர் இடம், தருணம் அறிந்து வெளியிடப்பட்ட விளக்கமாகவே காணப்படுகின்றது:

ஜனாதிபதி சந்திரிகா, கொத்தலாவல கல்லூரியின் இளம் படை அதிகாரிகளிடையே பேசுகையில, “எந்த விலையைக் கொடுத்தும் சமாதானத்தை ஏற்படுத்துவோம். அச் சமாதானம் அனைவரது கௌரவத்தையும் அங்கீகரிப்பதாக இருக்கும். எத்தகைய இடையூறுகள் ஏற்பட்டாலும் சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகள் தொடரும்” என்று குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதியின் இக்கூற்றுக்கள் இலங்கையில் இன்று சமாதானத்தின் தேவை எவ்வளவு இன்றியமையாததாகின்றது என்பதனை போர்ப் பயிற்சி பெற்ற அந்த இளம் அதிகாரிகளுக்கும் நன்கு புலனாக்கியிருக்கும்.

முன்னைய ஆட்சியாளர்கள் சமாதானம், சமரசம் என்பவற்றை தோற்றுவிக்கவேண்டும் என்பவதற்காக மாபெரும் மனித வேள்வியையே நடத்தி வந்தனர்.

ஆனால் கத்தியன்றி, இரத்தமின்றி தகுந்த அரசியல் அணுகுமுறைகள் மூலமாகவும் சமாதானத்தை அடையமுடியுமென்பதனையே அந்த இளம் படையதிகாரிகளுக்கும் ஏனைய படையினருக்கும் இடித்துரைப்பதாக ஜனாதிபதி சந்திரிகாவின் கொத்தலாவல பயிற்சிக் கல்லூரி பட்டமளிப்பு உரை விளங்குகின்றது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# கிரைம் டயறி

தருவது **ரசிகன்**

# கொட்டமடிக்கும் குற்றச்சாமியார்

## தோண்டத் தோண்ட கிளம்பும் பூதங்கள்

கிணறு வெட்டப் பூதம் கிளம்பியதுபோல மாறிவிட்டது போலிச்சாமி பிரேமானந்தா விவகாரம்.

சிறைக் கம்பிகளை எண்ணிக் கொண்டிருக்கும் பிரேமானந்தாமீது இதுவரை குற்றப் பத்திரம் எதுவும் சுமத்தப்படவில்லை.

ஆதாரங்கள் இருந்தும் விசாரணையாளர்கள் ஆறுதலாக இருப்பது ஏன்?

காரணம், மேலிடத்து புள்ளிகளும் போலிச்சாமி விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருப்பதுதான்.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் உயிர்தோழி சசிகலா சாமியின் தீவிர பக்தை.



சிறுவயதில் பிரேமானந்தா

சசிகலாவின் சகோதரர் ஒருவர் சாமியின் வியாபார கூட்டாளி.

தமிழக அமைச்சர்கள் சிலரும் ஆசிரமத்தின் வாடிக்கையாளர்கள்.

விசாரணைகளில் இந்த விவகாரங்கள் வெளிக் கிளம்பியவுடன் விசாரணையாளர்கள் வெளிறிப்போனார்களாம்.

## சட்டம் மிரளுகிறது

சமூக விரோதியைக் கண்டு சட்டம் மிரளுகிறது.



சாந்தா அம்மையார்

உத்தரவிடவேண்டிய பொறுப்பில் இருப்பவர்கள் தாமும் சங்கடத்தில் மாட்டிக் கொள்ள வருமோ என்று சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இதனால் சாமியாரை சிறைக்குள் வைத்தே சமாதியாக்கிவிடவும் ஒரு திட்டம் இருப்பதாக பத்திரிகைகள் சில சந்தேகம் வெளியிட்டுள்ளன.

சாமியை சமாதியாக்கிவிட்டால் சங்கதிகள் அம்பலமாகாது என்று பெரும் புள்ளிகள் சிலர் நினைப்பதாகவும் தகவல்.

சிறையில் சாமியாரைப் போய் பார்த்திருக்கிறாராம், ஒரு பெரும் புள்ளியின் தூதர்.

"நான் மாட்டிக்கொண்டால் விவகாரம் விகாரமாகிவிடும். எல்லாவற்றையும் சொல்லிவிடுவேன்" என்று தூதரிடம் எச்சரிக்கை அனுப்பியிருக்கிறாராம் போலிச்சாமி.

"நான் கள்ளன் என்றால் தமிழக அரசாங்கமே கள்வர் குகை" என்றுவிட்டு ஹா...ஹா...என்று சிறைக்குள் சிரிக்கிறாராம் போலிச்சாமி.

அதிகார பலம், பணபலம் கொண்ட போலிச்சாமியின் விவகாரம் சந்திக்கு வந்தது எப்படி?

ஆராய்ந்ததில் கிடைத்த தகவல்கள் ருசிகரமானவை.

ஆசிரமத்தில் உள்ள பெண்களை தட்டிக்கொடுத்து அனுபவித்துக்கொண்டிருந்தார் போலிச்சாமி.

## குட்டு உடைந்தது ஏன்?

இன்று நேற்றல்ல, ஆசிரமம் தொடங்கிய நாளிலிருந்தே சாமியின் தினசரிப் பணிகளில் ஒன்று சரச சல்லாபம்.

ஆசிரமத்தில் இருந்த பெண்கள் அனைவருக்கும் இது தெரியும்.

சாமியாரின் விவகாரங்களை சந்திக்கு கொண்டுவந்த லதா-சுரேஷ்குமாரி இருவரும் திடீரென்று குட்டை உடைத்தது ஏன்?

எல்லாம் அதிகாரப் போட்டிதான் காரணமாம்.

லதா-சுரேஷ்குமாரி இருவரும் சாமியாரின் விருப்பங்களுக்கு இசைவாக நடந்துகொண்டவர்கள்.

சாமி விரும்பியபோதெல்லாம் விட்டுக் கொடுத்தவர்கள், இடையிலே பிய்த்துக் கொண்டு ஓடியது ஏன்?

காரணம், திவ்யா!

திவ்யா ஆசிரமத்திற்கு வந்தது இடையிலே தான். ஆனால் திவ்யாவைப் பார்த்தவுடன் சாமியாருக்கு பிடித்துப் போய்விட்டது.

காந்த விழிகள். கச்சிதமான உடலமைப்பு. அவள் புன்னகையே ஒரு வலை. சாமியாருக்குப் பிடித்தமான இனிக்கும் இளமை.

திவ்யாவை தன் அந்தரங்க அறைக்கு அழைத்தார் பிரேமானந்தா.

அவருக்கு வேண்டியதை தாராளமாகக் கொடுத்தாள் திவ்யா!

புதுமையான பூவிது என்று பிரேமானந்தா என்னும் வண்டு மயங்கிப்போனது.

பிரேமானந்தாவுக்கு பசி கொஞ்சம் அதிகம். உடல் பசி! தன்னால் முடியாதபோது ஆசிரம பெண்களை தயார்படுத்திக் கொடுத்தாள் திவ்யா.

குருவின் குணம் அறிந்து கொடுக்கும் திவ்யாவை குருவுக்கு மெத்தப் பிடித்தது.

ஏகலைவன் குருவுக்கு கொடுத்தது கட்டை விரலைத்தானே.

திவ்யா தனது குருவுக்கு கொடுத்தது கட்டுடலையல்லவா......!

கிறங்கிப்போன பிரேமானந்தா ஆசிரமத்தின் பொறுப்புக்களை திவ்யாவின் கையில் ஒப்படைத்தார்.

## புனித அன்னை?

பூவாக தேன் கொடுத்தார் திவ்யா! புனித அன்னை என்று பட்டம் கொடுத்தார் பிரேமானந்தா!

பிரேமானந்தாவை தன் மார்போடு அணைத்துக்கொண்டார் திவ்யா! மாதாஜி என்ற அவரை அழைக்க வேண்டும் என்று கட்டளையிட்டார் பிரேமானந்தா.

தொடங்கியது அதிகாரப் போட்டி! சுரேஷ்குமாரிக்கும் லதாவுக்கும் திவ்யா தங்களை அதிகாரம் செய்தது பிடிக்கவில்லை.

"எங்களையுந்தானே அவர் அனுபவித்தார். ஆனால் எங்களுக்கில்லாத சலுகைகளை திவ்யா எப்படி அனுபவிக்கலாம்?"

போட்டி! பொறாமை!! திவ்யாவின் பிடி இறுகியது. ஆசிரம நீலப் படங்களை வெளிநாடுகளுக்கு விநியோகிக்கும் பொறுப்பும் திவ்யாவிடம்.

அதுமட்டுமல்ல, ஆசிரமத்திற்கு வரும் பெரும் புள்ளிகளையும் திவ்யா வளைத்துப் போடத் தொடங்கினார்.

வரம் கொடுக்காவிட்டாலும் இன்ப சரம் தொடுக்கும் திவ்யாவை பெரும் புள்ளிகளுக்கு பிடித்தது.

அப்படிப்பட்ட பெரும் புள்ளிகளில் ஒருவராக இலங்கைத் தொழிலதிபர் பெயரும் உண்டு.

போலிச்சாமியார் இவற்றைக் கண்டும் காணாமல் இருந்தார்.

சாமியாரையும், திவ்யாவையும் பிரிக்க முடியாது என்று தெளிவாகப் புரிந்து கொண்ட போட்டிக்குழு காரியத்தில் இறங்கியது.

இந்தப் போட்டிக்குழுவில் ஒருவர்தான் ஆசிரமத்தில் கொல்லப்பட்ட ரவி.

ஆசிரம இரகசியங்கள் சிலவற்றை சேகரித்துக்கொண்டு வெளியேறி பொலிசாரிடம் விஷயத்தைக் கக்கியது.

தோண்ட தோண்ட பூதம் பூதமாய் வரும் என்று எதிர்பார்க்காத தமிழக முதல்வரும் விசாரணைக்கு உத்தரவிட்டார்.

தனது தோழி சசிகலா குடும்பம் இத்தனை தூரம் சாமிக்கு நெருக்கம் என்பதும் முதல்வருக்கு முதலில் தெரியாது.

## இலட்சியக் கூட்டு?

போலிச் சாமியார் உள்ளே இருக்கும் போது வெளியாகியுள்ள மற்றொரு தகவலும் ருசியானது.

தமிழகத்தின் தலைநகர் சிங்காரச் சென்னை. அங்கே அபிராமபுரம் என்ற பகுதியில் இருக்கிறார் ஒரு பெண் சாமியார். பெயர் சாந்தா அம்பாள்.

அருள்வாக்கு சொல்கிறார் என்ற செய்தியால் இவரைப் பார்க்க பக்தர் கூட்டம் அலைமோதும்.

மூகாம்பிகை கோவில் ஒன்றை உருவாக்கி அருள்வாக்கு சொன்ன சாந்தாவுக்கு பிரேமானந்தாவின் செல்வாக்கு புரிந்தது.

இருவரும் கூட்டணி அமைத்துக் கொண்டார்கள். சாந்தா வயதானவர். அதனால் தன்னிடம் வந்த இளம் பக்தைகளை பிரேமானந்தாவுக்கு விநியோகம் செய்து கூட்டணியை பலப்படுத்திக்கொண்டார்.

நவராத்திரி விழா ஒன்றில் இளம் பக்தைகள் மத்தியில் பிரேமானந்தாவோடு சாந்தா 'அம்மையார்' காட்சி தரும் 'வீடியோ' சகட் இப்போது சிக்கியிருக்கிறது.


ஆனால், நடவடிக்கை எடுப்பதில் ஒரு சிக்கல். சாந்தா அம்மையாரின் பக்தைகள் சிலர் அரச அதிகாரிகளது குடும்பத்தவர்கள்.

அதனால், சட்டம் தயங்குகிறது. பாவமல் பதுங்குகிறது!

## மற்றொரு பூதம்

சாமியார் விவகாரத்தில் சம்பந்தில் கிளம்பியுள்ள மற்றொரு பூதம் அருள்ஜோதி. வயது 18.

## ஏக்கமடா ஏக்கம்



## திவ்யா எழுதிய காதல்+காமம் கலந்த கடிதம்

இலங்கையில் பிறந்த அருள்ஜோதி பிரேமானந்தா இலங்கையில் ஆசிரமம் நடத்தியபோது இரண்டு வயது குழந்தையாக இருந்தாள்.

பின்னர் சாமியோடு தமிழ்நாடு சென்று ஆசிரமத்தில் தங்கியிருந்த அருள்ஜோதியின் வயிற்றில் இப்போது ஒரு குழந்தை இருக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக சாமியார் தன்னை பலவந்தப்படுத்திவந்தார் என்கிறாள் அருள்ஜோதி.

மறுத்தால் உதைப்பாராம். கரு உருவாகிவிட்டது என்று தெரிந்தால் திவ்யா அன்னாசிப்பழம் கொடுப்பாராம். கரு கலைந்துவிடுமாம்.

இப்போது சாமி உள்ளே. திவ்யா தலைமறைவு! அதனால் கரு வளர்ந்துவிட்டது. அருள்ஜோதி புகார் செய்திருக்கிறாள் பொலிசில்.

இலங்கையின் தலைநகர் கொழும்பில் கொளுத்த வாடகையில் பிரேமானந்தா ஆசிரமத்தின் கிளை ஒன்று திறக்கப்பட்டது உங்களுக்குத் தெரியுமோ?

கடந்த ஆகஸ்ட் மாதம் கொழும்புக்கு வந்த திவ்யா திறந்துவைத்துவிட்டு சென்றார்.

இலங்கையின் தேசிய பத்திரிகை ஒன்று செப்டம்பர் 4.1994ல் வெளியிட்ட செய்தி என்ன தெரியுமோ?

"புனித அன்னை திவ்யா அவர்கள் சென்ற ஆகஸ்ட் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்தார்." என்று தெரிவித்தது.

'ஜெய் பிரேம சாந்தி' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையும் வெளியிட்டார். திவ்யாவின் காலில் நம்நாட்டு புள்ளிகள் சிலரும் போய் விழுந்தார்களாம்.

யாருக்கு விளம்பரம் கொடுப்பது என்று ஒரு விவஸ்தை வேண்டாமோ? இந்த இலட்சணத்தில் அப்பாவி மக்கள் ஏமாறுவதில் ஆச்சரியப்பட முடியுமோ?

கொழும்பு முகவரியைக் கூறுகிறோம். குறித்துக்கொள்ளுங்கள். 6/3 விஜேராம மாவத்தை கொழும்பு-7.

## முடிவு என்ன?

பலாத்கார காம வேட்டை, சில கொலைகள்! தண்டனை என்ன? நீதி அதிகாரத்திற்கு பணியுமா? சமூக விரோதியை கூண்டில் ஏற்றி தண்டனைக் குழியில் தள்ளுமா?

எல்லோரது கேள்வியும் அதுதான்! ஆனால் போலிச் சாமியை பிணையில் விடுதலை செய்து தமிழ்நாட்டை விட்டு தலைமறைவாகச் செய்யவும் ஒரு முயற்சி நடப்பதாகத் தகவல். உண்மைகள் தூங்குமா?

அறிந்து கொள்ளுங்கள்-ஆரோக்கியம் பெறுங்கள்-ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ விந்தைகள்

## மீன் பிரியர்களுக்கு கசப்பான செய்தி

மனித உடலுக்கு போசனையைத் தரும் உணவு வகைகளில் மீனும் ஒன்றாகவே கருதப்பட்டு வருகிறது. அத்துடன் மீனில் காணப்படும் 'ஒமேகா-03' எனப்படும் கனியுப்பு மனித உடலில் உறையப்பட்டு வரும் கொலஸ்ட்ரோலை கரையச் செய்து இருதய நோய்த் தாக்கத்தையும் குறைப்பதற்கு உதவி வருகிறது.

மீன் உணவில் காணப்பட்டுவரும் தனிச் சுவையின் நிமித்தம் நம் மக்களில் பெரும்பாலானோர் தமது நாளாந்த உணவுக் கூறுகளுடன் மீன் உணவைச் சேர்த்துக் கொள்ளத் தவறுவதே கிடையாது.

இத்தகைய பிரபல்யமான மீன் உணவைப் பற்றி ஜெர்மனியைச் சார்ந்த மனித போசாக்கு பாதுகாப்பு நிறுவனம் கசப்பான செய்தியொன்றை இப்போது வெளியிட்டுள்ளது.

மீன் உணவு தொடர்பாக மேற்கூறிய நிறுவனம் சமீபத்தில் ஆராய்ச்சியில் ஈடுபட்டது. அளவுக்கதிகமான மீன் உணவின் மூலம் மனித உடலில் உள்ள வெண்குருதி உயிர்மங்கள் பாதிக்கப்படுவதாகவும், அவ்வுயிர்மங்கள் பாதிப்புறுவதன் மூலம் பல்வேறு வகையான பாதிப்புக்கள் உடலுக்கு வந்து சேரும் வாய்ப்புள்ளதாகவும் அந்த ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது.

## வயோதிபர்களுக்கு வசதியான யோசனை

இன்றைய வயதான மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளில் உடல் ஆரோக்கியமே முக்கிய அங்கமாக இருந்து வரக் காணப்பெறுகிறது. பெரும்பாலான வயோதிபர்களின் ஆரோக்கிய வீழ்ச்சிக்கு வரை நெறியற்ற அவர்களின் உணவுமுறைகளே முக்கிய காரணம் என்று மருத்துவர்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

எனவே நடுத்தர வயதைத் தொட்டதும் தமது உணவில் சில கட்டுப் பாடுகளை கடைப்பிடிப்பதன் மூலம் தமது ஆரோக்கியத்தை பாதுகாத்துக்கொள்ளலாம். வீண் செலவு சிரமங்களையும் தவிர்த்துக் கொள்ள முடியும்.



**கடைப்பிடிக்கவேண்டிய சில உணவு நியதிகள்:**

- இதுவரை மேற்கொண்டு வந்த கொழுப்புப் பதார்த்த உணவு வகைகளில் மூன்றில் ஒரு பகுதியை தவிர்த்துக் கொள்ளுதல்.
- சராசரி உணவில் 20-35 கிராம் வரை கடைந்துண்ணக்கூடிய கீரைகளை சேர்த்துக்கொள்ளுதல்.
- விட்டமின் ஈ, மற்றும் சி நிறைந்த புதிய காய்கறி பழவகைகளை உணவுடன் அதிகமாக சேர்த்துக்கொள்ளுதல்.
- கல்சியம் செறிந்து காணப்படும் பால், நெத்தலி போன்றவைகளை உணவுடன் அதிகமாக சேர்த்துக்கொள்ளுதல்.
- தினமும் எட்டு தம்ளர்வரை சுத்திகரிக்கப் பட்ட நீரை அருந்தி வருதல்.

## மருத்துவ குறிப்புக்கள்

### வாதத்திற்கு முள்ளங்கி

உணவில் முள்ளங்கியை சேர்த்து சாப்பிட்டு வந்தால் வாதம் வந்த சுவடு தெரியாமல் போய்விடும். ஆமாம் முள்ளங்கிக்கு வாதம் நீக்கும் சக்தி உள்ளது. இதோடல்லாமல் குடல் நோய், இருமல், கபம், தலைவலி, மலக்கடுப்பு போன்ற நோய்களுக்கும் முள்ளங்கி எதிரிதான்.

### ஆட்டுப்பாலின் அருமை

பசும்பாலைக் காய்ச்சித்தான் குடிக்க வேண்டும். ஏனென்றால் அதில் பல கொடிய கிருமிகள் உள்ளன.

ஆனால் ஆட்டுப்பாலை காய்ச்சாமலே குடிக்கலாம். இதில் கிருமிகள் கிடையாது!

### கண்நோய்

சுத்தமான விளக்கெண்ணையும், தாய்ப்பாலும் கண்களில் தினமும் இருமுறை விட்டுவந்தால் கண் நோய் போய்விடும்.

### பீடா போடாதீங்க!

வெற்றிலைக்கு செக்ஸ் உணர்வுகளை அதிகம் உற்பத்தி செய்யும் சக்தி உள்ளது என்று மருத்துவர்கள் முன்பே நிரூபித்திருக்கிறார்கள். அதனால்தான் புதுமணத் தம்பதிகளுக்கு தாம்பூலம் தருகிறார்கள். தாம்பூலத்திலுள்ள அரிக்கோலின் செக்ஸ் உணர்வை தூண்டுகிறது. ஆனால் தாம்பூலம் நாளடைவில் பாலின உணர்வை குறைத்து ஆண் மலட்டுத் தன்மையை ஏற்படுத்துகிறது



என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். சிலருக்கு அரிக்கோலின் சக்தியினால் மூச்சுக் குழாய் சிறுத்து நெஞ்சு அழுத்துவது போலிருக்கும். நாளடைவில் ஆஸ்துமா வரக்கூட வாய்ப்புள்ளதாம். நேற்றைய அமிர்தம் இன்றைய நஞ்சு என்பது இதுதானோ?

## டயானா கொடுத்த அனுமதி



உலகில் மிகச் சிறந்த அழகி டயானாதான் என்று ஒருவர் சொல்லியிருக்கிறார். டயானா அழகானவர் தான் என்பதால் அப்படிச் சொல்லப் படுவதில் ஆச்சரியமில்லைத்தான்.

ஆனால், அதனைச் சொல்லியிருப்பவர் கண் பார்வையற்றவர் என்பதுதான் ஆச்சரியமான செய்தி.

22 வயதான கிறிஸ் ஆண்டர்சன் பிறவியிலேயே கண்பார்வையை இழந்தவர். இலண்டனில் உள்ள ரோயல் கண்பார்வையற்றோர் பாடசாலையில் படித்து வருகிறார்.

அங்கு டயானா சமீபத்தில் விஜயம் செய்திருந்தார்.

இங்கிலாந்து இளவரசி டயானா வந்திருக்கிறார் என்பதையறிந்த கிறிஸ் ஆண்டர்சனுக்கு சந்தோசம்.

ஆறுதல் கூறுவதற்காக தன் அருகில் வந்த டயானாவிடம் "உங்களை தொட்டுப்பார்க்க அனுமதிப்பீர்களா?"

என்று கேட்டார் அண்டர்சன். டயானா கோபப்படவில்லை. "ஓ.கே" என்றார்.

தனது கைகளால் டயானாவின் முகத்தை மெதுவாகத் தொட்டுப் பார்த்தார்.


தொட்டுப் பார்த்தவரை சுற்றி வளைத்த நிருபர்கள் குறும்பாக கேட்டனர், "உங்கள் அனுபவம் எப்படி?"

உடனே அவர் சொன்ன பதில்: "எனக்கு கண்பார்வை கிடையாது. என்றாலும் நான் இதுவரை 'பார்த்த' பெண்களிலேயே டயானாதான் மிகவும் அழகானவள்."

பதில் சொல்லும்போது ஆண்ட்ர்சன் முகத்தில் பூரிப்பின் ஆக்கிரமிப்பு!

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## கட்டில் விளையாட்டு



இலண்டன் மாநகரில்தான் இந்த விநோதக் காட்சியை கமரா கச்சிதமாய் 'கிளிக்' செய்தது. மருத்துவமனை ஒன்றில் இருந்த கட்டில்களை வைத்து உயரமாக புதுமையாக அடுக்கி, கண்காட்சி நடத்தியவரின் பெயர் ரெபேக்கா ஹோரன். இதற்காக பரிசும் கிடைத்திருக்கிறது. கொடுத்தது நியாயம்தானே!

# தீராத ஆசையால் பெருத்த தேகம்

தின்ன தின்ன ஆசை. தீராத ஆசை!
யாருக்கு? தென் ஆபிரிக்காவில் உள்ள 30 வயதான காரெல் வான் என்பவருக்கு!
தின்றார்-தின்றார் தின்றுகொண்டேயிருந்தார். எடை ஏறியது. 631 இறாத்தல் வரை!
அசைய முடியாமல் படுக்கையில் சரிந்தார் சாப்பாட்டு பிரியர்.
மருத்துவர்கள் வீடு தேடி வந்து பார்த்தனர்.
கொழுப்புச் சத்து, மாச்சத்து ஆகியவை கொண்ட உணவுப் பதார்த்தங்கள் உண்ணக்கூடாது என்றனர். என்ன செய்வது, கட்டுப்படத் தானே வேண்டும். நாவுக்கு ருசி மறுப்பு போராட்டம். மதுபானங்களையும் நிறுத்தினார். பழவகைகள், கீரை வகைகள், காய்கறிகள் உட்கொண்டார். அசைவ உணவுக்கு டாட்டா. பால்-தயிர், வெண்ணெய்? மூச்! தொடுவதே கிடையாது. உடல் மெல்ல மெல்ல மெலிந்தது.
மலை உடல் குறைந்த மன்மதன்போல் மாறிக்கொண்டிருக்கிறார் கரோல்.
"சிறிதளவு தேகப் பயிற்சி செய்கிறேன். சிறிது தூரம் நடக்கிறேன்"
என்கிறார். கரோல்.
இப்போது கரோலின் எடை 317 இறாத்தல்!





எடைகுறைந்தபின் காரெல்வான்



## கேட்டது ஒன்று– கிடைத்தது மூன்று

இலண்டனைச் சேர்ந்த டெப்றாவுக்கு 31 வயது. டெப்றாவுக்கு குழந்தை பெற்றுக்கொள்ள ஆசை.

அவளது ஃபலோபியன்குழாயில் புற்றுநோய் என்று டாக்டர்கள் கூறியபோது டெப்றா அதிர்ந்துபோனாள்.

"பரிசோதனைக் குழாய் குழந்தை பெறமுடியும். கவலையை விடுங்கள்" என்றார்கள் டாக்டர்கள்.

டெப்றாவுக்கு படு சந்தோசம். கணவர் மில்லரின் உயிரணுவோடு டெப்றாவின் கரு முட்டைகளை பரிசோதனைக் கூடத்தில் வைத்து சினைப்படுத்தி விட்டு, டெப்றாவின் கர்ப்பப்பையில் வைத்தனர்.

கரு வளர்ந்தது. 1991 மார்ச் 7ம் திகதி பிரசவம்.

டெப்றாவுக்கு இரட்டை மகிழ்ச்சி. பிறந்தது இரட்டைக் குழந்தைகள். அதுதான் இரட்டிப்பு மகிழ்ச்சி.

"இன்னுமொரு குழந்தை வேண்டும்." என்றாள் டெப்றா.

மூன்று சினையுற்ற முட்டைகள் டெப்றாவின் கருப்பையில் வைக்கப்பட்டன. பரிசோதனைக் குழாய்க் குழந்தைகள் விடயத்தில் ஒரே தடவையில் மூன்று கரு முட்டைகளுக்குமேல் வைப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

மூன்று முட்டைகள் வைத்தாலும் பெரும்பாலும் அம்மூன்றுமே கருவாக வளர்ச்சி பெறுவதில்லை. டெப்றாவைப் பொறுத்தமட்டில் மூன்று முட்டைகளும் வளர்ச்சியடைய ஆரம்பித்தன. உரிய காலம் வந்ததும் சிசேரியன் மூலம் ஒவ்வொன்றாக மூன்று சிசுக்களும்-ஒவ்வொரு நிமிட இடைவெளியில் பிறந்தன. பென்-4 இறாத்தல் 10 அவுன்ஸ்; டேவிட்-5 1/2 இறாத்தல்; இறுதியாக அலெக்ஸ்-5 இறாத். 5 அவுன்ஸ். மூன்று குழந்தைகளும் நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளன.

"மூன்று முட்டைகளும் கருவாக வளர்ச்சியடையும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை," என்று டெப்றா மகிழ்ச்சி பொங்கக் கூறுகிறார்.

"எங்கள் குடும்பம் பெருத்துவிட்டது. இனிமேல் எங்களுக்குக் குழந்தைகள் வேண்டாம்." என்கிறார் டேவிட்.



## பிறந்து மூன்று நாள், ஆனால் பரந்த மனம்

குரங்கின் அணைப்பில் கோழிக் குஞ்சு. குரங்கார் பிறந்து மூன்றே மூன்று நாட்கள்தான். அதற்குள் தன்னைப் போல் தன் சக ஜீவிகளையும் அணைக்கும் தாராள மனம்! இந்த குரங்காரின் தோற்றம் சற்று வித்தியாசமாக இருப்பதற்கு காரணம், இவர் அணில்வகை இனத்தை சேர்ந்தவராம். தென்னாபிரிக்காவின் கேப்டவுனிலுள்ள மிருகக்காட்சி சாலை ஒன்றில் பதிவான படமிது.

## தகவல் பெட்டி

### கெட்டிக்காரக் குதிரை



அமெரிக்கா-ஒக்கலகாமா மாநிலம் கொமில் எனுமிடத்தில் ஜொனி பிளாசியர் என்பவர் ஒரு குதிரையை வளர்க்கிறார். குதிரைகள் சவாரிக்கும் ஓட்டப் போட்டிகளுக்குமே உகந்தவை. ஆனால் பிளாசியர் வளர்க்கும் குதிரை புதுமையான பல வித்தைகளை, தனது எஜமானின் கட்டளைக்குப் பணிந்து செய்துகாட்டி பாராட்டுக்களைப் பெறுகிறது.

இக்குதிரைக்கு மூன்று வயதாகிறது. 'ஜஸ்' என்று பெயரிட்டுள்ளார் பிளாசியர். சில பாடல்களுக்கும் இசைக்கும் ஏற்றாற்போல் தாளம் பிசகாமல் நடனம் ஆடுகிறது; வாயில் தூண்டிலை வைத்துக்கொண்டு தடாகத்தில் மீன் பிடிக்கிறது; சிரிக்கும்படி கூறினால் பற்களைக் காட்டிச் சிரிக்கிறது; நாயைப் போலே இருக்கிறது.

தனது எஜமானின் குளிர்பதனப் பெட்டியைத் திறந்து 'கோக்' போத்தலை எடுத்து, மூடியையும் திறந்து பருகுவதற்காக பிளாசியரிடம் தருகிறது. அவரை அழகாகக் கட்டி அணைத்து முத்தமும் கொடுக்கத் தயங்குவதில்லையாம்.

மிகவும் மதி நுட்பம் நிறைந்த 'ஜஸ்' தனக்குச் சொல்லித்தரும்பயிற்சிகளை மிக வேகமாகக் கற்றுக்கொள்ளுகிறது என்று பிளாசியர் பெருமையுடன் கூறுகிறார்.

www.padippakam.com நன்றி - நூலகத்தி

## அடுத்தது 'செங்கோட்டை'

வெற்றியை குவித்த 'நாட்டாமை' படத்தை தயாரித்த பட நிறுவனம் ஆப்பர் குட் பிலிம். அந்த பட நிறுவனம் புதிதாக தயாரித்துவரும் படத்தின் பெயர் 'செங்கோட்டை'. கதாநாயகனாக அர்ஜுன் நடிக்கிறார். அவருக்கு இரண்டு ஜோடிகள். ஒருவர் மீனா. இன்னொருவர் ரம்பா. சி.வி. சசிகுமார் படத்தை இயக்குகிறார். இசை-வித்யாசாகர். முதல் கட்ட படப்பிடிப்பு தொடங்கிவிட்டது.

## படத்தின் பெயர் என்ன? -உயர்திரு. 420-

ஆகியோரும் நடிக்கிறார்கள்.



## கிசு-கிசு நியூஸ்

# ஐம்பதிலும் ஆசை வரும்

நடிகை பிரகதியிடம் வந்தாராம் ஒரு தயாரிப்பாளர். அவர் வயது ஐம்பது இருக்கும். ஏற்கனவே 'வயல்' பெயரில் படம் எடுத்தவராம். அந்தப் படம் பப்படமாகிவிட்டது.

"அடுத்த படம் நன்றாக ஓடும். நீங்கள்தான் கதாநாயகி. என்னோடு ஒத்துழைத்தால் உங்களுக்கு முக்கியத்துவம் தந்து படம் எடுப்பேன்." என்று சொல்லிவிட்டு ஒரு மாதிரி வழிந்தாராம்.

"சரி யார் ஹீரோ?" என்று கேட்டாராம் பிரகதி. தயாரிப்பாளர் எழுந்து புன்சிரிப்போடு சொன்னாராம். "நான்தான் ஹீரோ." பிரகதி பேயறைந்தது போல் ஆகிவிட்டாராம். "போய்யா வெளியே" என்று கத்திவிட்டார்.

## ரோஜாவின் காது

'மக்கள் ஆட்சி' படத்தில் மம்முட்டி ரோஜாவின் காதை திருகுவதுபோல ஒரு காட்சி. உணர்ச்சிவசப்பட்ட மம்முட்டி ரோஜாவின் காதை வலிக்கிறமாதிரி திருகிவிட்டாராம். 'ஓ.......' வென்று அலறிய ரோஜா மம்முட்டியின் கையை தட்டிவிட்டாராம். படத்தின் இயக்குநரும் ரோஜாவின் காதலருமான செல்வமணிக்கு என்ன யோசனை என்றால் மம்முட்டி செய்தது தற்செயலா அல்லது திட்டமிட்டா? என்பதுதானாம்.

## ரஜினியின் ஸ்டைல்

இயக்குநர் மணிரத்னத்தின் மகன் ரஜினியை பார்க்க வந்தார் தாத்தா சாருஹாசன் தூக்கி வந்தார். அவனைப் பார்த்த ரஜினிகாந்த் ஒரு சிகரெட்டை எடுத்து ஒரு சுழற்று சுழற்றி வாயில் போட்டுப் பிடித்தார். பையன் கைதட்டி ஹா...ஹா..... என்று சிரித்தான்.

"பரவாயில்லை நம்ம ஸ்டைலுக்கு இன்னமும் மவுசு இருக்கு." என்று சொல்லிச் சிரித்தாராம் ரஜினிகாந்த்.

## -வயதான சுகன்யா-

சுகன்யாவை தமிழ் பட தயாரிப்பாளர்களும், ஹீரோக்களும் மறந்துவிட்டார்கள். இப்போது மலையாளத்தில் மம்முட்டி ஜோடியாக ஒரு படத்தில் நடிக்கிறார். ஆனால் வயதான பாத்திரம். அம்மாவாக நடிக்கிறாராம். எல்லாம் நேரம்தான்.

...பிரசாந்த் ...பிரமாண்டமாக ...'ஆணழகன்' விரை... பிரசாந்த் நடித்து சமீப... வெளிவந்த படங்கள் எதிர்பார்த்த ...பெறவில்லை. 'ஆணழகன்' பிரசாந்... ...ஈடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ...ல்லியிலிருந்து வில்லன்

...-வினீதா, ஜோடியாக நடித்த 'நிலா' படம் வெளிவந்து ...த்துவிட்டது. இப்போது அதே ஜோடி இணைந்து ... படம் 'புது நிலவு'.

...க்கு இன்னொரு ஜோடியாக நடிக்கிறார் பம்பாய் அழகி பிரேமா. ... அரவிந்த், கல்யாணகுமார், கவுண்டமணி, செந்தில், அஜய் ரத்னம், ... பாண்டியன் ஆகியோரும் நடிக்கின்றனர்.

...போது பம்பாயிலிருந்து வில்லன்களை இறக்குமதி செய்யும் சீசன்! 'புது நிலவு' ...திற்காக டெல்லியிலிருந்து வில்லனை இறக்குமதி செய்கிறார்கள். பெயர்-...



## ...கர்ணா' வர தாமதம்

பொங்கல் வெளியீடாக அறிவித்த படம் 'கர்ணா'. அர்ஜுன் இரட்டை வேடத்தில் நடித்துள்ள கர்ணா பொங்கலுக்கு வெளியிட திரையரங்குகள் மறுத்துவிட்டனராம். அதனால் பெப்ரவரி மாத வெளியீடாக வருகிறது கர்ணா.



ரஜினி-நக்மா
படம்-பாட்ஷா

## ரஞ்சிதா மாறுவேடத்தில்

நடிகை ரஞ்சிதா படங்களில் மட்டுமல்ல வாழ்க்கையிலும் மாறுவேடத்தில் நடிக்கிறார். அதாகப்பட்டது, பொழுது போவதற்காக வெளியே செல்லும்போது மாறுவேடத்திலேதான் செல்வாராம். ரசிகர்களது தொல்லையிலிருந்து தப்பிக்கொள்ள இந்த ஏற்பாடாம்.



## கார்த்திக் கண்டிப்பு

கார்த்திக் ஒரு விடயத்தில் மிகக் கண்டிப்பாக இருக்கிறார். தனது பிறந்தநாள் அன்று புதுப்படங்களில் நடிக்கமாட்டார். அவ்வாறு நடித்த படங்கள் நன்றாக ஓடாததுதான் கண்டிப்புக்குக் காரணமாம்.

## தாமதமாகும் — ஜனநாயகம்

வேலை இல்லா பட்டதாரிகளின் பிரச்சனைகளையும், இன்றைய அரசியல் சூழலையும் வைத்து மன்சூர் அலிகான் கதை எழுதி நடித்துள்ள படம் 'வாழ்க ஜனநாயகம்!' படத்தில் 8 பாடல்களையும் மன்சூர் அலிகான் எழுதியுள்ளார். பொங்கலுக்கு வருவதாக இருந்த படம். ஆனால் வரவில்லை. தணிக்கைக்குழுவின் கெடுபிடிகளில் சிக்கி தாமதமாகிறது என்று ஒரு செய்தி.

## குஸ்பூ-பைத்தியம்

'முத்துக்குளிக்க வாரீயளா' படத்தில் பைத்தியக்காரி வேடத்தில் நடிக்கிறார் குஷ்பூ. கவர்ச்சியான வேடங்களில் நடிப்பதைவிட சவாலான பாத்திரங்களில் தோன்றி நடிப்பதையே விரும்புகிறேன். 'முத்துக்குளிக்க வாரீயளா' படத்திலும் சவாலான பாத்திரம். திருப்தியாக உணர்ந்து நடித்திருக்கிறேன் என்கிறார் குஷ்பூ.

## சத்தமில்லாமல் எடுத்துவிட்டார்கள்

விஜயகாந்த் நடித்து பொங்கலுக்கு வந்த படம் 'கருப்பு நிலா'. போலீஸ்காரி பிரேமானந்த் தானை நினைவூட்டும் காட்சிகளை ...ம் படத்தில் இடம் பெறச் செய்திருக்கிறார்கள். போலீஸ்காரியின் கதையை படமாக்க பலர் முன்வந்தபோது சத்தமில்லாமல் 'கருப்பு நிலா' எடுத்துமுடித்துவிட்டார் இயக்குநர்.



ரோஜா-மம்முட்டி
படம்-மக்கள் ஆட்சி

# சினி வெடி

## ரோஜாவின் ஊதியம்

ரோஜாவின் இன்றைய மார்க்கெட் நிலவரப்படி அவர் கேட்கும் ஊதியம் தமிழில் நடிக்க 20 இலட்சம். தெலுங்கில் 40 இலட்சம்.

## சரத் முடிவு

புதிய பட அதிபர்கள் சரத்குமாரை விரட்டிக்கொண்டிருக்கிறார்கள், தமது படத்தில் நடிக்கவைக்கவே விரட்டல். வருடத்தில் ஒரு படம் புதிய பட அதிபர்களுக்காக நடிக்கக் கொடுக்கும் முடிவில் இருக்கிறார் சரத்குமார்.

## ராதிகாவின் செலவு

நடிகை ராதிகா வெளிப்புறப் படப்பிடிப்புக்களுக்குச் சென்றால் தனது குழந்தையையும் இரண்டு உதவியாளர்களையும் அழைத்துச் செல்கிறார்கள். அவர்களின் செலவை ராதிகாவே கவனித்துக்கொள்ளுகிறாள்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# ஆணுக்கும் பெண்ணுக்கும் பலம் எதிலே-பலவீனம் எங்கே?



சுவாரசிய ஆராய்ச்சி

ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் அடிமைகொள்ளாமல் பரஸ்பர மதித்தல் மூலமாகவே இனிய வாழ்வை காணமுடியும்.

பெண் புத்தி பின் புத்தி என்பதெல்லாம் புதை குழிக்கு சென்றுவிட்ட புதை மொழிகளாகிவிட்டன.

இன்னமும் பெண்களை திறமையற்றவர்களாக சித்தரிக்கும் ஜோக்குகளும், கதைகளும் முகம்காட்டியே வருகின்றன. அவற்றை பெண்களும் விரும்பிப் படித்து இரசிப்பது தான் இன்னும் கொடுமை.

சமூக, பொருளாதார அடிப்படையில் பெண்களின் சமத்துவத்திற்கான கோரிக்கைகள் வலுவடைந்து வருகின்றன.

அதே சமயம் பெண் விடுதலை என்பது ஆண் சிகரெட் பிடித்தால் பெண்ணும் பிடிப்பது என்பதுபோல சிறுபிள்ளைத்தனமான விசயமுமல்ல.

பெண்ணை ஒரு சக மனுஷியாக மதிப்பது அவள் உணர்வுகளைப் புரிந்துகொள்வது. ஆணும், பெண்ணும் கருத்தொருமித்து கைகோர்த்து வாழ்வின் வசந்தங்களை பகிர்ந்துகொள்வது என்பதே முக்கியமானது.

இங்கே, உடலியல் ரீதியாக ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குகிறார் டாக்டர் அமிர்தம்.

நடுத்தர வயதை எட்டும் ஒரு பெண் அதே சம வயதுடைய ஆணை விட வயதினால் கூடிய தோற்றத்தை அடைந்து விடுகிறாள். வயதினால் ஏற்படும் மாற்றங்களை பெண்களின் மூளை அமைப்பு விரைவாகப் பிரதி பலித்துக்காட்டி விடுகிறது என்று நரம்பியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

மொழி மற்றும் நினைவாற்றல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் மூளையின் பகுதி ஆண்களுக்கும் பெண்களுக்கும் பாரிய வேறுபாடுகளை உடையதாகவே இருக்கிறது.

இதே வேளையில் குழந்தைப் பருவத்தில் ஆண்களைவிட பெண்கள் சுறுசுறுப்புடையவர்களாகக் காணப்படுவர். கேட்பது, கிரகிப்பது, பேசுவது போன்றவற்றில் ஆண் குழந்தைகளைவிட பெண் குழந்தைகள் திறமை கொண்டு விளங்குவார்கள். கேட்கும் சக்தி பெண்களுக்கு நீடித்த காலம் வரை இருக்கும்.

உதாரணமாக 32 வயதில் கேட்கும் சக்தி ஆண்களுக்குக் குறையுமானால் பெண்களுக்கு இவ்வாற்றல் 37 வயதுவரை பழுதற்றிருக்கும் என்று பிரிட்டிஷ் மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

மோப்பச் சக்தி மற்றும் சுவை நுகர்ச்சி ஆகிய துறைகளிலும் ஆண்களைவிட பெண்களே முன்னணியில் திகழ்கின்றனர்.

நெடுந்தூரப் பார்வையைப் பொறுத்த வரை ஆண்களின் கண்கள் பெண்களின் கண்களைவிட மிகக் கூர்மையானவை.

பெண்களின் கண்கள் 35 முதல் 40வது வயதுக்கும் பார்க்கும் சக்தியை குறைத்துக் கொள்ளும் அதே வேளையில் 55 வயது வரையும் சக்தியுள்ள பார்வையுள்ளவர்களாக ஆண்கள் விளங்குகின்றனர்.

இருப்பினும் கிரகிப்புத்தன்மையில் பெண்களே முதலிடம் வகிக்கின்றனர்.

ஒரு மேசை மீது பல தரப்பட்ட பொருட்களைப் பரப்பிவைத்து விட வேண்டியது. பின்னர் அவற்றை குழப்பிவிடலாம். எந்தெந்தப் பொருள் எந்தெந்த இடத்தில் இருந்தது என்பதை நினைவில் வைத்திருந்து அவற்றை அதே ஒழுங்கு முறையில் வைத்து விடுமாறு இளவயதினரான ஆண்-பெண் இருபாலாரிடமும் கேட்டுப் பாருங்கள். ஆண்களைவிட வேகமாக-சரியாக அந்தப் பொருட்களை உரிய இடத்தில் பெண்கள் வைத்து-போட்டியில் வெற்றி யீட்டிவிடுவார்கள். ஆனால் ஆண்களுக்கு இதில் தோல்வி நிச்சயம்!

தன் எதிரே வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் ஒரு மோட்டார் வண்டியின் வேகத்தை உத்தேசமாகக் கூறும்படி ஒரு போட்டி வைத்துப் பாருங்கள். இதில் அதிக புள்ளி ஆண்களுக்கே!

## பாலியல்



பாலியல் ரீதியான நிலைப்பாடுகளிலும் இருபாலாருக்கும் குறிப்பிடத்தக்க பேதங்கள் இருக்கின்றன. பலான புகைப்படங்கள், புத்தகங்கள், வீடியோப்படங்கள் மலிந்து விட்ட இக்காலங்களில்-மேலை நாடுகளில் பலதரப்பட்ட ஆய்வுகள் நடைபெற்றுள்ளன.

பாலியல் தொடர்புகளில் அதிக நாட்டம் காட்டாத பெண்களை வழிக்குக் கொண்டு வருவதற்காக ஆண்கள் மேற்கூறப்பட்ட சாதனங்களைப் பயன்படுத்தி முயற்சிகளை மேற்கொண்டு அவை தோல்வி அடைந்தமையே இந்த ஆய்வுகளுக்கான தூண்டுகோலாகும்.

இத்தகைய சாதனங்களைப் பார்ப்பதனாலும் பலான கதைகளைப் பரிமாறுவதனாலும் சுலபமாக உணர்ச்சி வசப்படுபவர்கள் ஆண்களே என்று கண்டுள்ளனர்.

பெண்கள் கனிவான பேச்சுக்களிலும் உரிய முறையிலான ஸ்பரிசங்களினாலுமே உணர்ச்சி வசப்பட்டு இன்பம் அனுபவிக்க ஆயத்தமாகின்றார்கள். இவ்வாறு படிப்படியாக இன்ப இரசனையினை அனுபவிக்கும் பெண்கள், இடை நடுவில் அது தடைப்படுமானால் வெறுப்படைகிறார்கள். இதனால் ஒரு பெண் விரக்தியுமடைகிறாள்.

ஆண்களைப் பொறுத்தமட்டில் அவர்களுடைய இன்ப நுகர்ச்சி இடை நடுவே தடைப்பட்டாலும் மீண்டும்-விட்ட இடத்திலிருந்து தொடங்குவதற்குத் தயக்கம் காட்டமாட்டார்கள்.

# ரோஜா என்ன சொல்கிறார் என்றால்........



படங்களில் தலையில் மல்லிகைப்பூ சூடியிருந்தாலும், ரோஜாவிற்கு மிகவும் பிடித்த பூ ரோஜாப்பூதானாம். (இதனால் தான் பாரதிராஜா இவருக்கு ரோஜா என்று பெயர் வைத்தாரோ?) இவருக்குப் பிடித்த உடை சுரிதார். நன்றாகச் சமைக்கவும் தெரிந்திருக்கும் இவர் அசைவ உணவுகளையே அதிகம் விரும்பி உண்ணுகிறார். குழந்தைகள் என்றால் இவருக்குக் கொள்ளைப் பிரியமாம். ஓய்வு நேரங்களில் வீடியோவில் புதிய படங்களை பார்க்கிறார். இப்படித் தனக்குப் பிடித்த அம்சங்களைக் கூறும் ரோஜா, பெண்களுக்காக சில அழகுக் குறிப்புக்களைக் கூறுகிறார்.

முதலில் ஒவ்வொரு பெண்ணும் கவனிக்க வேண்டியது, அவர்கள் பகல் நேரங்களில் என்னதான் மேக்-அப்களைப் போட்டுக்கொண்டாலும், இரவில் தூங்கப் போவதற்கு முன் அத்தனை மேக் அப்பையும் கலைத்துவிட்டுத்தான் தூங்கவேண்டும். சிறிதளவு பால் அல்லது கிளென்சிங் மில்க் கொண்டு பஞ்சில் நனைத்து, முகத்தின் மேக் அப்பைக் கலைக்கலாம்.

தினமும் காலையில் சிறிதளவு பாலேடு, எலுமிச்சைச் சாறு, சுத்தமான கடலை மாவு, மஞ்சள்தூள் இவற்றைக் கலந்து முகத்தில் தடவி சிறிது நேரம் ஊறிய பின் குளித்துவந்தால் சருமம் மென்மையாகும்.

சிறிதளவு ரோஜா இதழ்களை தண்ணீரில் ஊறவைத்து, அடுத்த நாள் அந்தத் தண்ணீரில் முகம், கை கால்களில் தடவிக் குளிக்கலாம். இதனால் உடலிலிருந்து வரும் நாற்றம் நீங்கும்.

முகத்தில் சுருக்கம் இருந்தால், விற்றமின் ஈ மாத்திரைகளை வாங்கி, அதனுள் இருக்கும் எண்ணெயை எடுத்து, சுருக்கம் உள்ள பகுதிகளில் தடவி, மசாஜ் செய்துவந்தால் சுருக்கங்கள் மறையும்.

பெண்கள் முகத்தை மட்டும் அழகாக வைத்துக்கொண்டால்போதாது. உடலை மிகவும் பருமனாகவோ, பலவீனமானதாகவோ வைத்துக்கொள்ளாமல் சீரான எடையுடன் வைத்துக்கொள்ளவேண்டும். உணவில் கட்டுப்பாட்டுடன் இருப்பதுடன், தினமும் உடற்பயிற்சி செய்தவன் மூலம் உடல் பருமனைக் குறைத்துக்கொள்ளலாம். அதே போன்று மிகவும் எடை குறைவாக இருக்கும் பெண்கள் உணவில் அதிக கவனம் காட்டுவதுடன், அடிக்கடி ஐஸ்கிறீம் சாப்பிட்டு வந்தால் விரைவில் உடலில் எடை அதிகரிக்கும். இவைதான் ரோஜாவின் யோசனைகள்.

## இனிப்பான செய்தி

## மகளிர் மட்டும்

லேடீஸ் ஸ்பெசல் பகுதியில் உங்களுக்காக நடத்தப்படும் பரிசுப் போட்டிகள் வரிசையில் மற்றொரு-

**அசத்தலான பரிசுப் போட்டி**

விபரம் அறிய அடுத்த வாரம் வரை காத்திருந்தால் போதும்.

# கன்னத்தில் என்ன சங்கதி?



பருவப் பெண்களுக்கு முகத்தில் சர்வ சாதாரணமாகப் பருக்கள் தோன்றுகின்றன. முகத்தில் பரு வந்துவிட்டாலே சில பெண்கள் வெட்கப்படுவார்கள். பலருக்கு ஒன்று, இரண்டு, பருக்கள் தோன்றி விரைவில் மறைந்துவிடும். ஆனால் சிலருக்கு முகம் முழுவதும் பருக்கள் அள்ளி தட்டிவிடும். விரைவிலும் போகாது. இவர்கள் சாப்பாட்டில் உப்பைக் குறைத்துக் கொள்ளவேண்டும். எவ்வளவு குறைக்கிறார்களோ அவ்வளவுக்கு நல்லது. 15 நாட்களுக்குள் இதன் பலன் தெரியும். பரு உண்டாவது குறையும். ஒரு வாரத்திற்குள் முழுவதும் குணமாகிவிடும். 12,13 வயதில் உடல் வேகமாக வளர்கிறது. உடலை மெருகேற்றும் பருவ வளர்ச்சியும் சேர்ந்து கொள்கிறது. அப்பொழுது உடலிலிருந்து அதிக அழுக்குகள் வெளியேற்றப்படுகின்றன. அவைதான் பருக்கள். பரு உள்ளவர்கள் நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். சாப்பாட்டில் காய்கறி, கீரைகள் நிறைய சேர்த்துக்கொள்ளவேண்டும். உடலிலிருந்து கழிவை வெளியேற்ற இவை பயன்படும்.

## லேடீஸ் ஸ்பெசல்

# நீங்களும் தைக்கலாம்

எஸ்-எஸ்

## 30 அங்குல மார்புச்சுற்றளவுள்ள மங்கையருக்கான சாறி பிளவுஸ்

**எடுக்கவேண்டிய அளவுகள்:**

பின் (முதுகு) பக்க அளவு- 16 அங்குலம்
நீளம்- 14 அங்குலம்
முன் (மார்பு) பக்க அளவு- 9+9 அங்குலம்
கை நீளம்- 12 அங்குலம்
கை அகலம் - 10+10 அங்குலம்


**வெட்டும் முறைகள்:**

16 அங்குல அகலமும் 14 அங்குல நீளமும் கொண்ட இரு சதுரமான துணியினை எடுத்து மேசையின் மேல் விரித்து A,B,C,D எனக் குறிப்பிட்டினை இடவும். குறியீடு போட்ட துணியினை சமனாக மடித்துக் கொள்ளவும். மடித்த அத்துணிக்கு படம் 5ன் உதவியுடன் மீண்டும் A,B,C,D என அதன்படி குறியீடு போடவும்.

Aயிலிருந்து 2 1/2 அங்குலம் உள்நோக்கி அளந்து Eஎனக் குறிக்கவும். Eயிலிருந்து 4 அங்குலம் அளந்து G எனக் குறிக்கவும். இப்பகுதியே தோள்மூட்டுப் பகுதியாகும். G-B பகுதி பின்பக்க கழுத்துப் பகுதியைக் குறிக்கிறது. அப்பகுதியை 1 1/2 அங்குல பதிவில் வெட்டுதல் போதுமானது. வெட்டிய 1 1/2 பதிவில் படத்தில் காட்டியவாறு H பகுதியில் உங்களுக்கு விருப்பிய டிசைனில் சிறிதாக வெட்டிக்கொண்டு அதே வடிவில் பிறிதோர் துணியை வெட்டி எடுத்து உட்பக்கமாக தைத்துக்கொள்ளவும். சட்டையின் கீழ் மடிப்பினை கைத் தையலால் தைத்துக்கொள்ளவும்.

பின்முன் பக்கத்தை ஒரே அளவில் வெட்டிக்கொள்ளவும். வெட்டி எடுத்த முன் பகுதி துணியினை தனியே எடுத்து முன் கழுத்துப் பகுதியை மட்டும் பதிவாக படம் 1ல் காட்டிய வாறு வெட்டவும். அதனையடுத்து கைப் பகுதியில் இருந்து 5 அங்குலம் அளந்தும் முன்பக்க கழுத்துப் பகுதியி





லிருந்து 4 அங்குலம் அளந்தும் படம் 1ல் வளைவுப் பகுதியாக வெட்டிக்கொள்ளவும். எஞ்சியப் பகுதியில் 5 அங்குல அகலமும் 3 1/2 அங்குல நீளமுமான அளவில் படம் 2ன் வடிவத்தை வெட்டி முன் பக்கத்திற்கு படம் 1ல் அடையாளமிட்டு காட்டியவாறு மூன்று டக்ஸ் இரு பக்கத்திற்கும் போட்டுக்கொண்டதன் பின்னர் படம் 2ன் வடிவத்தினையுடைய துணியினை அத்தோடு பொருத்திக்கொண்டு முன்பக்க பூட்டுக்கு துணி வைத்து தைத்துக்கொள்ளவும்.

இதன் பின்னர் தோள் மூட்டுப் பகுதியை மூட்டவும். அதனையடுத்து 1-1 1/2 அங்குல அளவில் தையலுக்குதுணி விட்டு விலாப் பகுதியை சரிவாக தைக்கவும். இதுவரைக்கும் தைத்த பகுதி ஒரே அமைப்பை உடையனவாக இருக்கிறதா என்று சரிபார்த்துக் கொள்ளவும்.

**கைப்பகுதியை வெட்டுவோம்**

12 அங்குல நீளமும் 10+10 அங்குலமான இரு துணியினை எடுத்து சரிசமமாக மடித்து அப்பகுதிகளுக்கு A,B,C,D எனக் குறித்துக்கொள்வோம். Bயிலிருந்து 4 அங்குலம் கீழ்நோக்கி அளந்து Eஎனக் குறித்துக்கொள்ளவும். படம் 4இல் காட்டியவாறு Dயிலிருந்து 3 அங்குலம் உள்நோக்கி அளந்து Fஎனக் குறித்துக்கொள்ளவும். A,B,E பகுதியை படம் 4ல் காட்டியவாறு வளைவாக வெட்டவும். இவ்வாறு வெட்டிய பகுதியின் கீழ்ப்பகுதியை கைத் தையல் போட்டுக்கொண்டு E,F பகுதியை பொருத்திய பின்னர் Aஎனக் குறிக்கப்பட்ட கையின் நடுப்பகுதியில் சிறுசிறு சுருக்கிட்டு சட்டையின் கைப்பகுதியுடன் பொருத்தவும். (தோள் மூட்டுப் பகுதியில் சிறுசிறு சுருக்கிடவும்)

**குறிப்பு:** படம் 2இன் பகுதிக்கு தடித்த துணி அதற்கேற்றவாறு வெட்டி எடுத்து உள் பகுதிக்கு வைத்துத் தைத்தல் நன்று.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுகந்தினி

### ரவை கேசரி

திடீர் விருந்தாளிகள் வந்தால் வெறுமனே தேனீரோ காப்பியோ கொடுத்து அனுப்புவதைவிட தித்திப்பாகச் சுவைப்ப தற்கேற்றதாகப் பரிமாறக்கூடிய ஒரு சிற்றுண்டி-ரவா கேசரி-செலவுச் சுருக்கத் துடன் மிகக் குறைந்த நேரத்தில் செய்து முடித்துவிடலாம்.

**தேவையானவை:**


ரவை-1/2 கிலோ
சீனி- 1/2 கிலோ
ஆடை நீக்காத பால்- 1/4 லீட்டர்
வெண்ணை அல்லது நெய்- 2 1/2 மே.கரண்டி
முந்திரிப்பருப்பு-100
முந்திரிப்பழ வத்தல்-50 கிராம்
ஏலக்காய்-6
கேசரி பவுடர்-சிறிதளவு

**செய்முறை:**

சீனியை அளவான தண்ணீருடன் கலந்து பாகுப்பதம் வரை காய்ச்சி எடுத்து வைக்கவும். துண்டுகளாக நறுக்கிய முந்திரிப்பருப்பை சிறிதளவு நெய்யில் விட்டு வதக்கி எடுத்துக்கொள்ளவும்.

தடிப்பான அடியினை உடைய தட்டையான பாத்திரத்தை அடுப்பிலேற்றி அதனுள் நெய் அல்லது வெண்ணையினை யிட்டு இளஞ்சூடானதும் ரவையை அதனுள் கொட்டி லேசாக வறுத்தெடுக்கவும். ரவை ப்பூப்பு நிறமாவதற்குள் சீனிப்பாகினை அதனுள் கொட்டி, தொடர்ந்து கிளறவும். பால் மற்றும் ஏலக்காயினைப் பொடி செய்து தூவவும். கேசரிப் பவுடரையும் கொட்டி கிளறவும். எல்லாமே ஒன்று திரண்டு-பாத்திரத்திலிருந்து பிடிப்பகலும் பதம் வந்ததும், அகலமான ஒரு தாம்பாளத்தில் அல்லது சம நிலையுடைய அகன்ற பளிங்கின்மீது ரவைக் கலவையினைக் கொட்டி சமமாகப் பரவ வேண்டும். இளஞ்சூட்டுப் பருவத்தில் முந்திரிப்பருப்பு மற்றும் முந்திரி வத்தல் ஆகியவற்றை அளவான இடைவெளிவிட்டுத் தூவி-சற்று உள் அழுத்திவிடலாம். நன்றாக ஆறியதும் சம அளவு துண்டுகளாக வெட்டிப் பரிமாறவும்.

## எனக்கொரு குழந்தை வேண்டும்



உலகப் புகழ் பெற்ற பாடகி மடோனாவுக்கும் குழந்தை பெறும் ஆசை வந்துவிட்டது.
உலக அழகி ஐஸ்வர்யா ராய்க்கும் குழந்தை வேண்டும் என்று கொள்ளை ஆசையாம்.
உலகம் முழுவதும் ஏழைக் குழந்தைகளுக்காக நிதி திரட்டி வரும் ஐஸ்வர்யாராய் சமீபத்தில் கூறியுள்ள நெகிழ்ச்சியான கருத்து யாதெனில்; "உலக அழகி பட்டம் எனக்கு கிடைத்ததை மறந்துவிடுங்கள். அதில் எனக்கு சந்தோசம் இல்லை. எனக்காக எப்போது ஒரு குழந்தையைப் பெறுகிறேனோ அன்றுதான் எனக்கு சந்தோச நாளாகும்" என்கிறார் உலக அழகி.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# தேன் கிண்ணம்

## புனித ரமழான்

இது
இதயங்களின்
இரட்சிப்பின்
மாதம்.
கொழுந்துவிட்டெரியும்
அனல் தீ(மை)ப்பிழம்பின்
கொடூரத்தனத்தை
கொளுத்தி
எரிய வந்த
எரிமலை வேதம்.
••
புண்ணியத்தின்
பூபாளம்
இறக்கைகட்டி
விரிக்க
கண்ணியம்பூசி
கண்களுக்குள்
ஒளிவீசி
பனித்துளிக்குள்
பட்டு
தன் புன்னகையை
பூலோகம்மீது
புத்தகம் எழுதி
புறப்பட்டு வந்துவிட்டது
புனித ரமழான்.
••
மனசுகள்
இனிமேலாவது
மணம்பூசி
துர்நாற்றத்தை
இழந்து கொள்ளட்டும்.
வாழ்வின்
பரிணாம
வடிவங்களை
வடித்துக்கூறவந்த
ரமழான்
வசந்த நினைவுகளை
வாழ்க்கைக்குள்
தள்ளட்டும்.
••
ஷைத்தானியத்தின்
பொய்த்துவம்
சரிந்துகொள்ள
மெய்ப்பொருளின்
மேன்மை
மானுடத்தில்
சாய்ந்துகொள்ளட்டும்.
சுத்திகரிக்கப்பட்ட
இதயங்களுக்குள்
சூனியங்கள்
அகற்றப்படட்டும்
உன் வரவால்
ரணங்கள் எரிக்கப்பட்டு
புதிய
'பீனிக்ஸ்' பறவையாய்
மானுட நேயங்களுக்குள்
வெண்புறா
சமாதான இறக்கைவீசி
பறக்கவிடட்டும்.
••
பணக்காரவர்க்கமும்
ஏழையின்
பசி வயிற்றை
எட்டிப் பார்க்கும்
முப்பது விஷயங்களிலும்
நோன்பு
சுகந்த முகவுரையை
மண்ணில் கோர்க்கும்.
••
மனுஷத்தனத்தின்
மகோன்னத போராட்டம்
இந்த
மாதத்தில்
மகுடமிடும்.
மறைபொருளின்
மலர்வு
செவிகளில்
தொடும்.
••
ஓ.....
புனித மாதமே!
நீ
பூமியில்
புன்னகை தவழவிட்டு
பூத்திடு!
அப்போது
மனிதமனங்கள்
உன்
யதார்த்த ஜீவிதவாசத்தை
உண்மையாய்
(சு)வாசிக்கட்டும்.
••

கிண்ணியா சபறுள்ளா.

## நிதர்சனம்

ஒரு விடியலுக்குத் தவமிருந்தோம்
இதோ.......
மீண்டும் இருள் முற்றுகை
ஆரவாரங்களின் பிரதிபலிப்பு
மயான அமைதி.......

அமைதியின் பின் அசைவது
தென்றலல்ல-புயல்
தென்றலின் தழுவலை
தரிசிக்கத் தவறி......
புயலின் வேகத்துக்கு
தடுமாறுகிறோம்.

விழுந்து விழுந்து
நிசப்தத்தின் சுதந்திரத்தில் கூட
சுயமிழந்து, சுதந்திரமிழந்து...
இருள் வியாபிப்புக்கும்
செவிப்பறை அத்துமீறலுக்கும்
ஏன்.... மூச்சுக்காற்றுக்கும்கூட
அஞ்சி....
அஞ்சாத வாசிகளாகி,
சுதந்திர தேசத்தின்
தரித்திரங்களாகி,
மாண்டு மடிந்து
அழிந்து போகிறோம்.


இப்போதெல்லாம்......
எங்கள் ஜீவிதம்
வெறும் எலும்புகள் போலத்தான்
உணர்விழந்து, உறவிழந்து
உயிரிழந்து......
பூமியில் புதையுண்டு
புழுத்தழிந்த பிணங்கள் போல.........
□□□

ஏ. றூத் சந்திரிக்கா, கோட்டைக்கல்லாறு.

## தூய சிநேகிதம்!

ஜீவ நட்பின்
ஜீரணம் பற்றி...
சின்னக்கவி-பின்ன
வண்ணக் கற்பனையின்
வரிகள் கேட்டாயே
நண்பி!
•
நறுமணக்கும்
நறவுகளைத்தூவி
உறவுக்குள்
ஊறிப்போன சினேகிதியே....!
எம் சினேகமே....
ஒரு கோடி-ஸ்வாரஸ்யம்!
•
ஊதல் பேச்சின்
ஊடலில்
காதல் கல்வியை-எனக்குள்
கல்வெட்டுச் செய்தவளே...!
பௌர்ணமியில் இல்லாத....
பூரணம் உன்னில்!
•
அஞ்சுகமாய்
எனக்குள்
அஞ்சாதவம் வந்த
ஆராமமே-என்
சுபீட்சங்களின்
சுதந்திர தினம்
நீ வந்த தினம்!
•
நுனிப்பார்வையில்
எனக்குள்ளே....
பல
பனிப்பாறைகளை
படியவைப்பவளே...
நாம் கற்றுக் கொண்ட
நட்பு
அழியும்
ஆக்ராவின் சின்னமல்ல!
அழியாத
'காதல் சின்ன'மாவது
திண்ணம்!
•

பாணகமுவ எஸ். முஸ்தாக்-குருநாகல்.



## தடம் புரண்ட சத்தியம்

ஜீவிப்புக்கு
மறுக்கப்பட்ட
அந்த
நாட்களை
நினைத்துப்பார்.

வறுமையால்
எழுதப்பட்ட
வாழ்க்கைப்
பக்கங்களை
புரட்டு.

ஒவ்வொன்றிலும்
எவ்வளவு
சாதனைகள்?
கூழ்முட்டையில்
குஞ்சு பொரித்ததாயும்
உரிமட்டையில்
தென்னை
முளைத்ததாயும்.

எங்களிடம்
தரப்பட்டு
தடம்புரண்ட
சத்தியத்தைப்பார்.

அங்கே
மனிதம்
உயிரோடு
எரிக்கப்பட்டதாய்
எழுதப்பட்ட
செய்தியை
உரத்துப்படி.

இனத்துவேஷத்துக்கு
அணைபோட்டு
விட்டதான
நிகழ்வோடு
கூடவே
கடைசிப்
பக்கத்திலாவது
மானிட நேயம்
மரணிக்கவில்லையென
எழுதிவை!

ஏ. அஹ்மது ஜுனைது-ஏறாவூர்.



## வாழ வழி தேடுகிறேன்!

1. 'ஏழரைச் சனி'யன் என்னைப் பிடித்து
ஏனோ ஆட்டுகிறான்?-அவன்
வாழவிடவும் மாட்டான் போலும்,
வருத்தம் காட்டுகிறான்!

2. உள்ளதை எல்லாம் விற்று முடித்தும்
ஓட்டம் குறையவில்லை!-எனக்கு
'கள்வன்' என்றோர் பட்டமும் தந்தான்
கவலை மறையவில்லை!

3. திட்டம் போட்டு வாழ்ந்தும் பார்த்தேன்
'திருப்தி' கிட்டவில்லை!-வரும்
நட்டம் கண்டே நாளும் துயரம்
ந(ய)லங்கள் எட்டவில்லை!

4. இல்லம் தொடங்கி 'கந்தோர்' வரைக்கும்
இன்னல் குறையவில்லை! - எனை
வல்லோன் என்றே வாழ்த்த மறந்தோர்
'வசை'கள் மறையவில்லை!

5. 'பாதிப்புற்றோர்' பற்றிய பணமும்
பக்கம் சேரவில்லை! -எனைச்
சோதிக்கின்ற சனியின் கோரம்,
சற்றும் மாறவில்லை!

6. உறவுகள்கூட ஒதுக்கும் நிலையை
உலகில் காணுகிறேன்! -நான்
சிறப்புடன் வாழும் ஒருவழி தனையே
செகத்தில் தேடுகிறேன்!

அ. கௌரிதாசன்-ஆலங்கேணி கிழக்கு.

## காந்தி பார்த்த சினிமா

காந்தியடிகள் திரைப்படங்கள் பார்ப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. அவர் முதன் முதலில் 1944ல் 'மிஷன் டு மொஸ்கோ' என்னும் திரைப்படத்தைப் பார்த்தார்.

## கல்லறை வாசகம்

'செக்ஸ் சாமியார்' என்று அழைக்கப்பட்டவர் ரஜனீஸ். அவரது சமாதியில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்கள் வித்தியாசமானவை:

"பிறக்கவும் இல்லை.....
இறக்கவும் இல்லை.....
1930 டிசம்பர் 11ம் தேதி முதல்....
1990 ஜனவரி 19ம் தேதி வரை.....
இந்த பூமி என்னும்
கிரகத்திற்கு விருந்தினராய்
விஜயம் செய்தார்-அவ்வளவே!"

## கூத்தரித்த கூடி ஜோக்ஸ்

நோயாளி: ஆப்ரேஷன் தேதியை எதுக்கு டாக்டர் மாத்தினீங்க?
டாக்டர்: தபால் தந்தி அண்ணைக்கு வேலை நிறுத்தமாம்.

□□

நண்பர்: உங்க மனைவியும், மகளும் மட்டும் ஏதோ சினிமா போய்விட்டு வர்றாங்களே! என்ன படம்?
மற்றவர்: 'மகளிர் மட்டும்'.

□□

வந்தவர்: சூடா என்ன இருக்கு?
சர்வர்: நெருப்பு இருக்கு.
வந்தவர்: கொண்டாங்க, என்கிட்ட சிகெரட் பத்தவைக்க தீப்பெட்டி இல்லை.
சர்வர்: ...............!

□□

நீதிபதி: உனக்கு ஜீவனாம்சம் எவ்வளவு வேணும்?
பெண்: அவர் சம்பளத்தில் பாதி, கிம்பளத்தில் பாதி வேணும் ஐயா!

□□

நீதிபதி: அவள்மீது வேண்டுமென்றுதான் அம்மிக்கல்லைப் போட்டாயா?
அவன்: வேண்டாம் என்றுதான் போட்டேன்!

□□

## கண்டுபிடிக்க 5 நிமிசம்




இரண்டு படங்களுக்கும் இடையில் 7 வித்தியாசங்கள். கண்டுபிடிக்க உங்களுக்கு 5 நிமிடம் மட்டும். விடை; 18ம் பக்கம்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(05.02.95 முதல் 11.02.95 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மகரம் | - சூரியன், புதன் |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |
| கர்க்கடகம் | - செவ்வாய் (வக்கரம்) |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |
| தனு | - வெள்ளி |

சந்திரன்-மீனம், மேடம், இடபம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், பணவரவுதடை. | காலை 6 மணி |
| திங்கள்- | துன்பம் நீங்கும், செய்தொழில் நன்மை. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| புதன்- | பொருள் வரவு, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, தொழில் விருத்தி. | காலை 6 மணி |
| வெள்ளி- | பயனுள்ள செயல், செல்வாக்கு நிலை. | பகல் 12 மணி |
| சனி- | தொழில் நட்டம், மனக்கலக்கம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, இலாபம். | காலை 6 மணி |
| திங்கள்- | பணவரவு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், புதிய முயற்சி. | காலை 7 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், கௌரவம். | காலை 8 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, முன்னேற்றம். | பி.ப. 3 மணி |
| சனி- | வீண் மனஸ்தாபம், தொழில் மந்தம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- | காரியானுகூலம், கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் பகை, மனக் கவலை. | காலை 8 மணி |
| புதன்- | தொழில் மந்தம், பணத்தடை. | காலை 7 மணி |
| வியாழன்- | வீண் குறை கேட்டல், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | தனலாபம், மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, தெய்வானுகூலம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, மனக்குறை நீங்கும். | காலை 8 மணி |
| புதன்- | புதிய முயற்சி, பணவரவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 6 மணி |
| வெள்ளி- | கடன் தொல்லை, மனப் பயம். | பி.ப. 2 மணி |
| சனி- | தெய்வானுகூலம், கௌரவம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | தொழில் விருத்தி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- | முயற்சி பலிதம், காரியானுகூலம். | காலை 6 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- | வீண் குறை கேட்டல், மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, பொருள் வரவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- | உயர்ந்த நட்பு, பணவரவு. | காலை 6 மணி |
| செவ்வாய்- | அந்நியரால் தொல்லை, மனக்கவலை. | பி.ப. 1 மணி |
| புதன்- | உறவினர் பகை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- | தொழில் விருத்தி, மனக் கசப்பு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, வீண் சந்தேகம். | காலை 6 மணி |
| சனி- | தனலாபம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| புதன்- | பயனற்ற செயல், மனக்கலக்கம். | காலை 6 மணி |
| வியாழன்- | தனலாபம், செய்தொழில் விருத்தி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், உயர்ந்த நட்பு. | காலை 7 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், மனக் கலக்கம். | காலை 6 மணி |
| திங்கள்- | உயர்ந்த எண்ணம், தேகசுக நன்மை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் பகை, மனக்கவலை. | காலை 7 மணி |
| புதன்- | வீண்குறை கேட்டல், காரியத்தடை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | உறவினர் உதவி, பணவரவு. | காலை 6 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| சனி- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, உறவினர் உதவி. | காலை 6 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- | தொழில் மந்தம், வீண் செலவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | காரியசித்தி, கௌரவம். | காலை 6 மணி |
| வெள்ளி- | அந்நியர் நட்பு, தொழில் விருத்தி. | காலை 9 மணி |
| சனி- | புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -3

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, காரியானுகூலம். | காலை 7 மணி |
| திங்கள்- | மனக்குறை நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | புதிய தொழில், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| புதன்- | பயனுள்ள செயல், அதிகார விருத்தி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| சனி- | புதிய முயற்சி, செல்வாக்கு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பொருள் இலாபம். | பகல் 12 மணி |
| திங்கள்- | பெரியோர்நட்பு, காரியசித்தி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | துன்பம் நீங்கும், செய்தொழில் விருத்தி. | பி.ப. 1 மணி |
| புதன்- | மனப்பயம், கௌரவக்கேடு. | காலை 7 மணி |
| வியாழன்- | தொழில் மந்தம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| சனி- | மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 9


### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், பொருள் வரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, மனக்கவலை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| புதன்- | தொழில் மந்தம், பொருள் நட்டம். | காலை 6 மணி |
| வியாழன்- | துன்பம் அதிகம், கௌரவக்கேடு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, பொருள் இழப்பு. | காலை 7 மணி |
| சனி- | உறவினர்பகை, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7





## நூலகம்

நூலகத்தில் சேர்ந்திடுவோம்
நுண்ணறிவைப் பெற்றிடுவோம்.
ஆசான் போலக் கதைகளெலாம்
அள்ளி அள்ளித் தந்திடுமே.
நானும் நீயும் சென்றிடுவோம்
நன்மை பலவும் பெற்றிடலாம்.
நண்பர் கூடிப் படித்திடலாம்.
நல்ல பொழுதாய்க் கழித்திடலாம்.
மாத வார இதழ்களையும்
மகிழ்ச்சியோடு படித்திடுவோம்.
நேசமுள்ள தலைவர்களின்
நேர்மை வழியை அறிந்திடுவோம்.
பழமையான நூல்களும்தான்
படிக்க இங்கு கிடைத்திடுமே!
வாங்கிப் படிக்கும் நூல்களையே
வளமாக்க கையாள்வோம்.

செல்வி.பீட்டர் சாந்தி-இரத்தினபுரி.

"சரித்திரத் தேர்ச்சிகொள்
சாவதற்கு அஞ்சேல்
சிதையா நெஞ்சு கொள்
சீறுவோர்ச் சீறு
சுமையினுக்கு இளைத்திடேல்."
-சுப்பிரமணிய பாரதியார்-

## கர்வம் கொள்ளாதே

### பாப்பா முரசு சிறுகதை

ஒரு வீட்டில் மண்பானை ஒன்றும், பித்தளைப் பானை ஒன்றும் இருந்தன. பித்தளைப் பானை சற்றுத் தலைக்கனம் கொண்டது. அது மண்பானையை எப்பொழுதும் ஏளனத்துடன் பார்க்கும். நினைத்தவுடன் கேலி செய்து சிரிக்கும்.

"சாதாரண பிறவி நீ. உன்னால் என்ன பிரயோஜனம். தவறி நீ கீழே விழுந்தால் அவ்வளவுதான். யாருக்கும் உபயோக மில்லாமல் சுக்குநூறாய் சிதறி விடுவாய். பிறகு உன்னைக் குப்பைத் தொட்டியில்தான் வீசவேண்டும். நான் அப்படியா? உயர்ந்த ரக உலோகத்தால் ஆனவன். தவறிக் கீழே விழுந்தால் உன்னைப் போல் சிதறிவிடமாட்டேன். லேசாக நெளிந்துதான் போவேன்.

அதன் பிறகும் வீட்டுக்காரர்கள் விரும்பினால் என்னைப் பயன் படுத்துவார்கள். விரும்பாவிட்டால் பழைய பாத்திரக் கடையில் போட்டுப் பணமாக்கிக்கொள்வார்கள். எந்தவிதத்தில் பார்த்தாலும் நான் மனிதர்களுக்குப் பயன்படக் கூடியவன். நீயோ இழி பிறவி," என்று ஒருநாள் கேலி பேசியது பித்தளைப் பானை.

மண்பானை அவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டு வழக்கம்போல் அமைதி யாகவே இருந்தது.

பித்தளைப் பானை மறுபடியும், "பணக்காராக்கள் உன்னை விரும்பவே மாட்டார்கள். காரணம், நீ அவர்கள் வீட்டில் இருந்தால் அவர்களுக்கும் கௌரவக் குறைச்சல் ஏற்படும் என்பதால்தான். நான் அவர்கள் வீட்டில் இருப்பதற்கென்றே பிறந்தவன். அவர்களுக்கு கௌரவம் பெற்றுக்கொடுப்பவன். என்னை அவர்கள் பராமரிப்பதே தனிதான். நன்றாகப் புளிபோட்டு விளக்கி, நல்ல நீரில் குளிப்பாட்டி, என் வயிறு நிறைய தண்ணீரையும் ஊற்றி என்னையும் திருப்திப்படுத்தி அவர்களும் திருப்திய டைவார்கள்.

"நீ ஏழை வீட்டில் இருப்பதற்கென்றே பிறந்தவன். அவர்களுக்குத்தான் நீ உசத்தி. அதுகூட ஏன் தெரியுமா? என்னை விலை கொடுத்து வாங்க அவர்களுக்கு வசதி இல்லாததால்தான், வேறு வழியில்லாமல் உன்னை வாங்குகிறார்கள். அவர்கள் என்ன சிரமப்பட்டாவது என்னை வாங்கினால், ஒரு அவசரத்திற்கு அடகு வைக்கவாவது நான் உதவுவேன். நீயோ கோபத்தில் போட்டு உடைக்கத்தான் பயன்படுவாய். உன் வாழ்க்கையை உடைக்கத்தான் பயன்படுவாய். உன் வாழ்க்கையை நினைத்தால் எனக்குப் பரிதாபமாகக்கூட இருக்கிறது" என்று சொன்னது.

சிறிது நேரம் மௌனமாய் இருந்த மண்பானை திடீரென்று பேச ஆரம்பித்தது.

"நீ கூறியது அனைத்தையும் நான் ஒப்புக்கொள்கிறேன். ஒன்று சொல்கிறேன். நன்றாகக் கேட்டுக்கொள். நான் மண்ணாக இருப்பதால் தாழ்வு அடைந்துவிடவும் இல்லை. நீ பித்தளையாக இருப்பதால் மிகவும் உயர்ந்து விடவும் இல்லை.

இந்தப் பூமியை எடுத்துக்கொள். இது எந்த உலோகத்தினாலும் ஆக்கப்படவில்லை. மண்ணினாலும் தண்ணீராலும் ஆக்கப்பட்டது. அதைப் போலவேதான் நானும் உருவாக்கப் பட்டிருக்கிறேன். இந்த உலகம் தோன்றிய நாளிலிருந்தே நானும் இருக்கிறேன். என் போன்ற மண்ணிற்குள்தான் உன் போன்ற உலோகங்கள் இருக்கின்றன, என்பதை நீ உணர்ந்துகொள்ள வேண்டும்.

நீ பணக்காரர்கள் வீட்டில் இருந்தால் மதிப்பு என்கிறாய். அதே பணக்காரர்கள் என்னையும் விரும்புகிறார்கள். எப்பொழுது தெரியுமா? அவர்கள் வீட்டில் திருமணம் நடக்கும் பொழுது, என்னைக் கல்யாணப் பானையாக மாற்றி, மணமக்கள் அருகில் வைத்து நிறைய கௌரப்படுத்து கிறார்கள்.

பொங்கல் திருநாளின்போது நாடே என்னைத்தான் மங்களகரமாக விரும்பி பொங்கல் வைக்கப் பயன்படுத்துகின்றது. சங்கீத கச்சேரிகளில் கடம் வாசிக்கும் வித்துவான்களுக்கு முன் நானே அமர்ந்திருக்கிறேன்.


இவை தவிர மனித வாழ்வின் முடிவில் என்னைத்தான் நெருப்பு அள்ளிச் செல்லும் பாத்திரமாகவும், தண்ணீர் குடமாகவும், கண்ணீர் அஞ்சலி செலுத்தும் மௌன சாட்சியாகவும் பயன்படுத்துகிறார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் உன்னைவிட நான்தான் அனைத்துத் தர மக்களுக்கும் பயன்படுகிறேன். ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வுகளின்றி அனைத்து மக்களுக்கும் எந்நேரமும் உதவுகிறேன்.

இதோ பார், உயர்ந்ததுபோல் தோற்றமளிக்கும் எதுவும் உயர்ந்ததுமல்ல தாழ்ந்ததுபோல் தோற்றமளிக்கும் எதுவும் தாழ்ந்ததுமல்ல. உயர்வு, தாழ்வு என்பது தோற்றத்தில் இல்லை. எண்ணக்கூடிய எண்ணங்களில்தான் உள்ளது. ஆகவே, நீ இனிமேலும் தற்பெருமை பேசிக்கொண்டு இருக்காதே. இப்பொழுது நான் பேசியது எல்லாம் தற்பெருமை அல்ல. என் உபயோகம் பற்றிய விபரங்கள் இவற்றைத் தெரிந்துகொண்ட நீ, இனிமேல் என்னைக் கேவலமாகப் பேசமாட்டாய் என்றே நினைக்கிறேன்."

மண்பானையின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் பித்தளைப் பானையின் மேல் சாட்டையடிகளாக விழுந்தன. அப்போதே அதன் கர்வம் ஒழிந்தது.

அன்றிலிருந்து அது மண்பானையைக் கேலி செய்வதை விட்டுவிட்டது.



## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 11.02.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 77
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 74

பரிசுக்குரியவர்:
செல்வி. பு. கீதாஞ்சலி
றோ.க.த.கலவன் பாடசாலை, வத்தளை.

பாராட்டுக்குரியவர்கள்:

எல். வசந்தமலர்
பலாபத்வெல தமிழ் வித்தியாலயம், மாத்தளை.

வே. ரஜிவித்தா-
புணாணை வித்தியாலயம், மட்டக்களப்பு.

என்.எம். முகமட் மஹாஸின்
ஸாஹிரா கல்லூரி, புத்தளம்.

இ. பாத்திமா பர்வீன்
கடுகஸ்தொட்டை.

இ. திவ்யவதனி
டிக்கோயா.

## விடுகதைகளும் விடைகளும்


1. பறவை ஒன்றையும் ஒரு வில்லையும் இணைத்தால் ஒரு ஊரின் பெயர் வரும். அது எந்த ஊர்?
2. நான்கெழுத்தில் ஊர் ஒன்று உண்டு. இரண்டாவது எழுத்தை எடுத்தால் அது மிருகங்களுக்கு உண்டு. அது என்ன?
3. வெளியே முள்ளுச்சட்டை, உள்ளே மஞ்சல் சட்டை. அது என்ன?
4. ஊரின் பெயர் பின்னால் இருக்கும். கழுத்தில் அணிவது முன்னால் இருக்கும். அந்த ஊர் எது?
5. இன்று ஒரு பெயரை வைத்திருப்பான். நாளை வேறு ஒரு பெயரை வைத்துக்கொள்வான். யார் அவன்?
6. மணமில்லை. நிறமில்லை. பெயருண்டு. சுவை இல்லை. அது என்ன?
7. மூன்றெழுத்தில் ஊர் ஒன்று உண்டு. கடைசி எழுத்தை எடுத்தால் பார்க்கக்கூடிய பொருள் ஒன்று உண்டு. அது எந்த ஊர்?
8. பருகக் கூடிய ஒன்று முன்னால் உண்டு. ஊர் ஒன்று பின்னால் உண்டு. அந்த ஊர் எது?
9. பிறந்தால் ஒரு பெயர்- இறந்தால் ஒருபெயர்-எரிந்தால் ஒரு பெயர்-பறந்தால் ஒரு பெயர். அது என்ன?
10. பல நிறத்திலே பிறப்பான். ஒரே நிறத்திலே மடிவான். யார் அவன்?
11. நான்கு கால்கள் உண்டு- மூன்று எழுத்துக்களும் உண்டு. நடு எழுத்தை எடுத்தால் அது கடலுக்கு உண்டு. அது என்ன?
12. இளமையில் சட்டை களட்டமாட்டான். முதுமை வந்தால் சட்டை களட்டுவான். அது என்ன?
13. காயும் பழமும் பூசைக்கு உதவும்- பூவிரண்டும் கறிக்கு உதவும். அது என்ன?

### விடைகள்

01. கொக்குவில் 02. கொழும்பு 03. பலாப்பழம் 04. மாலைதீவு
05. கிழமை நாட்கள் 06. தண்ணீர் 07. கண்டி
08. நீர்கொழும்பு 09. புகை 10. சவர்க்காரம்
11. கதிரை 12. வாழைப்பழம் 13. தேங்காய்ப்பூ-வாழைப்பூ


ஏ.சீ.எப் குத்தூசியா-நீர்கொழும்பு.

## தப்பிக்க ஒரு தந்திரம்




அமெரிக்கா, மெக்சிக்கோ நாடுகளில் உள்ள ஒரு வகை ஓணான்களுக்கு 'சக்வாலா' என்று பெயர். எதிரிகள் இவற்றைப் பிடிக்க வரும்போது பாறை இடுக்குகள், மரப்பொந்துகளுக்குள் சென்று தனது உடலை பெரிதாக்கி, எதிரிகள் இவற்றை வெளியே இழுக்க முடியாமல் செய்துவிடும். 'சக்வாலா' ஓணான்கள் 60 சென்ரி மீற்றர் நீளம் வளரும். இவற்றின் எடை ஒரு கிலோ. இலைகளும், பூக்களும்தான் இவற்றின் உணவு.

## அறிவோம் மனதில் பதிவோம்



லிபியா நாட்டு கூடைப் பந்தாட்ட அணியில் 1962ம் ஆண்டு விளையாடிய சுலைமான் அலி நஷ்னுஷ் என்ற வீரரின் உயரம் 8 அடி.



முற்காலத்தில் ஐரோப்பியர்கள் காயங்களை மோதிர விரலால் தடவுவார் கள். மருத்துவர்களும் மோதிர விரலால் தான் மருந்திடுவார்கள். இப்படிச் செய்தால் விரைவில் காயம் ஆறிவிடும் என்று இவர்கள் நம்பினார்கள்.

### மழலைக் குறும்பு

## சின்னக் கணக்கு

என்ற மருமகனின் கடைப் புதல்வன். பெயர் சிவரூபன்.

என்னிடம் ஒருநாள் பட்டம் வாங்கித் தருமாறு கேட்டான். அடுத்த வருடம் ஆரம்ப பாடசாலைக்கு கல்வி கற்க போக வேண்டியவன். கொஞ்சம் சுறுசுறுப்பானவன். மழலை மொழியில் வார்த்தைகளை அள்ளி வீசுவான்.

'நான் ஒரு சின்னக் கணக்கு கேட்பேன். நீங்கள் சரியாகச் சொன்னால் இரண்டு பட்டங்கள் வாங்கித் தருவேன்' என்றேன்.

சிவரூபனும் 'ஆம்' என்றான்.

நான் சொன்னேன்- 'ஒரு பட்டம் ஒரு ரூபாய் ஐம்பது சதம். அப்ப இரண்டு பட்டங்களின் விலை என்ன...?

சிவரூபன் சிரித்தான். சிரித்துவிட்டு சொன்னான்.

'ஒரு பட்டம் ஒரு ரூபா ஐம்பது சதம்....ஒரு பட்டம் ஒரு ரூபா ஐம்பது சதம். அப்ப இரண்டு பட்டம் அப்ப இரண்டு பட்டம்... இரண்டு ஒரு ரூபாய் ஐம்பது சதம்..சரிதானே...'

எனக்கு சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது. அவன் சொன்னதும் சரிதானே!

## நினைவில் வைக்க...

வானவில்லின் ஏழு வர்ணங்களை நினைவுபடுத்த VIBGYOR என்று இருப்பது போல் ஞாயிற்றுத் தொகுதி யின் கோள்களின் வரிசையை, My very Educated mother just showed us Nine Planets" என்ற சொற்றொடரில் உள்ள முதல் எழுத்துக்களைக் கொண்டு நினைவில் வைத்துக் கொள்ளலாம். பின்னர்,

M-Mercury (புதன்)
V-Venus (வெள்ளி)
E- Earth (பூமி)
M-Mars (செவ்வாய்)
J-Jupiter (வியாழன்)
S-Saturn (சனி)
U-Uranus (யுரேனஸ்)
N-Neptune (நெப்டியூன்)
P-Pluto (புளூட்டோ)
என்று விரிவாக்கிக் கொள்ளலாம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# 7

# மகா சூலம்



உச்சிமுதல் பாதம்வரை வெள்ளைப் பட்டு உடுத்திய ஒரு யுவதி! கோகுலுக்கு எதிரில் நின்றுகொண்டிருந்தாள்.

முகமெல்லாம் வெளிறிப்போன நிலையில்...மிரண்டுபோய் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான் கோகுல்.

நீலகண்டன் திருமேனியின் உடம்பு, தெப்பத்தில் மூழ்கி எழுந்தாப்போல், நனைந்து போயிருந்தது.

மகனின் எதிரில் நிற்பவள் சுமதியே அல்ல!

வேறு எவளோ!

எப்படி இவள் மகனின் அறைக்குள் நுழைந்தாள்? யாரவள்?

நீலகண்டன் திருமேனி சாவித் துவாரத்தில் பதித்த கண்ணை அகற்றவில்லை! என்னதான் நடக்கிறது உள்ளே?

மகனின் சாந்தி முகூர்த்தமல்ல அது! வேறெதுவோ! விபரீதம். நீலகண்டன் கவனித்துக்கொண்டே இருந்தார்.

பாதக் கொலுசு மணி தரையில் பட்டுச் சிதறியதுபோல் நாதச் சிதறலும் நளினச் சிரிப்பும் கலந்து போதத்தைக் கலவரப்படுத்தியது!

யாரிவள்? நிமிர்ந்து நின்று சுற்று முற்றும் பார்த்தார்.

இல்லத்துக்குள்ளேயும், பூமுகத்திலும் ஏதேதோ காட்டுப் பூக்களின் பெயர் தெரியாத மணம்!

கப்பிப் படருகிறது...காலம் தவறிப் பூத்த மலர் மணம்.

நீலகண்டன் மறுபடியும் ஒருமுறை சாவித் துவாரத்தில் கண்ணைப் பதித்துப் பார்த்தார்.

அப்போது கோகுல் முன்னைவிட வெளிறிப்போய்த் தெரிந்தான்.

பீதியால் நிறைந்திருக்கும் விழிகள்.

பிடரியில் வளைந்து நிற்கிறது கழுத்து!

"கோகுல்! என்னை நீங்கள் ஏமாற்றி விட்டீர்கள்! எத்தனை எத்தனை ஆண்டுகளாயின... உங்களுக்காகவே நான் காத்துக் கொண்டிருக்கிறேன் கோகுல்!"

பேச்சே மாறிப் போயிருந்தது!

"...எப்படி என்னைத் தங்களால் மறக்க முடிந்தது? நினைவு கூர்ந்து பாருங்கள்! எனக்கு அல்லவா நீங்கள் முதன் முதலாகத் தாலிகட்டினீர்கள்? வர்ண மாலை சூட்டி என்னை மணவாட்டியாக வரித்துவிட்டு வேறொருத்திக்குச் சொர்ணத் தாலி போட்டால் விட்டுவிடுவேனா நான்?"

கோகுலின் முகம் மறுபடியும் வெளிறியது.

"நீ...நீ...யாரு? இதுக்கு முன்னால உன்னை நான் பார்த்ததே இல்லே..! நீ பேசற பேச்சும் புரியலே. நீ சொல்ற நிகழ்ச்சியும் ஞாபகமில்லே..! விலகு என்னை விட்டு!"

கோகுல் கத்தினான். உலர்ந்துபோன உதடுகள் பிரியமறுத்தன.

உடனே அவள் சிரித்தாள்.

மணி குலுங்கினாப்போல் நாதம்; பிறகு வார்த்தைகள்...

"கோகுல்! என்னை ஆட்கொண்டவரே! உங்களால் என்னை எப்படி மறக்கமுடியும்? நினைவுகூர்ந்து பாருங்கள்! என் கழுத்தில் அல்லவா தாங்கள் முதன் முதலாக வர்ண மாலை சார்த்தினீர்கள்? அப்போதே தங்களை நான் என் ஆருயிர்க் கணவராக வரித்துக்கொண்டாயிற்று. இனி நீங்கள்...இன்னொருத்திக்குச் சொந்தம் ஆவதா? முடியவே முடியாது! நீங்கள் என்றுமே எனக்கு உரியவர். எனக்கு மட்டும்தான் தாங்கள்"

நீலகண்டன் திருமேனியும் அவள் பேசுவதைக் கேட்டுக்கொண்டுதான் நின்றிருந்தார்.

அவருக்கு அவளை மானிடப் பெண்ணாகக் கருத முடியவில்லை.

ஏதோ ஒரு யக்ஷி மனித உருவம் எடுத்து வந்திருக்கிறது... அது கோகுலைத் தனது மாய வலையில் சிக்க வைக்கப் பார்க்கிறது... அதில் அவன் விழுந்து விட்டால்.. ஆபத்துதான் வாழ்க்கை முழுக்க!'

நீலகண்டன் யோசித்தபடியே நிமிர்ந்து நின்றார்.

மகனை இந்தப் பிசாசிடமிருந்து காப்பாற்ற என்ன வழி?'

யோசித்தார் அவர்.

'எங்கேயோ அவனுக்கு அவனையுமறியாமல் ஏதோ ஒரு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது! நிச்சயம்!'

நீலகண்டன் மறுபடியும் கதவிலே கண்ணை வைத்தார்.

அவள் பேச்சுக்குக் காதையும் கொடுத்தார்.

ஒரே ஒரு மகன்.

இல்லத்தின் பெயரையும் பாரம்பரியத்தையும் காப்பாற்ற வேண்டியவன்... இவனுக்குப்போய் இப்படி ஒரு ஆபத்தா?

தனது உபாஸனா மூர்த்திகளை எல்லாம் மனசில் வருவித்துக்கொண்டார் நீலகண்டன் திருமேனி.

இனியும் பொறுத்துக்கொண்டிருக்கக் கூடாது!

சட்டென்று கதவைத் தட்டினார். "மகனே-கோகுல்! அப்பா... அட, ஐயா... கதவத் தெற கோகுல்!"

அவரது குரலின் ஈனஸ்வரம் வெகு நேரத்துக்குப் பிறகுதான் உள்ளே கேட்டதோ... என்னவோ!

திடீரென்று அறைக்குள்ளிருந்த வெண் பட்டு மோகினி...மாயமாகிவிட்டாள்! கோகுல் ஓடி வந்து கதவைத் திறந்தான்.

அவன் முகம் ரத்தம் செத்துப்போன சவம்போலிருந்தது!

கண்களும் வெளிறியிருந்தன.

உடம்பு மொத்தமும் நடுக்கம். வியர்வை முத்துக்கள் முகத்தில் தெளித்திருந்தன.

அவன் கதவைத் திறக்கவும், நீலகண்டன் திருமேனி அறைக்குள் ஒரே பாய்ச்சலாய்ப் புகுந்தார்.

"யாருப்பா..? யாரது..? யாரவள்? உன்கூட இவ்வளவு நேரமும் ஏதேதோ விளங்காத மாதிரிப் பேசினாளே...யாரு கோகுல் அது?"

அறைக்குள் சுற்றுமுற்றும் துளாவினார் நீலகண்டன் திருமேனி.

"ஆமாப்பா! யாருன்னே தெரியலே! அவதான் என்னோட இவ்வளவு நேரமும் பேசிகிட்டே இருந்தா! நீங்க கதவத் தட்டினதுமே திடீர்னு மாயமாயிட்டா!"

கோகுலும் துளாவினான் அறை முழுக்க.

"கதவத் தாழ் போட்டப்புறம்தான் அவ என் கண்ணுக்கு முன்னாலே நின்னப்பா! எந்த வழியா எப்படி வந்தா..? புரியலே!"

சொல்லிக்கொண்டிருந்தபோது-

கோகுலின் கைகளில் சுருண்டிருந்த உரோமக் கால்கள் விறைத்து எழுந்தன! ரோமாஞ்சலி செய்தன.

உடனே மகனின் கையைப் பற்றியபடி வெளியே இழுத்துப்போனார். நேராகப் போய்ப் பூஜை அறையின் கதவுகளைத் திறந்தார். "உட்காருடா இங்கே!"

சொல்லிவிட்டு பூஜை அறைக்குள்ளிருந்த நிலை விளக்குகள் அனைத்தையும் ஏற்றினார்.

பூஜை அறைக்குள் நட்சத்திரக் கூட்டம் வந்து இறங்கியதுபோல் ஒளிவெள்ளம் ஜ்வலித்தது.

நீலகண்டன் திருமேனி ஒருசரட்டில் கோர்த்த தாயத்தை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு பத்மாசனமிட்டு அமர்ந்தார். கண்களைப் பாதி மூடிய நிலையில் மந்திரம் உச்சாடனம் செய்தார்.

பிறகு?

அந்தக் கவசத்தை மகனின் கையில் தந்தார்.

"கட்டிக்கடா. இடுப்பில கட்டிக்க. எந்தப் பீடை பிசாசா இருந்தாலும் உன்னை வந்து அண்டாமல் பாதுகாக்கற கவசம் இது..! எந்த நேரமும் இது உன் இடுப்பிலேயே இருக்கணும். அவிழ்க்கக்கூடாது!"

கோகுல் அதை இப்படியும் அப்படியும் திருப்பிப் பார்த்தான்.

இடுப்பிலிருந்த அரைஞானில் கோர்த்துக் கட்டினான்.

"...நாளைக்கு நான் சாயுங்காலம் இல்லத்துக்குத் திரும்பி வருவேன். அது வரைக்கும் நீங்க யாருமே சுமதியைத் தேடக்கூடாது!"

சொல்லிவிட்டு ஆவணிப் பலகையின் அருகே கிடந்த மேல் துண்டை எடுத்துப் போர்த்தபடி வேகமாக வெளியேறிப் போனார் நீலகண்டன் திருமேனி.

இடுப்பில் கட்டிய தாயத்தை வெளியே தெரியாமல் உள்ளுக்குப் போட்டுக்கொண்டு வேட்டியை மேலே சுற்றிக்கொண்டான் கோகுல்!

தகப்பனார் போகிற திசையையே பார்த்துக்கொண்டிருந்தான் மகன். பிறகு..?

தான் படுத்திருந்த அறையைக் கடந்து வேறொரு அறைக்குப் போனான் அவன்.

□□□

மகனின் வாழ்க்கையோடு விளையாடிய ஆபத்தைப் பற்றி வேறு யாரும் அறிந்து கொள்ளவில்லை என்றாலும்.. நீலகண்டன் மிகமிகத் தெளிவாகவே புரிந்து கொண்டிருந்தார்.

அவனை இழப்பதற்கு இந்த ஒரு ஆபத்தே போதும்!

ஆனால்...அந்த ஆபத்துக்கு மகன் பலியாகக்கூடாது என்கிற ஓர் எச்சரிக்கையும், கவனமுமே நீலகண்டன் திருமேனியை இப்படி ஒரு திடீர்ப் பயணத்துக்குத் தூண்டி விட்டிருந்தது. சந்தேகமேயில்லை.

நீலகண்டனுக்கு எப்படியோ இது புரிந்துவிட்டது! சோபன அறையில் கோகுலை வந்து மிரட்டியது ஒரு யக்ஷிதான்! நீலகண்டன் நினைத்தால் அவளைத் தனது மந்திரங்களால் கட்டி இழுத்துக்கொண்டு போய்த் தண்டிக்க முடியும்! என்றாலும் தானறிந்த மந்திரங்கள் மட்டும் இதற்குப் போதுமா? இதுதான் சந்தேகமாக இருந்தது.

ஒருவேளை-இந்த மந்திரங்களுக்கெல்லாம் கட்டுப்படாத வேறு ஏதாவது ஒரு பைஸாஸிக சக்தியாக இருந்தால்... அதோடு போராடுவது அவ்வளவு சுலபமான விஷயமல்ல! எனவேதான் இப்படி ஒரு தீர்மானமெடுத்தார் நீலகண்டன்.

வந்திருக்கிற யக்ஷிணி சாதாரணமானவள் அல்ல! ஒரு மாந்திரீகனின் கோட்டைக்குள்ளேயே அத்துமீறி வந்திருப்பவளைச் சாதாரணமாகக் கருத முடியுமா?

அதனால்தான் மகனை வெளியே இழுத்துக்கொண்டு வந்தார்.

அவனுக்கு 'ரட்சாபந்தன்' கட்டினார்.

இப்போது..? தான் நினைத்த முடிவைச் செயல்படுத்த வேறு இடம்தேடிப் போய்க் கொண்டிருந்தார் நீலகண்டன் திருமேனி.

கோகுலை எப்படி இந்தப் பிசாசு காதலித்தது?

எப்போது இவன் அவளுக்கு வர்ண மாலை சார்த்தித் தாலி கட்டினான்? இது நடந்தது இதே ஜென்மத்திலா? அல்லது பூர்வ ஜென்மங்களிலா?

இருட்டைக் கிழித்தபடி நீலகண்டன் திருமேனி ஒரு மகாப்பெரிய போருக்கு ஆயத்தமானதுபோலப் போய்க்கொண்டேயிருந்தார்.

□□□

"எங்கே? எங்க மக எங்கே?" சுமதியின் தந்தையும் தாயும் இருட்டுக்குள் அலறியடித்தபடி வந்துகொண்டிருந்தனர். அவர்களைத் தொடர்ந்து உறவினர்களும்!

எப்படியோ தெரிந்துவிட்டது அவர்களுக்கு.

முதலிரவுக்காகக் கோகுலின் அறைக்குள் அலங்கரித்து அனுப்பப்பட்ட சுமதியைக் காணவில்லை என்று இல்லத்தின் வளைப்புக்குள் தேடியவர்களில் யாரோ சிலர் சுமதியின் வீட்டுக்கும் போனதுதான் அந்தப் பெற்றோர்களைப் பேதலிக்கச் செய்துவிட்டிருக்கவேண்டும்.

பதறிப்போய் வந்தவர்களின் எதிரில் மாட்டிக்கொண்டார் சுமதியின் மாமனார்.

"எங்க போயிட்டா..? எங்க மகள் என்ன ஆனா? சொல்லுங்க திருமேனி! சொல்லுங்க! நீங்க எங்கே போயிட்டிருக்கீங்க?"

சுமதியின் தகப்பனார் நீலகண்டனைக் குலுக்கி எடுத்தார்.

கேள்வி அம்புகளால் துளைக்கப்பட்ட நீலகண்டன் திணறிப்போனார்.

"தயவு செய்து பதட்டப்படாதீங்க. சுமதிக்கு ஒண்ணும் ஆகாது. ஆகக் கூடாது. அதுக்காகத்தான் போயிட்டிருக்கேன்... என்னைத் தடுக்காதீங்க திருமேனி!" என்றார் நீலகண்டன்.

அவர் சொன்னது எதுவும் சுமதியின் பெற்றோர்களை ஆறுதல்படுத்தவில்லை. உடனே தனது சம்மந்தியை மட்டும் தனியாக இழுத்துக்கொண்டுபோய் நிறுத்தி நீலகண்டன் விவரம் சொன்னார்.

இதைக் கேட்டதுமே அந்தக் கிழவர் நடுநடுங்கிப் போனார்.

"கடவுளே!" என்று கத்தினார். தரையில் அப்படியே உட்கார்ந்துவிட்டார். இதைக் கண்டதுமே உறவினரும் கிழவரின் 'அந்தர் ஜனமும்' ஓடிவந்து அவரைத் தாங்கிக் கொண்டனர்.

"நாளைக்கே இதுக்கு ஒரு பரிகாரம்.. நான் செய்யறேன் திருமேனி. நீங்க எல்லாரையும் அழைச்சுட்டு இல்லத்துக்குப் போங்க."

கெஞ்சினார் நீலகண்டன்.

அவர்கள் போகவில்லை. மகளைப் பார்க்காமல் அங்கிருந்து சுமதியின் அப்பா எழுமாட்டார் என்கிற பிடிவாதம் தெரிந்தது. அதற்கும் மேல் வைராக்யத்தோடு நின்றார்கள் உறவினர்கள் அத்தனை பேரும். சுமதியைப் பெற்ற தாய் பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்தாள்.

இவர்களை எல்லாம் நின்று சமாதானம் செய்கிற நேரமா?

நீலகண்டன் புறப்பட்டிருக்கிற காரியம் முடிந்தால்தான் எல்லாருக்குமே நிம்மதியும், மூச்சும்! இதை எப்படி அவரால் வெளியே சொல்ல முடியும்? சொல்லக் கூடாத பயணம், துவக்கியபோதே இப்படி ஒரு சொல்ல முடியாத சகுனத் தடையா?

குழப்பத்தோடு நின்றிருந்த நீலகண்டன் கடைசியாக ஓர் உபாயம் செய்தார்.

"நீங்க எல்லாரும் நம்ம இல்லத்திலே போய்த் தங்கியிருங்கோ! நான் இதோ திரும்பி உங்க பின்னாலயே வந்துடறேன்..." என்றார். சொன்ன மறுகணமே விருட்டென்று தம்முடைய இலட்சியம் நோக்கி நடக்கவும் ஆரம்பித்தார்.

அது நடையா? இல்லவே இல்லை. கிட்டத்தட்ட ஓட்டம்!

□□□

கந்தர்வன் காட்டைக் கடந்து திரும்பிய பாதையின் முக்கில் யாரோ தனக்காகக் காத்திருப்பதைப்போல் ஓர் உணர்வு-நீலகண்டனுக்கு. அந்த முக்கைத் தாண்டிய மறுகணம் யாரோ தன்னை அழைப்பது போல் ஒரு பிரமை!

திருமேனி திரும்பித் திரும்பிப் பார்த்தார்.

யாரையும் காணவில்லை. என்றாலும் உள்ளே ஏதோ ஒரு உணர்வு எச்சரித்துக் கொண்டே இருந்தது.

தைரியத்தை வருவித்துக்கொண்டு மனசுக்குள் உபாசனாமூர்த்திகளையும் அழைத்தபடி வேகமாக ஓட ஆரம்பித்தார் நீலகண்டன் திருமேனி.

இதுமாதிரி உபாசனா மூர்த்திகளை நினைக்கிறபோது நெஞ்சில் வேறு எந்த நினைப்போ ஆக்ரமிப்போ ஏற்படாது என்பதுதான் மாந்திரீக இயல்பு. ஆனால்... இப்போது?

உருப்போட உருப்போட அந்த மந்திரங்களையும் விரட்டுகிற மாதிரி அதே பழைய உர்ணவும், பிரமையும்!

அவரை யாரோ பின்னால் துரத்திக் கொண்டு ஓடி வருவதைப்போல் ஒரு தோணல்!

□□□

இதே நேரம்-இல்லத்தின் மற்றொரு அறைக்குள் நுழைந்து நிம்மதியாகத் தூங்க எத்தனித்தான் கோகுல். புதிய இடம்..! எப்போதும் படுக்கிற இடத்தைவிட்டு, இடம் மாறிப் படுத்தால் ஏற்படுகிற தவிப்பு-அது பாலேக்கல் இல்லமே ஆனாலும் கோகுலைச் சோதிக்கிற தவிப்பாகத் தெரிந்தது. திருமேனி வரும்வரை தனது அறைக்குள் அடியெடுத்து வைக்கக் கூடாது என்பது அல்லவா உத்தரவு?

நல்ல காலம்- அந்த நேரம் தன் தந்தை மட்டும் வந்து கதவைத் தட்டியிருக்காவிட்டால்... என்ன செய்திருப்பாள் அந்த யக்ஷிணி?

நினைத்துப் பார்க்கவே நெஞ்சுக்குச் சக்தியில்லை.

இடுப்பைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். தாயத்து பத்திரமாக இருந்தது. அறைக்குள் எரிந்த அரிக்கன் விளக்கைத் திரி நீட்டி வைத்தான். பிறகுதான் கதவைச் சாத்தாமல் உள்ளே வந்திருந்தது ஞாபகம் வந்தது. எழுந்துபோய்க் கதவை இழுத்துச் சாத்தித் தாழிட்டான் கோகுல்.

இந்த அறைக்குள் நுழைந்தபோதே எல்லா இடத்தையும் ஒரு தடவைக்கு இரு தடவை பரிசோதித்துவிட்டுத்தான் கட்டிலில் படுத்தவன் அவன். அப்பாடி! கதவைத் தாழிட்ட பிறகு...

மனசுக்குள் ஒரு பெரிய நிம்மதி.

கண்களை மூடி ஒரு நிமிடம் கடவுளை நெஞ்சில் நிறுத்தினான் கோகுல்!

ஒரு பெரிய ஆபத்திலிருந்து மீண்டு வெளியே வந்துவிட்ட நிம்மதியை அவன் முழுமையாக அனுபவித்து மறு மூச்சு விடும்போது-

குப்பென்று அணைந்தது விளக்கு. அறை முழுக்க அந்தகாரத்தின் கும்மிருட்டு! திணறிப்போன கோகுலின் காதில்- பாதக் கொலுசு மணியின் நாதச் சிரிப்பு! கலுக்கென்றது. அவளேதான்! வேர்த்தது கோகுலுக்கு.

(தொடர்ந்து வரும்)

## எழுதுவது யார்?


**தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் 'முரசு'க்காக எழுதும் தொடர் இது!**

வாசகர்களின்
ஊகிப்புத் திறனுக்கு சவால்!
கண்டுபிடிக்கும் வாசகர்களில்
பத்து அதிஷ்டசாலிகளுக்கு
அசத்தலான-பரிசுகள் காத்திருக்கின்றன.
தொடர்ந்து வாசியுங்கள்
நாம்கேட்கும்போது
விடையை எழுதி அனுப்பினால் போதும்.


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: கே. செந்தில் குமார்
வயது: 20
முகவரி: 26/2, சென்.ஜோசவ் வீதி, நுகேகொடை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, உதைபந்து.




பெயர்: எம். சர்தார்
வயது: 22
முகவரி: 76, சிலாபம் வீதி, கொச்சிக்கடை.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், பத்திரிகை.




பெயர்: பி. துவாரகா
வயது: 17
முகவரி: இலங்கை வங்கி வீதி, களுவாஞ்சிக்குடி.
பொழுதுபோக்கு: வழமையான பொழுது போக்குகள்.



பெயர்: ஏ. நஸ்மியா
வயது: 18
முகவரி: பன்மியா ரீ றூம், சிராஜ்நகர், தம்பலகாமம்.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பூந்தோட்டம்.



பெயர்: எஸ். கேதீஸ்வரன்
வயது: 23
முகவரி: 43, CHASE COURT, MARKHAM ONTARIO, CANADA.
பொ.போ: தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை.



பெயர்: எம்.பௌசி
வயது: 25
முகவரி: AL-ALI BANK OF KUWAIT P.O.BOX- 1387, SAFAT, KUWAIT.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, உதைப்பந்தாட்டம்.

பெயர்: கே. சிறி நடராஜலிங்கம்
வயது: 28
முகவரி: PULVERMUHLEE STR-11, 7000 CHUR, SWITZERLAND
பொ.போ: தொலைபேசி காட் சேகரித்தல்.

பெயர்: எம். வஸீர்
வயது: 25
முகவரி: P.O.BOX-10015, KKAB/RSAF KHAMIS MUSHAIT 11451, K.S.A.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: சி. பிரதீபன்
வயது: 16
முகவரி: 111 14, சிறீ ஞானாந்த மாவத்தை தொடர்மாடி, கொழும்பு-13.
பொழுதுபோக்கு: முத்திரை சேகரித்தல், தொலைக்காட்சி, வானொலி.

பெயர்: எம். பௌசாத்கான்
வயது: 18
முகவரி: 22, பஹல கொட, குருத்தலாவ.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ரீ. நவச்செல்வன்
வயது: 14
முகவரி: அக்கரப்பத்தனை டிவிஷன், யூரி குறூப், பசறை.
பொ.போ: வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: எவ். ரமீஸ்
வயது: 17
முகவரி: அல்லை வீதி, தோப்பூர்-03.
பொழுதுபோக்கு: கிரிக்கெட் விளையாடுதல், முத்திரை சேகரித்தல்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தாய்

"பெலகேயா நீலவ்னா எப்படி இருக்கிறீர்கள்? உங்கள் மகன் எப்படி இருக்கிறான்? அவன் கல்யாணம் ஏதும் பண்ணப்போகிறானா, இல்லையா? அவனுக்கு இதுதான் சரியான பருவம், அவ்வளவுதான் நான் சொல்வேன். பிள்ளைகளுக்கு எவ்வளவு சீக்கிரம் கல்யாணம் ஆகிறதோ அவ்வளவுக்குப் பெற்றோர்களுக்குச் சிரமம் குறையும். புளிக் காடியிலே கிடக்கும் காளானைப் போல, ஒரு மனிதன் குடும்பஸ்தன் ஆனால்தான் அவனது உடலும் உள்ளமும் நல்ல நிலைமை அடையும். நானாயிருந்தால், இதற்குள் அவனுக்குக் கல்யாணம் செய்துவைத்திருப்பேன். தங்கள் சொந்தப் புத்தியால் வாழவேண்டும் என்று ஜனங்கள் விரும்புகிற இந்த நாளிலே, மனிதப்பிறவிமீது கடுமையான கண்காணிப்புத்தேவை. எல்லோரும் அவரவர் நினைத்தபடி வாழத் தொடங்கிவிட்டனர். என்னென்னவோ நினைக்கிறது, எதெதையோ தன்னிச்சையாய்ச் செய்கிறதும் நாம் கண்டித்து வைக்கவேண்டிய சமாச்சாரம்தான். இந்தக் காலத்து இளவட்டப் பிள்ளைகள் தேவாலயத்துக்கும் போவதில்லை; நாலுபேர் கூடும் இடத்துக்கும் வருவதில்லை; எங்கேயோ நழுவி ஓடிப் போய் இருட்டிலே கூடித் தமக்குள்ளாக என்னென்ன இரகசியத்தையோ குசுகுசுத்துப் பேசிக்கொள்கிறார்கள். எதற்காக இரகசியமாய்ப் பேச வேண்டும், என்பது தான் எனக்குத் தெரிய வில்லை. அவர்கள் ஏன் மனிதர்களைக் கண்டு வெறுத்து ஒதுங்குகிறார்கள்? ஜனங்களின் முன்னால், உதாரணமாக, சாராயக் கடையில்கூட வெளியிட முடியாத இரகசியம் அப்படி என்ன இருக்கிறது! இரகசியங்களம்மா! புனித தேவாலயம் ஒன்றுதான் இரகசியங்களுக்கே உரிய இடம்; மற்றப்படி, மற்ற இரகசியங்களெல் லாம் மூலையிருட்டிலே நடப்பவை; சபல புத்தி படைத்தவர்களின் இரகசியங்கள்தான். சரி போகட்டும் நீங்கள் நலமாயிருங்கள், பெலகேயா நீலவ்னா!"

அவன் தனது தொப்பியை அநாயாசமாகத் தூக்கிக் காற்றில் வீசிக்கொண்டே சென்றுவிட்டான்; தாய் திகைப்புற்று நின்றாள்.

இன்னொருமுறை, விலாசவின் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரியான மரியா கோர்சுனவா தாயைச் சந்தித்தாள். மரியா ஒரு விதவை; அவளது கணவன் ஒரு இரும்புப் பட்டறைத் தொழிலாளி. தொழிற்சாலை வாசலில் சாப்பாடு விற்று வாழ்பவள். கடைவீதியில் தாயைக் கண்டு அவள் சொன்னாள்:

"பெலகேயா, உன் மகன்மீது ஒரு கண் வைத்திரு!"

"என்ன விஷயம்?" என்று கேட்டாள் தாய்.

"எங்கு பார்த்தாலும் ஒரே வதந்தி!" என்று இரகசியமாகச் சொன்னாள் மரியா: "மோசமான வதந்தியம்மா, மோசமான வதந்தி! அவன் என்னவோ கிலிஸ்தியைப்போல் (கிலிஸ்தி-ருஷ்ய பாஷையில் சவுக்கு என அர்த்தம். இந்தப் பெயரை ஒருவகையான மதவெறியர்களுக்குச் சூட்டியிருந்தார்கள்) ஒரு இரகசியச் சங்கம் சேர்க்கிறானாம். வெட்டுக் குத்துத்தான் நடக்கப் போகிறது..."

"போதும். நிறுத்து, உளறாதே, மரியா!"

"நான் ஒன்றும் உளறவில்லை. நெருப்பில்லாமல் புகையாது!" என்றாள் மரியா.

தாய் அந்தப் பேச்சை யெல்லாம் தன் மகனிடம் போய்ச் சொன்னாள்; பாவெலோ தோளைக் குலுக்கிக்கொண்டதோடு சரி. ஆனால் ஹஹோலோ வழக்கம்போலவே மெதுவாய்ச் சிரித்துக்கொண்டான்.

"இந்த யுவதிகளுக்கெல்லாம் ஒரே சங்கடம். நீங்களோ அழகான வாலிபர்கள், எவளும் உங்களை விரும்புவாள்; நீங்கள் நன்றாகவும் உழைக்கிறீர்கள்; குடிப்பதுமில்லை. ஆனால் நீங்கள் அவர்களைக் கொஞ்சங்கூடக் கவனிப்பதே இல்லை. எனவே நகரிலிருந்து உங்களைப் பார்க்க வரும் பெண்கள் சந்தேகத்துக்கு இடம் தரும் நபர்கள்தான் என்று இவர்கள் சொல்கிறார்கள்..." என்றாள் தாய்.

"ஓகோ, அப்படியா!" என்று எரிச்சலோடு சொன்னான் பாவெல்.

"சாக்கடையில் நாற்றம் அடிக்கத்தான் செய்யும்" என்று பெருமூச்சுடன் சொன்னான் ஹஹோல் "ஏனம்மா, அந்த முட்டாள் குட்டிகளுக்கு, மண வாழ்க்கையென்றால் இன்னதென்று நீங்கள் சொல்லித்தரக் கூடாதோ? சொல்லியிருந்தால் அவர்கள் இப்படி ஒருவருக்கொருவர் முட்டிமோதிப் போட்டி போடமாட்டார்களே!"

"நானா? அவர்களுக்கே எல்லாம்

**என்றும் முதலிடம்**

உலகில்
மிகச் சிறந்த நாவல் எது?
ஒரே பதில்
தாய்! தாய்!! தாய்!!!
உண்மைகள் எப்போதும் வசீகரமானவை
அதுதான் 'தாய்' நாவல்
எப்போதும்
முதலிடத்தில் இருக்கிறது!
தவறவிடாமல் தொடர்ந்து
வாசியுங்கள்!
ரகுநாதனின்
மொழி பெயர்ப்புநடை
பிரமாதப்படுத்துகிறது.
-ஆ.ர்.



தெரியும். எல்லாவற்றையும் தான் பார்க்கிறார்களே, ஆமாம், அவர்களுக்குந்தான் போக்கிடம் ஏது?" என்றாள் தாய்.

"தெரிந்து கொண்டால்தான், அதற்கு ஒரு வழியையும் கண்டுபிடித்துக்கொள்வார்களே" என்றான் பாவெல்.

தாய் அவனது அசைவற்ற முகத்தைப் பார்த்தாள்.

"அவர்களுக்கும் நீங்கள் ஏன் கற்றுக் கொடுக்கக்கூடாது? அவர்களில் கெட்டிக்காரியாகப் பார்த்து அழைத்துவந்து கற்றுக் கொடுங்களேன்" என்றாள் தாய்.

"அது சங்கடமான வேலை."

"ஏன் முயன்று பார்த்தால் என்ன?" என்றான் ஹஹோல்.

பாவெல் பதில் சொல்வதற்குமுன் சிறிது மௌனம் சாதித்தான்.

"அவர்களும் வந்துவிட்டால், பிறகு ஜோடி சேர்த்துக்கொண்டு போய்விடுவார்கள்; சிலர் கல்யாணமும் பண்ணிக்கொள்வார்கள்; அப்புறம் அத்துடன் எல்லாம் சமாப்திதான்!"

தாய் சிந்தனையில் ஆழ்ந்தாள். பாவெலின் சந்நியாச வைராக்கியத்தைக்கண்டு அவளது மனம் கலக்கமுற்றது. ஒவ்வொருவரும், ஹஹோலைப் போன்ற மூத்த தோழர்கள்கூட, பாவெலின் வார்த்தையை மதித்து நடந்தார்கள்; அவனைக்கண்டு அவர்களெல்லாம் பயப்படுவதாகவும், அவனது கண்டிப்புக் குணத்தால் அவனை யாருமே விரும்பவில்லையெனவும் அவளுக்குத் தோன்றியது.

ஒருநாள் இரவு அவள் படுக்கைக்குப் போனபிறகும், ஹஹோலும் பாவெலும் உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்தார்கள்; பிறகு அவர்கள் இருவரும் அடுத்த அறையில்

## மக்சீம் கார்க்கி

மங்கிய குரலில் ஏதோ பேசிக்கொண்டார்கள்; எனினும் அந்த பேச்சு அவளது காதிலும் விழுந்தது.

"அந்த நதாஷாவை என் மனத்துக்குப் பிடித்திருக்கிறது" என்று திடீரெனச் சொன்னான் ஹஹோல்.

"தெரியும்" என்று சிறிது கழித்துச் சொன்னான் பாவெல்.

ஹஹோல் இடத்தைவிட்டு எழுந்து அறைக்குள் நடமாடும் காலடியோசையை அவளால் கேட்க முடிந்தது; அவன் வழக்கம்போலவே சோக இசையை மெதுவாகச் சீட்டியடிக்க ஆரம்பித்தான். மீண்டும் அவன் சொன்னான்:

"இதை அவள் கவனிக்கிறாளா? என்று சந்தேகிக்கிறேன்."

பாவெல் பதில் பேசவில்லை.

### 11

"சரி. நீ என்ன நினைக்கிறாய்?" என்று மெதுவாகக் கேட்டான் ஹஹோல்.

"கவனித்திருக்கிறாள். அதனால்தான் இங்கு வருவதையே அவள் நிறுத்திவிட்டாள்" என்றான் பாவெல்.

ஹஹோல் தனது காலைத் தரையில் அழுத்தித் தேய்த்துக்கொண்டான்; பிறகு மீண்டும் அவனது சீட்டிக்குரல் அறைக்குள் எதிரொலித்தது.

"இதை அவளிடம் நான் சொல்லிவிட்டால் என்ன?" என்று கேட்டான் அவன்.

"எதை?"

"அவளிடம்-நான்..." என்று மெதுவாக ஆரம்பித்தான் ஹஹோல்.

"எதற்காகச் சொல்லவேண்டும்?"

ஹஹோல் நடக்காமல் நின்றுவிட்டதைத் தாய் உணர்ந்துகொண்டாள்; அவன் சிரித்துக் கொள்வதுபோல அவளுக்குத் தோன்றியது.

"நீ ஒரு பெண்ணைக் காதலித்தால் அதை அவளிடம் சொல்லித்தானே ஆக வேண்டும்! இல்லையேல் பயனென்ன?"

பாவெல் தன் கையிலிருந்த புத்தகத்தைப் பட்டென்று மூடினான்.

"என்ன பயன் உனக்கு வேண்டும்?" என்று கேட்டான் பாவெல்.

இருவரும் வெகுநேரம் வரையிலும் வாயே திறக்கவில்லை.

"சரி..." என்று எதையோ கேட்க முனைந்தான் ஹஹோல். "அந்திரேய்! உனக்கு என்ன வேண்டும் என்பதைப் பற்றி முதலில் நீயே தெளிவோடு இரு" என்று மெதுவாக ஆரம்பித்தான் பாவெல். "அவள் உன்னைக் காதலிக்கிறாள் என்றே வைத்துக்கொள்-அதுவே எனக்குச் சந்தேகம்தான்; ஒரு பேச்சுக்கு அப்படி வைத்துக்கொள்-பிறகு நீங்கள் மணம் செய்துகொள்வீர்கள். நல்ல ஜோடிதான்! அவளோ படிப்பாளி; நீயோ ஒரு தொழிலாளி. குழந்தைகள் பிறக்கும்; நீதான் அந்தக் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும். அதற்காக நீ எவ்வளவு உழைக்கவேண்டும் தெரியுமா? குழந்தைகளுக்காக, ஒரு துண்டு ரொட்டிக்காக, வீட்டு வாடகைக்காக நீ மாடாய் உழைக்கப் போவாய். நாம் எடுத்துக்கொண்ட கருமத்திலிருந்து நீ மட்டுமல்ல, நீங்கள் இருவருமே விலகிப்போய்விடுவீர்கள்."

அந்த அறையில் அமைதி நிலவியது. பிறகு பாவெலே மீண்டும் சொன்னான்; இப்போது அவனது குரலில் அத்தனை வேகம் இல்லை.

"அந்திரேய்! இதையெல்லாம் நீ மறந்து விடுவதே நல்லது. அவளுக்குக் குழப்பத்தை உண்டாக்கிவிடாதே."

மீண்டும் மௌனம். சுவரிலிருந்த கடிகாரத்தின் பெண்டுலம் மட்டும் அசைந்து அசைந்து ஒவ்வொரு கணத்தையும் அளந்து சொல்லிக்கொண்டிருந்தது.

"பாதி மனம் காதலிக்கிறது; பாதி மனம் பகைக்கிறது. இதுவும் ஒரு மனமா?" என்று சொன்னான் ஹஹோல்.

புத்தகத்தின் தாள்கள் சலசலத்தன; பாவெல் மீண்டும் படிக்கத் தொடங்கியிருக்க வேண்டும். அவனது தாய் கண்களை மூடியவாறே கிடந்தாள்; மூச்சுவிடக் கூடப் பயந்தாள். அவள் ஹஹோலுக்காக இதயபூர்வமாய் அனுதாபப்பட்டாள். ஆனால் தன் மகனுக்காக இன்னும் அதிகமாக அனுதாபப்பட்டாள்.

"அட, என் அருமைக் கண்ணே.." என்று யோசித்தாள்.

"அப்படியென்றால் நான் ஒன்றுமே சொல்லக்கூடாது என்றுதானே நினைக்கிறாய்?" என்று திடீரெனக் கேட்டான் ஹஹோல்.

"அதுதான் நல்லது" என்று அமைதியாகச் சொன்னான் பாவெல்.

"சரி, அப்படியே செய்வோம்" என்றான் ஹஹோல். சில விநாடிகள் கழித்து அவன் மெதுவாக, துக்கம் தோய்ந்த குரலில் பேசினான்; "பாவெல், உனக்கு இந்த மாதிரி நிலைமை ஏற்பட்டால், அப்போது தெரியும் அந்தச் சங்கடம்!"

"இப்பொழுதே, சங்கடமாய்த் தானிருக்கிறது!"

காற்று அந்த வீட்டின் சுவர்களில் மோதிச் சென்றது; கடிகாரத்தின் பெண்டுலம் காலக் கணக்கைக் கூறிட்டுச் சொல்லிக்கொண்டேயிருந்தது.

"இது ஒன்றும் விளையாட்டல்ல- இது.." என்று மெதுவாகச் சொன்னான் ஹஹோல்.

தாய் தனது முகத்தைத் தலையணையில் புதைத்துக்கொண்டு அரவமில்லாது அழுதாள்.

காலையில் எழுந்தவுடன் தாய் அந்திரேயைப் பார்த்தாள். அவனது உருவம் குறுகிவிட்டதுபோலத் தோன்றியது; அவன் மீது அவளுக்கு அதிகப் பிரியம் உண்டாயிற்று. அவளது மகனோ மெலிந்து நெட்டுவிட்டுப்போனது போலிருந்தான்; எப்போதும் போலவே அவன் மௌனமாயிருந்தான். இது வரையிலும் அவள் ஹஹோலை அந்திரேய் அனிசிமோவிச் என்றுதான் அழைத்து வந்தாள். அன்றோ அவள் தன்னையுமறியாது கூறினாள்:

(தொடர்ந்து வரும்)

---

ஓர் உண்மை நிகழ்வின் பின்னணியில்

# புதிய புன்னகை

அ. றஜீசன்

மீண்டும் முறைத்துக்கொண்டன அந்த விழிகள்.

சிவப்பாகவும் குரூரமாகவும் தெரிந்தன விழிகள். இது எனக்கு பழக்கப்பட்டுவிட்டது. இந்த ஐந்து நாட்களாக பழக்கப்பட்டுவிட்டது. பழக்கப்பட்டாலும் ஒவ் வொரு முறையும் இவர்களால் பார்க்கப்படும் பொழுது நான் இனம்கொள்ள முடியாத ஒரு அவஸ்தையில் நெளிகின்றேன்.

இது எனக்கு தேவையானதா?

இதற்கு நான் காரணமானவளா?



எப்படி? எவ்விதத்தில்? ஏன்?

இந்தக் கேள்விகள் என்னை அணுகும்பொழுது கண்கள் கலங்குகின்றன. அழுகின்றேன். அங்கேயும் நிறையப்பேர் அழுதார்களாமே; என்னை திட்டிக் கொண்டார்களாமே?

ஏன் அவன் அப்படிச் செய்தான்?

எதற்காக தற்கொலை செய்து கொண்டான்?

எனக்காகவா? நான் அவனுக்கு சம்மதம் தெரிவித்து இருந்தால், அவன் காதலை ஏற்று இருந்தால் அவன் தற்கொலை செய்யாமல் இருந்திருப்பானா? நான் ஏன் ஏற்க வேண்டும்?

நான் சிறிதுகூட அவனைக் காதலிக்கவில்லையே? காதலிக்க முடியவில்லையே. எனக்கு நினைவிற்கு வருகிறது-

அந்த வகுப்பறையில் நிறைந்த மாணவர்கள் மத்தியில் அவனும்! பெயர் அரவிந்தன். சுருள் முடி. குழந்தைத்தனமான முகம். எவருக்கும் பிடித்துவிடும் முகம். சங்கோஜம் இன்றி கதைக்கச் சொல்லும் இளைய முகம்; கதைத்தேன். சக மாணவர்களுடன் எந்தளவிற்கு வரம்புடன் கதைக்கலாமோ அந்தளவிற்கு கதைத்தேன். அவனிடம் மட்டுமல்ல, தேவையேற்படின், தேவைக்கேற்றவர்களுடன் இவனுடன். பிரகாஷ் உடன், அருணுடன், ரவியுடன்....

என் சக தோழிகளும் கதைப்பதுபோல் கதைத்தேன்.

இது குற்றமா?

சாதாரண கதை காதலுக்குத் தூண்டுமா? அப்படியே தூண்டினாலும் பதினேழு வயதில் எந்த அடிப்படையில் அது தூண்டப்படும்? உடம்புதான் அடிப்படையா?

என் நீண்ட கூந்தலும் பொன்னிறமும் விழிகளும்தான் அவனுக்கு அடிப்படையா?

"தேவகி...உன்னுடன் அரவிந்தன் ஏதோ கதைக்க வேணுமாம்."

வகுப்பு முடிந்து நான் வெளியேறும் போது சகமாணவி ஒருத்தி என்னருகில் வந்து கூறினாள்.

அரவிந்தன் எதை கதைக்கப் போறான்? எனும் குழப்பத்துடன் மறுகி நான் நிற்கையில், தளர்ந்த நடையுடன் - பயம் கலந்த மருட்சியுடன் அரவிந்தன் வந்து "தேவகி...ஐ லவ் யூ" என்றான்.

பாடமாக்கப்பட்ட ஒரு வார்த்தை மாதிரிச் சொன்னான். "தேவகி...உன்...உன் முடிவு என்ன?" உடனடியாக முடிவு கேட்டான்.

எதைச் சொல்வது? திடீரென பொருள் விலை கேட்பதுபோல் கேட்டால் எதனை சொல்வது? எனக்கு முடிவு சொல்லத் தெரியவில்லை. அவனை எனக்குப் பிடித்திருந்தது. அந்தப் பிடிப்பு காதலில்லை. சாதாரண பிடிப்பு. நான் பதில் எதுவுமே சொல்லாது, சொல்லத் தெரியாது வந்துவிட்டேன்.

ஆனால் அவன் அடுத்த நாளும் கேட்டான். "ஐ யாம் சொறி" என்றேன். இப்போது சொல்லக்கூடியதாக இருந்தது. எனக்கு காதல் இல்லை. அவன்மீது காதல் இல்லை. அவனது முகம் மோசமாக இருளடைந்தது. அழுவான்போல தெரிந்தது. பாவமாக இருந்தது. ஆனால் பாவம் பார்த்தால் காதல் வருமா? வராது.

தொடர்ந்து அவன் என்னை ஒவ்வொரு நாளும் கேட்கத் தொடங்கினான். சினிமா வசனங்களை பொறுக்கிப் பேசினான். கிட்டத்தட்ட கட்டாயப்படுத்தினான். கட்டாயத்தில் காதல் வருமா? வரவில்லை; எனக்கு வரவில்லை. என் சக தோழிகள் முதலில் அவனை பேசினாலும் பிறகு அவனை பாவம் என்று கூறி என்னை ஓமென்று கூற சொன்னார்கள். நான் கூறவில்லை. அது அவனுக்கு ஒரு பிரச்சனையாகிவிட்டது.

எனக்கும் காதல் உணர்வு பிடிக்கும். அதன் பரவசம் பிடிக்கும். சினிமாவில் காதலர்கள் பரவசப்படுகையில் நானும் பட்டிருக்கின்றேன். ஆனால் என் காதலுக்கு உரியவனாக அரவிந்தன் இல்லை. நண்பன், வெறும் நண்பனாக மட்டுமே என்னால் கொள்ள முடியும்.

ஒருநாள் காலை வழக்கம்போல அரவிந்தன் வந்து நின்றான். அவன் வருகை எனக்கு இம்சையாக இருந்தது.

"...தேவகி..நீ இண்டைக்கென்றாலும் ஓம் என்று சொல்லு...நீ சம்மதிக்காவிடில் நான் விஷம் குடித்து செத்துடுவேன்.... ப்ளீஸ்...ப்ளீஸ் தேவகி" கெஞ்சினான். கெஞ்சினால் காதல் வருமா? எனக்கு வரவில்லை.

வந்தது. அடுத்த நாள் காலை அரவிந்தன் தற்கொலை செய்துகொண்டதாக செய்தி வந்தது. நான் உடைந்துபோய் விட்டேன். ஏன்...ஏன்...ஏன்? ஏன் செய்தாய் என் நண்பனே?

நீ இறக்கும் அளவிற்கு என்மீது எப்படி காதல் வரும்? காவியங்களும், புகழ்பெற்ற காதல் படங்களும்தான் உன்னை இவ்வாறு செய்யத் தூண்டிச்சா? இதற்காகவா உன் அம்மா அப்பா உன்னை இவ்வளவு காலம் பாதுகாத்து வளர்த்தார்கள்? ஷெல்லுக்கும், குண்டுக்கும் அகப் பட்டுவிடக்கூடாதே என்று பயந்து கஷ்டப்பட்டு பாஸ் எடுத்து ஊரிலிருந்து இதற்காகவா கூட்டி வந்தார்கள்? இயக்கத்திற்கு ஏராளமான இளைஞர்கள் போகையில் நீயும் போய்விடுவியோ எனப் பயந்து இதற்காகத்தானா கூட்டி வந்தார்கள்?

ஏன் செய்தாய்? அரவிந்தா ஏன் செய்தாய்? என்னை தண்டிக்கவா? உன் மரணத்தின் மூலம் என்னை குற்றவாளியாக்கவா? எல்லோரும் இப்போது என்னைப் பார்த்து "கொன்றுவிட்டீயே அடி" என்று திட்டுவதற்காகத்தானே செய்தாய்?

திட்டுகிறார்கள் அரவிந்தா. எல்லோரும் என்னைத் திட்டுகிறார்கள். நானா உன்னை கொன்றேன்? உன் சாவிற்கு காரணம் என்னவென்று தெரியுமா? சுயநலம். உன் நண்பர்களால் உன்மீது திணிக்கப்பட்ட சுயநலம். காவியங்கள் கற்றுத்தந்த தற்கொலை செயல்தான் காரணம். அம்பிகாவதி காரணம். அமராவதி காரணம். அதனை ஏற்ற சமூகம் காரணம். இதில் நான் எங்கு காரணம்?

சொல் அரவிந்தா. உன்னால் இனி சொல்ல முடியாது. நீ உன் நண்பர்களின் கனவில் வந்தாவது சொல்லு- என்னை திட்டவேண்டாம் என்று ப்ளீஸ்.... அரவிந்தா. என்னைப் பார்த்து முறைக்கிறார்கள். புழுவை பார்ப்பதைவிட அற்பமாக பார்க்கிறார்கள்.

நான் மெதுவாக என் கண்களை துடைத்துக்கொள்கின்றேன். இதை நான் ஜீரணிக்க வேண்டும். இந்த இம்சையை நான் ஜீரணித்தே ஆகவேண்டும்.

நீண்டு விரிந்து பரந்த இந்த உலகில் நான் வாழ வேண்டும். முட்டாள் ஒருவனின் செயலினால் நான் வாழ்வை வெறுத்திடலாகாது. என்னைப் படிக்க வைக்கும் பெற்றோருக்காக நான் இதை அலட்சியப் படுத்த வேண்டும். கடுங் குளிரில் தன்னை வருத்தி வெளிநாட்டிலிருந்து காசு அனுப்பும் என் அண்ணனுக்காக படிக்கவேண்டும். எனக்காகவும் படிக்கவேண்டும். மூடர்களின் செயல்களால் நான் கலங்கலாகாது. எனக்குள் உறுதி ஒரு புயலைப் போல பலங்கொள்ளலானது. நான் என்னை முறைத்துக்கொண்டு நிற்பவனை பார்க்கின்றேன். அவனது முறைப்பை பார்க்கின்றேன். அது எனக்கு முறைப்பாக தெரியவில்லை. ஒரு புன்னகையாக தெரிகின்றது. இனி அப்படித்தான் தெரியும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை

# உறவின் எல்லை......

**ப**ழைய நினைவுகளின் துயரத்தில் படுத்திருந்த ரமேஷ் தட்டுத் தடுமாறி எழுந்து வந்து வெளியே முற்றத்தில் கிடந்த கருங்கல்லில் உட்கார்ந்தபடியே.... வானத்தில் பறக்கும் பறவைகளை பார்த்துக்கொண்டிருந்தான்.

முன்னால நல்லவளா வாழறது நோக்கமல்ல; எல்லாரையும் நல்லபடியா வாழ வைக்கறது தான் சிறந்த பெண்ணுக்கு அழகு.

"மறுபடியும் சொல்றேன்; பணமோ, பதவியோ, இளமைக் கனவுகளோ எதுவும் எனக்கு அவசியமில்லை. நான் அப்பாவாக வேண்டும். ஒரு பிள்ளைக்குத் தந்தையாக வேண்டும். அந்தக் கடமைகளை நல்லபடியா





"ப்ரியா வரமாட்டியா..?"

"பிடிக்கலை."

"பேசறது பிடிக்கலையா?"

"எனக்கு அது பிடிக்கலை."

"எது?"

"குழந்தை பெத்துக்கிறது."

"எனக்குப் பிடிக்குதே!"

"இப்ப வேண்டாம்."

"பின்ன எப்ப?"

"டோண்ட் பி ஸில்லி ...ரமேஷ் நீங்க என்னை நல்லாப் புரிஞ்சுக்கணும். வாழ்க்கையை ஜாலியா அனுபவிக்கிற பெண் நான். அதை உங்களுக்கு பலமுறை சொல்லியாச்சு. நான் எங்க அம்மாவுக்கும் அப்பாவுக்கும் ஒரே பெண்.

"நம்ம பொண்ணு இருக்கிற நிறத்துக்கும் அழகுக்கும் மாப்பிள்ளை தூக்கிட்டுப் போயிடுவான்!" என்று என் அப்பா உங்களிடம் பெருமை உரை நிகழ்த்தினாரே ஞாபகம் இருக்கா?"

"ஏன் அப்படிச் சொல்றே?" ரமேஷ் கேட்டான்.

"இல்லைன்னா இந்தக் கல்யாணம் வேண்டாம்னு எங்கப்பா, அம்மாகிட்ட சொல்லி, சுதந்திரப் பறவையாக

### தர்கா நகர் ஷஹிர்ஷா தாஸிம்

ரமேஷைப் பார்த்து சுகம் துக்கம் விசாரிக்க வருபவர்கள் யாரும் இல்லை. ரமேஷின் மனைவியும் அவனைவிட்டுத் தனியாய் போய்விட்டாள். ரமேஷின் கொள்கைகள் அவளுக்குப் பிடிப்பதில்லை. ரமேஷும் யாரிடமிருந்தும் எதையும் எதிர்பார்ப்பதில்லை. ரமேஷ் ஒரு ஆஃபிஸில் கணக்காளராக கடமை புரிகிறார். கை நிறையச் சம்பளம். ஆனால், மனம் நிறைய மனைவிதான் கிடைக்கவில்லை. விதி விட்டவழியில் ரமேஷ் வாழ்ந்துகொண்டிருந்தான்.

லேசாக இருட்ட ஆரம்பித்ததும் ரமேஷ் எழுந்து வீட்டுக்குள் சென்று கட்டிலில் சுருண்டு படுத்துக்கொண்டான். தொண்டை அடைத்து கண்களில் நீர் பொங்கி வழிந்தது.

முற்றத்து மாமரத்தில் வௌவால் சிறகடிப்பது கேட்டது. ரமேஷ் கவிழ்ந்து கொண்டான். பேச்சரவமற்ற அமைதி எங்கும் படர்ந்திருந்தது. மனைவியின் பழைய நினைவுகள், நிகழ்வுகள் ரமேஷின் நொந்துபோன நெஞ்சுக்கு ஒத்தடம் போட்டன.

"ப்ரியா...சாப்பாடு கொண்டா" என்று அழைப்புவிட, ப்ரியா சாப்பாடு கொண்டு வந்து கொடுத்தாள்.

"நீ சாப்பிட்டியா...?" ரமேஷ் ஆவலாகக் கேட்டான்.

"நீங்க முதல்ல சாப்பிடுங்க ரமேஷ் நான் உங்களுக்கு ஊட்டி விடட்டுமா..?" என்று கரிசனமாகக் கேட்டாள் ப்ரியா ரமேஷைப் பார்த்து.

"என்னால உனக்கு சிரமம் வேண்டாம். பறைசாத்துகிற போலித்தனமான அன்பு வேண்டாம். என்னை என் போக்குல விட்டுடு. எல்லாருக்கும் நிறைவேற்று; அதுபோதும் எனக்கு."

"ரமேஷ் நாம பிள்ளை பெத்துக்கிட்டா புதிய புயல் ஒண்ணு உருவாகும். நமக்குள்ள விரிசல் ஏற்படும். நமக்குள் இருக்கும் இந்த பொறுமை, அடக்கம், அன்பு எல்லாம் இல்லாமல் போகும். ஐயாம் ஸாரி..ரமேஷ். இதை நான் ஏகத்தாளமாகவோ, உங்களை கேவலப்படுத்துற நோக்கத்தோடவோ சொல்லலை."

"பொய்...குழந்தை பிறக்கிறது உனக்குப் பிடிக்கலை. நான் சொன்ன பதிலோட நிஜமான அர்த்தத்தை உன்னால புரிஞ்சுக்க முடியலை. இனியும் நாம சேர்ந்து வாழ்றதுல அர்த்தமில்ல."

"போதும்! ரமேஷ் இதுக்குமேல நீங்க பேசவேண்டாம்!" ப்ரியா மௌனமாக வாசலைத் தாண்டி பிறந்த வீட்டுக்கு சென்றுகொண்டிருந்தாள்.

ரமேஷ் வாய் அடைத்து நின்றான்.

□□□

**ப**ழைய நினைவுகளிலிருந்து சுயநினைவுக்கு வந்த ரமேஷின் மனசு பூராவும்... மனைவியைப்பற்றியே சிந்தனை. சராசரி ஆண்களைப்போல இவனுக்கும் பிள்ளை ஒன்று இருக்கவேண்டும். ஜாலியா எல்லா இடங்களுக்கும் போகணும்...பிள்ளையை மடியிலே வைச்சுக் கொஞ்சணும். பீச்சல உக்காந்து காத்து வாங்கணும்கிற ஆசையெல்லாம் இருக்காதா என்ன...?

சிந்தனை வயப்பட்டிருந்த ரமேஷ் அப்போது டெலிஃபோன் ஒலிக்க அதை எடுத்து ஆவலோடு பேச ஆரம்பித்தான்.

"ஹலோ! ப்ரியாதானே பேசறது?" என்று சொல்லிவிட்டு பதற்றத்துடன் எழுந்திருந்திருப்பேன்."

உறுத்தும்படியான குரலில் ப்ரியா சொல்ல...

ரமேஷ் நிமிர்ந்து பார்த்து மூக்கைச் சிந்திவிட்டு,

"ப்ரியா எனக்கு எதுவுமே புரியலை" என்றான்.

"நான் சொன்னது புரியலையா..? பாருங்க... புருஷனை பிரிந்து நிற்கிறேனே.... என்னைப் பாருங்கள்... எனக்கு இன்னமும் துக்கம் வேணுமா?" ப்ரியா கத்தினாள்.

"மை காட்! உன்னை புரிஞ்சுக்கவே முடியலை...நான் உன்னை கவலைப்பட வைக்கமாட்டேன்... கல்யாணத்துக்கு முன்னாடி உன்னைப் பற்றி நான் புரிஞ்சுக்கிட்டேன். குழந்தையில எனக்கு அக்கறையே இல்லை. என் பொண்டாட்டி புனிதமா எனக்கு வந்து சேரணும்னு நான் கட்டாயமாக எதிர்பார்க்கிறேன்."

"நாளை நான் வருவேன்..... ஃபோனை வைக்கட்டுமா..?"

கல்யாணமாகி இரண்டு வருஷம் ஆகிவிட்டது. இத்தனை வருடத்தில் இப்படியொரு சிக்கல் தலைகாட்டியதே இல்லை. இத்தனை வருஷ அந்நியோன்யத்தில் அவர்களுக்குள் எத்தனையோ சண்டை சச்சரவு வந்ததுண்டு. ராசியாகிப் போனதும் உண்டு. ஆனால்....

உண்மையிலேயே ப்ரியா அன்பானவள்; அடக்கமானவள்; துப்பரவானவள்; ரோஷக்காரி.

காலையில் ரமேஷுக்கு சந்தோஷம் ப்ரியா திரும்பவும் வீட்டுக்கு வந்திருந்ததில். கூடவே- ஒரு மூன்று வயதுப் பெண் தான். அவன் முகம் எங்கும் மகிழ்ச்சியின் ஒளிக்கீற்று...

"ஹலோ! ரமேஷ் நான் ப்ரியாதான் பேசறது." என்றாள் ப்ரியா.

ரமேஷுக்கு தன் உடல் முழுதும் மிதக்க, அந்தத் தருணத்தில் எதிரே காற்றில் ஆடிய ஜன்னல் திரைகள் அவனை பார்த்து குதூகலிப்பதைப்போன்றதொரு உணர்வு.

குழந்தை ஒன்றும் அவளோடு ஒட்டிக்கொண்டு கண்களை உருட்டி ரமேஷைப் பார்த்து புன்னகைத்துக்கொண்டிருந்தது.

உயிர்க்களையற்ற அவன் முகம் குழம்பிக் குழம்பிப் பறவையாடுகிற கண்கள். அடிபட்ட மனசோடு ஆதரவுதேடி அலைகிற அந்தப் பரிதாபமான பார்வை. அண்ணார்ந்து அண்ணார்ந்து முகத்தைப் பார்க்கிற புருஷன்.

பரிவோடு கேட்டாள்.

"ஏன் ஒரு மாதிரியாயிருக்கீங்க?"

"......."

பதில் இல்லாமல் சூன்யமாய் அலைகிற புருஷனின் பார்வை, குழந்தையைப் பார்த்து தவிக்கிற பார்வை.

மிருதுவான உணர்வுகளோடு நெருங்கி உட்கார்ந்தாள். அவனது காய்ந்த தலைக்குள் விரல்களால் கோதிவிட்டாள். அன்பு பிரவகிக்கிற அவள் கனிந்த முகம்; தாய்மைப் பொலிவோடு கண்களில் வந்து நின்ற பாச இதயம்.

தலை முடியைக் கோதி ரமேஷின் கையை அப்படியே இறுகப் பற்றி,

"ரமேஷ்! இந்தக் குழந்தையை நான் தத்து எடுத்தேன். எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு... நல்லா இருக்கா...?"

ரமேஷ் குழந்தையைப் பார்த்தான். குழந்தை ஒரு குதி குதித்துக்கொண்டு வீட்டுக்குள் ஓடினாள்.

"உனக்குப் பிடிச்சிருக்கில்லே...அது போதும்..."

ப்ரியாவுக்கு பெரிய பாரம் இறங்கிய நிம்மதி. அவன் குழந்தைப் பிரச்சனை முடிந்த ஆசுவாசம்.

# யார் அந்த ரஸ்னா?

### -கிண்ணியா அமீரலி-

"**ர**ஸ்னா வீடு இதா?......"

"ரஸ்...னா... ஆமா...யாரு நீங்க? உள்ளே வாங்க!"

தாடி வருடி, அமரச் சொன்னது அந்த நடக்கும் ஏணி.

"நீங்க..?"

"நான்...நானா... வந்து ரமீலாட நானா.'

"நீங்க....?"

"நான்...நானா வந்து ரஸ்னாட நானா..!

" நல்லாப் பேசுறீங்க.."

சிரித்தோம்.

"திருகோணமலைக்குப் போற நீங்க... பக்கத்திலதான் கிண்ணியா... அங்க என் கூட்டாளி ரஸ்னா வீட்டுக்கும் போய் வாங்க நானா"ன்னு ரமீலாதான் சொல்லியனுப்பினா. இந்தாங்க.. ரமீலா தந்தா..ரஸ்னாக்கு.."

"தாங்ஸ்" தந்து பார்சலை வாங்கியது அந்த மூங்கில்.

"ரஸ்னா... மஹரகம போய்ட்டா.. ஏதோ.. கவிதைப் போட்டியில பரிசு கிடைச்சிருக்கு அவக்கு!"

"எப்ப வருவாங்க...?"

"எப்படியும் ஒரு கிழமையாகும்.."

"அப்ப நான் வாறன்.. சொல்லுங்க... 'ராகம'யில இருந்து ரமீலாட நானா வந்தார்னு."

"நின்று..போகலாமே.."

அரை மணி நேர 'விடாப்பிடி' விவாதமாக நான் 'ஒரே பிடி'...

'போகணும்!"

ஒருகிளாஸ் டீயும் தொதலும் (சும்மா சொல்லக் கூடாது- நல்ல 'தொதல்' திங்கணும்னா கிண்ணியா போகணும்) தந்து என்னை வழியனுப்பி வைத்தார் அந்த நீட்டர்! (அல்லது...உயரர்)

பாவம் ரஸ்னா.

செல்வன் ரமீஸ் செல்வி. ரமீலாவாகக் கடிதமெழுதி, ரஸ்னாவை பொழுதுபோக்கிக் கொண்டிருந்தேன்.

'கிண்ணிக் கன்னி ரஸ்னா' தினமுரசின் பாப்பா முரசில் எப்போதோ எழுதிய ஒரு கவிதையைப் பாராட்டி-ரமீஸ்? ரமீலாவாக மாறி இப்பொழுது சரியாக.... ஒரு மாதம் கடிதத் தொடர்பு கொண்டு.

ராகம வந்து சேர்ந்தேன்.

மறுவாரம் ரஸ்னாவின் கடிதம் வந்திருந்தது.

அதன் சாராம்சம் இதுதான். 'ரமீலா உங்கள் நானா எங்கள் வீடு வந்திருந்தாராம்... நான் வீட்டிலிருக்கவில்லை. என் நானாதான் இருந்தார்.

ஒருமுறை உங்கள் நானாவோடு என்னில்லம் வாருங்கள்."

இப்படியாக என்னைப் பெண்ணென்று எண்ணிப் பேசாமல் அஞ்சல் எந்நாளும்



எழுதிக்கொண்டிருந்தாள் ரஸ்னா.

"வேணாங்க.. பாவம் ரஸ்னா! உண்மையை எழுதுங்க. அவளை ஏமாற்றாதீங்க!" என்றாள், என் எதிர்கால மனைராணி, பிந்தான் நோனா.

ரஸ்னாவுக்கு எழுதினேன், "ரமீஸ் என்பெயர். ரமீலா என்ற பெண் பெயரில் உங்களை ஏமாற்றிவிட்டேன். என்னை மன்னிக்கவும்."

ரஸ்னா எழுதியிருந்தாள் இப்படி: ரமீலா, (மன்னிக்கவும்) ரமீஸ், நீங்களும் என்னை மன்னிக்கவும். நான் ரஸ்னா அல்ல. அன்று என்னில்லம் வந்தது ரமீலாகிய நீங்கள்தான் என்று அறிந்து மிகவும் மனவருத்தம் எனக்கு. உங்களை ஒழுங்காக உபசரிக்காமற் போய்விட்டது. மீண்டும் வரவும். அன்று ரஸ்னாவின் நானா என்று-ரமீலாவின் நானா என்று, பொய் சொன்ன உங்களிடம் நானும் பொய் சொல்லிவிட்டேன். தயவுசெய்து என்னை மன்னிக்கவும். யார் இந்த ரஸ்னா என்று இன்னும் குழப்பமா? நானே சொல்லிவிடுகிறேன். என் பெயர் அன்சார். பத்திரிகைகளுக்குப் பெண் பெயரில் எழுத நான் வைத்த புனை பெயர் ரஸ்னா.

ஆங்கிலத்தில் அன்சார் என்று எழுதிவிட்டு இடமிருந்து வலமாக வாசித்துப் பார்த்தால்...

ANZAR
RAZNA'

என் முகத்தில் வழிந்த அசடு... தினமுரசுக்கு ஒரு கதையாகச் சரி அமைந்ததே-ரஸ்னாக்குத் தாங்கஸ்.

## கதையைப் படித்துவிட்டு கதையின் தலைப்பை நீங்களே பூர்த்திசெய்யுங்கள்!

# எனக்கு ஒரு '........' வேண்டும்

### செல்வி கோபி

**வி**த்தியாசமான விடியல் எனக்கு. ஏற்கனவே இப்படி விடிந்த வித்யாச விடியல்களைப்போல இன்றும் எனக்கு வித்யாச விடியல்தான். என் யாசிப்புக்கு யோசித்து பதில் சொல்வதாய் நீ சொன்ன நாளின், ஏழு ராவுகளுக்குப் பின்னான ஆரம்பம் இன்று. இப்போ காலை எட்டு மணி. நீ சந்திக்கச் சொன்ன நேரத்தைத் தொட முழுசாய் இன்னும் மூன்றுமணி. நேரத்தை முடிக்கவேண்டும்.

இப்படியாக என்னை பரபரக்க வைத்த ஒன்பது விடியல்களிலும் எனக் கெஞ்சியது ஏமாற்றம் மட்டும்தானே? இது என் பத்தாவது எதிர்பார்ப்பு. நீயும் என்னை நிராகரித்து; இதிலும் நான் தோற்றுப்போனால்...? 'சத்யமாய் நான் செத்துப்போவேன்'. முடிந்துபோன முனகிக் கழித்த ராவுகளில், என் எதிர்கால (நான் கண்ட) கனவுகளைக் கலைத்து விடாதே.

-ஏற்றுக்கொள் என்னை-

உன்னை சந்திக்க: 'என்னை நான் தயார்படுத்தவேண்டும்.'

'என்னை நான் சுத்தப்படுத்தவேண்டும்'.

'என்னை நான் டீசன்டாய் அலங்கரிக்க வேண்டும்'.

'என்னை நான் கண்ணாடியில் பார்க்கவேண்டும்'.



கண்ணாடியில் புனிதம் பிரதிபலிக்கிறது- உடலிலும், உடையிலும்-உள்ளமும் அப்படித் தான் என்று உறுதியாய் உரைப்பேன்.

-என்னை நம்பு-

பத்துக் கிழமையாய் பத்திரமாய் பாதுகாத்த..(?) தாடி இன்று மரணித்து மண்ணில் கிடக்கிறது. என் முகம் வெளிச்சமாய்..(?) பொலிவாய்...(?) உள்ள(தா)து...(?) மீண்டும் இதை முளைக்கப் பண்ணுவதும் முளையிலேயே முறித்துப் போடுவதும் உன்



பதிலின் பிரதிபலிப்பே.

-கருணை செய்-

என் தகுதிகளை எனக்குள்ளேயே எண்ணிக்கொள்கிறேன். பி.கொம் பட்டதாரி: என் கல்வித்தகைமை இது ஒன்று போதாதா...?

அழகன் என்று அங்கீகாரம் பெற்றவன்: அனேகரால் ஆண்மை உண்டு உறுதிசெய்வேன்: உஷ்.... இது இரகஸ்யம்..ஹிஹ்ஹீ...

"கம்பீரமாய் இருக்கிறே(றான்)ன்:" என் காதுபட யாரோ கதைத்துக்கொண்டதாய் ஞாபகம்-பிறகேன் பிறகேனம்மா தயக்கம்? பதில் சொல்ல தாமதம்?

-கண் பாரேன்-

நிலா தூரத்தில் நீ...என்னால் இயலுமா என்று தயங்கி தயங்கி உன்னிடம் கேட்டபோது மௌனமாய் சிரித்து, தீர்க்கமாய் என்னைப் பார்த்தாயே... அந்தப் பார்வையில் என்னை நீ அங்கீகரித்துவிட்டாய் என்றல்லவா வினாடிக்குள் மனசுள் ஆசைகளை வளர்த்தேன். ஆனால்...மீண்டும் உன்னை சந்திக்க ஏழு நாட்களைக் கடந்து வரச்சொல்லி என்னை காத்திருக்கவைத்தாய். இன்றாவது என்னைப் புண்ணாக்காமல் சாத்தியமாய் சங்கதி சொல்லேன். சம்மதமென்று தலையசைத்தால் போதும்; சத்யமாய் சொல்கிறேன் சாகும்வரை உனக்கெனவே உழைப்பேன். நாயாய் நன்றியுடன் இருப்பேன்.

-ப்ளீஸ் அண்டர்ஸ்டாண்ட் மீ-

தீர்மானிக்க வேண்டியது நீ மட்டும் தானே? இளமையிலேயே தந்தையை இழந்து மற்றோர் போற்றும்படி தந்தையின் தொழிலை விருத்தி செய்தாய். வைரவிழாவை பத்தாண்டுகளுக்கு முன் முடித்துக் கொண்ட, உன் வழியில் தடையாய் நில்லாத, உனக்கென ஓருயிராய் வாழும் உன் தாய். சுற்றங்களின் தொல்லை யில்லை, தலையீடுமில்லை. பிறகேனம்மா இந்த தாமதம்?...தயக்கம்...?

ஏற்றுக்கொள்ளேன் என்னை-

நான் நடக்கின்றேன். எனக்குள் ஓர் உறுதி. நிச்சயமாய் என் எதிர்பார்ப்பு ஏமாற்றமாகாது என்று.

நான் நடக்கின்றேன்- அந்த தனியார் நிறுவனத்தை நாடி..

செல்வி சாந்தா சங்கரசுப்பு-அந்த நிறுவனத்தின் உரிமையாளர்.

வேலைக்காய் அலைந்து அலைந்து என் பத்தாவது முயற்சி இது.

அனைவரும் எனக்காய் இறைவனிடம் இறைஞ்சுங்கள். 'ஆண்டவனே பொன்விழாவை அடுத்தாண்டு கொண்டாடப்போகும் செல்வி சாந்தா சங்கரசுப்பிவின் மனதில் என்னை வேலைக்கு ஏற்றுக்கொள்ள சிபாரிசு செய்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

பரந்துவிரிந்த நீலக்கடல் உறங்கிக்கொண்டிருந்தது.

அச்சமுண்டாக்கும் வண்ணமாய் எங்கோ ஆந்தை அலறியது.

முகம் தெரியாத இருள். இல்லா விட்டால் இந்த கடற்கரையில் காதலர் பலர் கைகோர்த்து நடந்துசென்ற கால் தடங்கள் கண்ணுக்கு தெரிந்திருக்கும்.

பாத சுவடுகளை வைத்தே நடந்து சென்றவர்களின் நெருக்கத்தை கடற்கரை மணல் நம் கண்களுக்கு அறிவித்துவிடும்.

குதிரையின்மீது அமர்ந்திருந்த மலையமானின் உள்ளத்தில் கடற்கரையைப் பார்த்தவுடன் காதலர் பற்றிய எண்ணம் வரக் காரணம் என்ன?

அவனும் காதலிக்கிறான். அவனும் காதலிக்கப்படுகிறான்.

நெஞ்சிலே உள்ள காதல்தான் அவன் சிந்தனையிலும் சுழன்றடிக்கிறது.

அது ஒன்றும் விநோதமில்லையே. காதல் என்னும் களத்திலே கால்பதித்தவர்கள் அனைவருக்கும் பொதுவான குணம்தானே!

குதிரை முன்சென்றது. குதிரையின் வேகத்தை பின்தள்ளிவிட்டு மலையமானின் மனக்குதிரை முன்னே பாய்ந்தது.

ஆத்திரத்தில் மட்டுமல்ல அவசரத்திலும் புத்தி கெட்டுப் போகிறது.

பக்குவமாய் பருகிடாமல் அவசரத்தில் பாவையவள் இதழ்களை நான் வலித்திடவே செய்வது கொடுமையன்றோ?

மென்மலரை தொடுவது போல் அந்த பொன் உடலை அணைத்திடாமல் பொல்லாத அவசரம் அவள் உடல் நோக வைத்திடுதே!

பாற்குடங்கள் இரண்டும் அழுந்த அணைக்கையிலே இருமேனி ஒன்றாகும் என்பது சரிதான்.

ஆனால், பாவம் அவள் பொன்மேனி ஆலையிலே இட்ட கரும்பாகக் கூடாது. இனிக் கவனம் தேவை.

சந்தனக் குழம்பெடுத்து தனங்களிலே படம் எழுதும் போது அவள் நாணும் அழகொன்று போதும், ஆயுள் உள்ளவரை அதை நினைத்தே நான் வாழக் கூடும்.

இன்று அதனை நான் காணத்தான் வேண்டும்.

கவி நூறு எழுதினாலும் வார்த்தைக்குள் அடக்கிடவே முடியாத வண்ண அழகு முகம் வானத்து செந்நிறமாய் வெட்கத்தில் மாறும் கணம் நான் காண வேண்டும்.

தேகத்தில் ஒரு சிலிர்ப்பு. தேன் இதழில் அந்த சிலிர்ப்பினாலே தத்தி தடுமாறிவரும் வெட்கத்தில் குளித்த வார்த்தைகள்!

நினைக்கும் போதே வந்தது சிரிப்பு! நெஞ்சுக்குள் எரிந்தது ஆசையெனும் நெருப்பு!

அவன் பல்வேறு எண்ணங்களில் உழன்றபோதும், குதிரை அவன் வர வேண்டிய இடத்திற்கு வந்து தரித்து நின்றது.

எண்ணங்கள் கலைய எதிரே நிமிர்ந்து பார்த்தான் மலையமான்.

அங்கே....... அவள் இல்லை. ஏமாற்றத்தை ஏற்க மறுத்த விழிகள் மீண்டும் ஆராய்ந்தன.

இல்லை. அவள் அங்கே இல்லை. அவள் தோழி மட்டுமே நின்றிருந்தாள்.

"ஏன் வரவில்லை என்னவள்?"

மனது துடித்தது. யாரோ முள்ளை செருகியது போல மனதுக்குள் வலித்தது.

குதிரையை விட்டு இறங்கினான். தோழி நகர்ந்து அருகே வந்தாள்.

அவன் கேட்க முன்னரே தோழி முந்திக்கொண்டு சிந்தினாள் வார்த்தைகளை.

"தெரிந்து விட்டது. மாட்டிக் கொண்டாள்."

"என்ன தெரிந்துவிட்டது?"

அவனது அசட்டுத்தனமான கேள்வி தோழிக்கு சிரிப்பைத் தூண்டியது. ஆனால் அவள் சிரிக்கவில்லை. கேலியாய் பதில் சொன்னாள்.

பதில் சொன்ன தோழியின் மனக்கண்ணில் மலையமானும் தனது தலைவியும் மாலை மாற்றிக்கொண்டு மணம்புரியும் காட்சி தெரிந்தது.

திருமணத்தின் அவசியத்தை எடுத்துக் கூற இதுதான் நேரம் என்று நினைத்தாள் தோழி.

தலைவியின் வருத்தத்தை எடுத்துச் சொன்னால்தான் கரத்திலே மாலையெடுத்து வருவான் மலையமான் என்று உணர்ந்தாள் தோழி.

"அவள் நிலையை எப்படி நான் எடுத்துரைப்பேன்?"

என்று சொல்லிவிட்டு, அவன் முகம் வாடிய பயிர்போல மாறியது கண்டு திருப்தியோடு கேட்டாள்:

"பசுமையெல்லாம் பறந்தோடிய மலைப் பகுதி பார்ப்பதற்கு எப்படியிருக்கும்?"

அவன் பதில் சொன்னான்.

"கருகிய வள்ளிக்கொடி போல் இருக்கும்."

"அழியாத உம் நினைப்பால் அழகையெல்லாம் இழந்துவிட்ட என் தலைவியின் நிலையும் அப்படித்தான்."

அவன் விழிகள் கலங்கிவிட்டன. தோழி தொடர்ந்து சொன்னாள்:

"அவள் தந்தைக்கு சொந்தமான மரக் கலங்கள் திரைகடலோடி வந்து துறையிலே தரிந்து நிற்கும் காட்சி காணச் சிறப்பான தன்றோ. ஆனால் அந்த துறையிலே இருக்கிறதே ஒரு கள் சாடி. அதனுள் இருந்த கள் எல்லாம் தீர்ந்து விட்டது. அதன் நிலைதான் அவளுக்கும். அழகெல்லாம் தீர்ந்து, இளமையின் வசந்தங்கள் அழிந்து அழிவின் விளிம்பில் நிற்கிறாள் அவள்."

தோழி சொன்னது கேட்ட மலையமான் ஈட்டி பாய்ந்த நெஞ்சினன் ஆனான்.

அவனை சீண்டினாள் தோழி.

"அழியட்டும் ஐயா அவள்! வசந்தங்கள் இழந்து வாடட்டும் ஐயா அவள்! அதற்கெல்லாம் காரணமாய் அவள் நெஞ்சில் காதல் விதை போட்ட உமக்கென்ன? நீவிர் வாழும் ஐயா நீடுழி!"

மலையமான் ஒரு முடிவுக்கு வந்தவனாய் தாவி ஏறினான் குதிரையில்.

நாளை மாலைக்குள் மணமாலையோடு வருவான் என்று புரிந்தது தோழிக்கு.

காதலியை மணம் புரிய அவன் காதலனுக்கு எடுத்துச்சொன்ன தோழியின் பாடலாக ஔவையார் எழுதிய பாடல் ஒன்று சங்க தமிழ் நூல்களில் ஒன்றான நற்றிணையில் வருகிறது. அது இதுதான்:

**"முரிந்த சிலம்பின் எரிந்த வள்ளியின்**
**புறனழிந்த ஒலிவருந் தாழிருங் கூந்தல்**
**ஆயமும் அழுங்கின்று மாயுமஃ தறிந்தனள்**
**அருங்கடி அயர்ந்தனள் காப்பே எந்தை**
**வேறுபல் நாட்டிற் கால்தர வந்த**
**பலவினை நாவாய் தோன்றும் பெருந்துறைக்**
**கலிமடைக் கள்ளின் சாடி அன்னஎம்**
**இளநலம் இற்கடை ஒழியச்**
**சேறும் வாழியோ முதர்கம் யாமே."**

# உனக்கென்ன நீ வாழ்க!



## இலக்கிய நயம்

தருவது ரசிகன்



காத்திருப்பாள். கலங்கவைக்கும் இந்த கரிய இருளிலும் எனக்காக அவள் கண்மலர்ந்து காத்திருப்பாள்.

நேற்றுப் பெற்றது போதாது. இன்று அதற்கும் சேர்த்துப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதிகம் பெறும் ஆசையாலும் அவசரம் வந்துவிடுகிறது.

அவசரம் மனதுக்குள் பட படப்பை விதைத்துவிடுகிறது.

வண்ணத்திப் பூச்சி சிறகடிப்பது போல இதயம் துடித்துப் போகிறது.

சொற்சுவை என்றால் அதுதானோ? இன்று அதனை நான் அறிய வேண்டும்.

வளமான மொழிதான் தமிழ். ஊசி முனையளவு கூட அதில் இல்லை ஐயம்.

ஆனாலும், இரு மேனிகள் நெருங்கிய பின் பேசுவதற்கு வார்த்தைகள் தேடி களைத்துப்போய் புலம்புவதும், உளறுவதும் என்ன மாயம்?

உளறல்தான் புத்தின்ப நாடகத்திற்கு பொருத்தமான வசனங்களோ?

இருக்கும். இருக்கும்! இன்று என்ன உளறல்களோ?


"இரு குழந்தைகளும் மண்ணிலே வீடு கட்டி விளையாடியது தெரிந்துவிட்டது. மங்கையை அவள் மாதா தடுத்துவிட்டாள். இது எத்தனை அநியாயம்; ஊரைக் கூட்டி நியாயம் கேட்கலாமா?"

கேலி செய்கிறாள் என்று அவனுக்கும் புரிந்தது. சினக்கவும் முடியவில்லை; சிரிக்கவும் முடியவில்லை.

"எப்படி இருக்கிறாள்?"

"கடலில் மீன் உறங்கும் இந்த வேளையிலும் அவள் கண்ணுறங்காமல் இருக்கிறாள்."

## குறுக்கெழுத்துப் போட்டி இல—87



### இடமிருந்து வலம்

1. கிரகங்களின் நிலையை வைத்தும் இது சொல்லப்படுவதுண்டு.
3. இதில் பழமையானவற்றைப் பாட்டிகள் சொல்வார்கள்.
5. செல்வத்தை வீணே விரயமாக்குவதில் இவர் கெட்டிக்காரர்.
6. துன்பத்தில் சிக்கிக்கொண்டால் இதுவும் வரும்.
9. பயனின்றிப் போவதை இப்பிடியும் அழைக்கலாம். (குழம்பியுள்ளது)
10. கோபம் இப்படியும் மாறிவிடுவதுண்டு.
11. நீர் இங்கு தரித்திருக்கும்.
12. துறவிகள் இங்கு தங்குவார்கள்.

### மேலிருந்து கீழ்

1. நம்நாட்டில் தடைமுகாம்களில் இது நடக்கிறது.
2. அடர்ந்த காட்டிற்குள் இதை அறிவது கடினம்.
4. அச்சத்திற்கு இது எதிரி.
5. இதன் காரணமாக வேலை நிறுத்தங்களும் நடப்பதுண்டு.
7. இதுவும் உணவாகும்.
8. மனிதருக்கு இது முக்கியம்.
10. முகத்திலேதான் இது இருக்கும்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 11.02.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-87
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-85ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 உ | ல | 2 க | ம் | ■ | 3 தூ | 4 து |
| 5 வ | ட | ம் | ■ | 6 பு | கா | ர் |
| கை | ■ | 7 பீ | டி | கை | ■ | வா |
| ■ | 8 சோ | ர | ■ | ■ | 9 ம | ச |
| 10 நு | ள | ம் | 11 பு | ■ | ல் | ர் |
| ண | ம் | ■ | ர | ■ | கோ | ■ |
| ல் | ■ | 12 தீ | வி | ர | வா | தி |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.85இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. ந. திபோஜினி
கல்முனை.
2. ஏ. கேசவராஜன்
கந்தப்பளை.
3. எம். உதுமான்கனி
கொழும்பு-14.
4. எல். வசந்தமலர்
மாத்தளை.
5. எவ். மக்ஸிமின்
வவுனியா.
6. செல்வி. பௌரூசியா
அளுத்கம.
7. கே. சுரேஷ் குமார்
பதுளை.
8. ஹுஸைன்
குருநாகல்.
9. எவ். ஷாமிலா
ஹபுகஸ்தலாவை.
10. திருமதி. மணிமாலா குமாரசாமி
திருகோணமலை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## ஸ்போர்ட்ஸ்

# வெற்றிக்னி கையில் வந்தால் ......பல கோடிகள் பையில் சேரும்!

போர்பஸ் என்னும் அமெரிக்க பத்திரிகை, உலகின் முதல் 40 விளையாட்டு வீரர்களை அவர்கள் சம்பாதிக்கும் பணத்தைக்கொண்டு வரிசைப்படுத்தும் வழக்கத்தைக்கொண்டுள்ளது. கடந்த ஆண்டு அவ்வாறு வரிசைப்படுத்தப்பட்டிருப்பவர்களில் சிலரை நாமும் தெரிந்துகொள்வோம்.



மைக்கல் ஜோர்டான்


இந்தக் கணக்கெடுப்பில் சேர்க்கப்படுதல் போட்டிகளின் பரிசுப்பணம், சம்பளம், ஊக்கபோனஸ் மற்றும் வியாபார ரீதியாக பொருட்களுக்குக் கொடுக்கப்படும் ஆதரவு, அதாவது விளம்பரத்திற்காக மொடலிங் செய்வது போன்றவற்றிற்கு கிடைக்கும் தொகை ஆகியவை மட்டுமே அடங்கும்.

இதில் தனிப்பட்ட முறையில் நடத்தப்படும் தொழில்களின் வருமானம் சேர்க்கபடுவதில்லை. (ஒரு டொலர் இலங்கை பெறுமதிப்படி 49 ரூபாய் ஆகும்)



ஆன்ட்ரே அகாசி

1. கூடைப்பந்தாட்ட வீரர் மைக்கல் ஜோர்டான் மூன்றாவது ஆண்டாக தொடர்ந்து முதலிடம் பெறுகிறார். 3 கோடி டொலர் 1993ல் 3 கோடியே 60 இலட்சம் டொலர்.
2. கூடைப்பந்தாட்ட வீரர் ஷாகுயில் ஒல் (ஓர்லாண்டோ மஜிக் அணி) 1 கோடியே 67 இலட்சம் டொலர்.
3. கோல்ப் விளையாடும் ஜக் நிக்கலஸ் 1 கோடியே 48 இலட்சம் டொலர்.
4. கோல்ப் விளையாடும் ஆர்னோல்ட் பாமர் 1 கோடியே 36 இலட்சம் டொலர்.
5. ஒஸ்ரிய நாட்டின் கார் ஒட்டப் பந்தயவீரர் ஜெர்ஹார்ட் பெர்ஜர் 1 கோடியே 35 இலட்சம் டொலர்.
6. ஐஸ் ஹொக்கி விளையாடும் வெய்ன் கிரெட்லி 1 கோடியே 35 இலட்சம் டொலர்.
7. முன்னாள் குத்துச்சண்டை சம்பியன் மைக்கல் முரே 1 கோடியே 21 இலட்சம் டொலர்.
8. குத்துச்சண்டை வீரர் இவாண்டர் ஹோலிபீல்ட் 1 கோடியே 20 இலட்சம் டொலர்.
9. டென்னிஸ் வீரர் ஆன்ட்ரே அகாசி 1 கோடியே 14 இலட்சம் டொலர்.
10. பிரிட்டிஷ் கார்ஓட்டப் பந்தய வீரர் நிக்கெல் மான்செல் 1 கோடியே 13 இலட்சம் டொலர்.
11. டென்னிஸ் வீரர் பீட் சாம்பிரஸ் 1 கோடியே 6 இலட்சம் டொலர்.



கப்பிரியேலா சபாடினி

12. கால்பந்து வீரர் ஜோமொன்டானா 1 கோடியே 3 இலட்சம் டொலர்.

19வது இடத்தை ஜெர்மனியின் டென்னிஸ் வீராங்கனை ஸ்டெபி கிராஃப் பிடித்துள்ளார். 80 லட்சம் டொலர்.

39வது இடத்தை மற்றுமொரு டென்னிஸ் வீராங்கனையான கப்ரியேலா சபாட்டினி பெறுகிறார். 49 இலட்சம் டொலர்.

### 7 வித்தியாசங்கள்

1. பேனா
2. டோர்ச்லைட்
3. குப்பைத்தொட்டி
4. நோயாளியின் கண்
5. மருந்துப் பெட்டி
6. போத்தல்
7. டாக்டரின் நாக்கு

இவ்வாரம் (05.02.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

# மகாபாரதம்

அங்கம் 66

குறிப்பு: செய்யுள் வடிவில் மகாபாரத வசனங்களை எழுதி வந்தோம். மாணவ மணிகள் பலர் தங்களால் கருத்துக் களைப் புரிந்துகொள்ள முடியா திருக்கிறது என்று கேட்டுக் கொண்ட மைக்காக மீண்டும் வசன நடையி லேயே தருகின்றோம். ஆ-ர்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:** செஞ்சோற்றுக் கடனுக்காக தன் சொந்த உயிர்துறந்து, துயரேதையும் தாங்குதற்கும் துணிந்துவிட்ட கர்ணனவன், நெஞ்சுரத்தை என்றும் நாம் போற்று தற்கும் கடன் பட்டுள்ளோம். கண்ண னவன் பாண்டவர் பால் பற்றி நிற்கும் தன்மையினால், உண்மையதும் தர்மம் நீதி உயர்ந்த பண்பு அத்தனையும் அப்பக்கம் சார்ந்ததனை அறிந்திருந்தும் சொன்ன சொல்லுத் தவறாத தூய நெறியாளனவன் கர்ணனுக்கே இன்று இந்த அங்கமதை சமர்ப்பிக்கின்றேன்!

-காட்சி தொடக்கம்-

கிருஷ்ணனும் விதுரரும் சந்திக்கின்றனர்.

**கிருஷ்:** நடக்கப் போவதைத் தடுப்பதற்கு நம்மால் ஏதும் முடியாது.

**விதுர:** கேசவனே! தடுக்கும் சக்தி தங்களிடம் இல்லாமலா போய்விட்டது?

**கிருஷ்:** மனிதனின் செயல்களை தடுப்பதற் கான சக்தி என்னிடமில்லை. நன்மை தீமைகளை எடுத்துரைக்கவே என்னால் முடியும்! நல்லனவற்றை எடுத்துக் கூறினேன்; காதுகளை இறுக மூடிக் கொண்டார்கள். நல்வழியினைக் காட்டினேன்; கண்களை மூடிக்கொண் டார்கள். விதியின் வழியேதான் எதுவும் நடக்கும். உண்மையில் இதற்கெல்லாம் காரணம் திருதராட்டிரனே தான். வீணாக துரியோதனனை மட்டும் குறை கூறுவதில் பொருளில்லை!

**விதுர:** மன்னவர் விடும் தவறுகளுக்கு எமது உயிருக்கும் மேலான அஸ்தினா புரம் தண்டிக்கப்பட வேண்டுமா?

**கிருஷ்:** அஸ்தினாபுரியும் பலனை அனுபவித் தேயாக வேண்டும்! சொக்கட்டான் ஆட்டத்தில் சகுனி சூது செய்தபோதும், துச்சாதனன் பாஞ்சாலியின் துகிலை உரிந்த போதும், கர்ணன் திரௌபதியை விலை மாது எனக் கூறியபோதும், அஸ்தினாபுரி தடுக்க முன்வந்ததா? ஆகவே, கவுரவர்களின் துர்ப்பாக்கியத் தில் நாடும் பங்கேற்க வேண்டியதே முறை!

□□□

கிருஷ்ணரைக் காண்பதற்கு கர்ணன் இரதத்தில் வருகிறான். விதுரரும் சத்தியேகியும் கிருபிவர் மனும் உடனுள்ளனர்.

**கர்ண:** வணக்கம் வாசுதேவரே! வணக்கம் விதுரர் மகானே! சத்தியேகி, கிருபிய வர்ம அனைவருக்கும் வணக்கம்!

**கிருஷ்:** வேறு எங்கோ போகும் வழியில் இங்கு வர நேர்ந்ததோ அல்லது நேரசுவே வருகின்றீரோ?

**கர்ண:** எனது நண்பன் துரியோதனன் அவையில் நடந்து கொண்ட அநாகரிக முறைக்காக தங்களிடம் மன்னிப்புக் கோர வந்துள்ளேன் மதுசூதனா!

**கிருஷ்:** ஒருவர் விட்ட தவறுக்காக வேறொ ருவர் மன்னிப்புக் கோருவது முறை யல்ல. அவமதிப்பு எனக்கல்ல- அது துரியோதனனுக்கே- அஸ்தினாபுரமே அவமதிப்புக்குள்ளானது என்பதுதான் உண்மை! சரி துரியோதனனின் நடத்தைக்குப் பிராயச்சித்தம் தேடி வந்த நீ என்னுடைய இரதத்தில் ஏறி சில காத தூரம் வரலாமே!

**கர்ண:** தங்களுடைய தேர்ச் சாரதியாக எனக்கு இடமளித்தால்-வருகிறேன்.

**கிருஷ்:** என்னை துரியோதனனின் பாடி வீட்டுக்கு அழைத்துச் செல்ல மாட்டாயே! சரி, சத்தியேகி! கிருபிவர்மா! கர்ணனின் இரதத்தைச் செலுத்திக்கொண்டு வாருங்கள். விதுர மகாத்மனே! விடை தாருங்கள்.

□□□

**கிருஷ்:** இரதத்தைச் சற்று நிறுத்தும் கர்ணா! இந்த தேவகியின் மைந்தன் உன்னை எங்கே அழைத்துச் செல்கிறான் என்று யோசிக்கிறாயா?

**கர்ண:** வாசுதேவனே! வேறுயாராக இருந் தாலும் அவ்வாறு யோசனை தோன்றி யிருக்கும். நீயோ சாதாரணமான ஒருவனல்லவே!

**கிருஷ்:** ராதேயனே! நல்ல பண்புகளை உடையவன் நீ! தர்ம நெறிகளை உணர்ந்தவன். உனக்கு எது சரி என்று படுகிறதோ அதனையே பற்றி நிற்கும் பெரும் போக்குடையவன். ஆனால் துர்மதியாளனும் துர்க்குணமுடைய வனுமான துரியோதனனையே சார்ந்து நிற்கின்றாயே!

**கர்ண:** கண்ணா! துரியோதனனுக்கும் எனக்கு மிடையிலுள்ள உறவு உண்மை பொய்மை ஆகியவற்றுக்கு அப்பாற் பட்டது. உண்மையான அன்பினை ஆதாரமாகக் கொண்டது. தேரோட்டி மகன் என்று இந்தச் சத்திரிய உலகம் என்னைத் தூற்றி இம்சித்தபோது, குலம் கோத்திரம் பாராது என்னை அங்கத்தின் மன்னனாக்கிப் பெருமைப் படுத்தியவன் அவன்! இதனால் தான் துரியோதனன் தவறு செய்ய நேரிட்டாலும் அதனை உடனடியாக மறந்துவிடுகிறேன். இந்த உலகில் துரியோதனனுக்கும்-என்னைப் பெற்றவளே தீண்டத்தகாதவன் என தூர எறிந்துவிட்ட நிலையில் என்னைத் தன் மகனாக எண்ணி பாராட்டிச் சீராட்டி வளர்த்தாளே! அந்தத் தாய்க்கும் மட்டும்தான் நான் என்றென்றும் கடமைப்பட்டவன். என் உயிர் மீதோ வாழ்க்கையின் மீதோ எனக்குப் பற்றுக் கிடையாது. இருப்பினும் என் உயிருள்ள வரை இவ்விருவரையும் நான் மறக்கப் போவதில்லை!

**கிருஷ்:** உண்மைதான்! நன்றி மறப்பது நன்றன்று. இருப்பினும் உண்மைக்கும் பொய்மைக்கும்; நன்மைக்கும் தீமைக்கும்; ஒளிக்கும் இருளுக்கும்; சரிக்கும் தவறுக்கும் பேதம் தெரிந்த பின்னும் நல்ல பாதையைவிட்டு தவறான வழி களைக் கைக்கொள்ளுவது நல்லதா?

**கர்ண:** துரியோதனனிடம் நான் நன்மைகளைப் பெற்றபின், அதற்கேற்ப, பிரதி பலன் களைப் பாராமல் அவனைச் சார்ந்து நிற்பதே எனக்குரிய நிலைப்பாடாகும்.

**கிருஷ்:** அங்கத்துக்கதிபனே! துரியோதனன், அர்ச்சுனனை எதிர்த்து நிற்கக் கூடிய சாதுரியமுள்ள ஒரு வீரனை தன்வச மாக்குவதற்காக கொடுத்த விலையாக வும் அதனைக் கொள்ளலாமல்லவா?

**கர்ண:** நான் வாங்கப்பட்டாலும்கூட நானே விற்பனைக்குரியவனாக- நானாகவே தயாராகிவிட்டேனே!

**கிருஷ்:** சரி! நீ யார் என்று எப்போதாவது எண்ணிப் பார்த்ததுண்டா?

**கர்ண:** அதனால் எத்தகைய பலன் எனக்குக் கிட்டப் போகிறது? இருப்பினும், எனது தாய் ஒரு உயர் குலத்துப் பெண்ணாக இருக்கவேண்டும்; கங்கைக் கரையை ஒட்டிய அரண்மனையில் வாழ்ந்த அரசிளங்குமரியாகக்கூட இருந்திருக்க லாம். தான் பெற்ற தன் மகனைவிட தன் மானம், மரியாதை, பெருமை அத்தனையும் பெரிது என்று எண்ணிய தால், நான் பிறந்தவுடன் என்னை கங்கை நதியில் வீசியிருக்கலாம் என்றும் என்னால் யூகிக்க முடிகிறது.

**கிருஷ்:** உன் தாயார் யார் என்று அறிய வேண்டும் என்ற அவா உனக்கு எப்போ தாவது எழுந்ததே இல்லையா?

**கர்ண:** சொந்த மகனை வெறுத்தொதுக்கிய ஒருதாயை நினைத்து என்ன பயன்? அம்மாது மற்றொரு மணாளனுடன் என்னைப்போன்ற பிள்ளைகளைப் பெற்று மகிழ்ச்சியுடன் இப்போது வாழ்ந்துகொண்டிருப்பார். நான் தாயின் அன்பை-என்னை வளர்த்த ராதேயிடம் கண்டேன். அதுசரி இத்தகைய-மறந்து விட்ட சமாச்சாரங்களை இப்பொழுது ஏன் கண்ணா கிண்டவேண்டும்?

**கிருஷ்:** கர்ணா! உன் ஊகம் சரியே! உன் அன்னை ஓர் உயர் குடியில் பிறந்தவள் தான்! குடும்பத்தின் மானம் காக்கவே உன்னை கங்கை நதியில் பேழை ஒன்றில் வைத்துவிட்டாள். வேறுபல வீரப் புதல்வர்களை ஈன்றபோதும் கவச குண்டலங்களுடன் பிறந்த உன்னை அவள் மறக்கவேயில்லை. உனக்காக அவள் ஏங்குகிறாள்.

**கர்ண:** கண்ணா! நான் தேரோட்டியின் மகன் இல்லையா? நானும் சத்திரிய குலத்தவனா? அப்போ என் தாயை உனக்குத் தெரிந்திருக்கிறது! வாசுதேவா! உண்மையைக் கூறு... நான் யார்?

**கிருஷ்:** உண்மையைத் தாங்கும் சக்தி உனக்கு உண்டா?

**கர்ண:** இன்றுவரை ஏற்பட்ட அவமானங் களால் நான் பட்ட வேதனைகளைவிடவா இந்த உண்மை எனை வருத்தப் போகிறது? கூறுங்கள் கண்ணா!

**கிருஷ்:** கர்ணா! உன்னைத் தவிர வேறு ஐந்து வீரர்களை உன் அன்னை பெற்றெ டுத்தவள்!

**கர்ண:** ஐந்து வீரர்களா...? பாண்டவர்களை நீங்கள் குறிப்பிடவில்லையே?

**கிருஷ்:** பாண்டவர்களில் மூத்தவன் நீயே! குந்தியின் மூத்த மகன் நீயே!

**கர்ண:** அப்போ என் தந்தை..?

**கிருஷ்:** நீ வணங்கும் தெய்வமே உன் தந்தை!

**கர்ண:** என்ன? சூரியதேவனா என் தந்தை? கண்ணா! நான் ஒரு அபாக்கியவான்! நீதி தவறா யுதிஷ்டிரன், மல்லுக்கு பீமன், வில்லுக்கு விஜயன், அழகன் நகுலன், அறிவாளன் சகாதேவன் ஆகிய அரும் பெரும் சகோதரர்களை உடைய நான் எல்லோராலும் தேரோட்டியின் மகன் என்று அவமானப்படுத்தப் பட்டேனே! வாசுதேவனே! என் வேதனையை நீ அறிவாய்! இந்த உண்மைகளை எப்போதோ அறிந்தி ருந்தவன் நீ! இதனை ஏன் முன்பே என்னிடம் கூறாமல் மறைத்துவிட்டாய்? பாண்டவர்களை விரோதிகளாகவே இந்த வினாடிவரை நினைத்து, அதே எண்ணத்தை வளர்த்து வந்துள்ள என்னிடம் இன்றேன் இதனைக் கூறினாய்? இந்த உண்மை தெரிந்த பின்னர் எனது கணைகளின் முனையை அர்ச்சுனனை நோக்கி எவ்வாறு திருப்புவேன்?

**கிருஷ்:** பாண்டு புத்திரர்களில் மூத்தவனான குந்தியின் மைந்தனே! நீ உன்னுடைய தம்பிமாருக்கு எதிராக போராடுவதைத் தவிர்ப்பதற்காகவேதான் இன்று இவற்றை உன்னிடம் கூறுகிறேன். குந்தி, பாண்டு மன்னனை மணம் முடிப்பதற்கு முன்னர் நீ பிறந்தாலும் வம்ச நடை முறைப்படி நீ பாண்டு மாமன்னனின் மூத்த மகனாவாய்! இந்திரப்பிரஸ்த அரியணை உன்னுடையதே! உனக்கு முடிசூட்டி உன் தம்பிமார் ஐவரும் உன் தாள் பணிவார்கள். அவர்களுடைய வீரம் உன்னைக் காக்கும். எனக்குள்ள சந்தேகம் என்னவென்றால், ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகளான உங்கள் அறுவரிடமுள்ள உருவ ஒற்றுமையை இதுவரை எவரும் கணிப்பிட முடியா திருந்ததே! என்னுடன் வா அங்கத்தின் மன்னவனே! உனக்கு ஒரு தாயும் ஐந்து வீரச் சகோதரர்களும் உள்ளனர்..!

**கர்ண:** கண்ணா! நீ கூறுவதெல்லாம் உண்மை தான்! இருப்பினும் துரியோதனனுக்கு நான் கடமைப்பட்டவன். அவனுக்குத் துரோகம் செய்ய நான் ஒருபோதும் துணியமாட்டேன்! மதுசூதனனே! எனக்குத் தெரியும்-நீ தர்மத்தைச் சார்ந்து நிற்கிறாய்! துரியோதனனின் துர் நெறிகள் தெரிந்தும் அவன் அணியைச் சார்ந்தே நான் நிற்பேன்! கவுரவ சேனை அழிந்து போகும் என்பதையும் நான் அறிந்து தானுள்ளேன். இருந்த போதும் நான் அதே அணியில் நின்றுதான் போரிடு வேன். அர்ச்சுனன் எனது தம்பி என்பதைத் தெரிந்தபின்பும் அவனை நான் எப்படிக் கொல்ல முடியும்? கிருஷ்ணா! நீ எனக்கு ஒரு சத்தியவாக்குத் தரவேண்டும்! எந்தக் காரணம் கொண்டும் என் தம்பிமாரிடம் என்னை யார் என்று-நான் மடிந்து வீழும்வரை- கூறி விடாதே! தர்மத்தின் திருவுருவான என் தம்பி யுதிஷ்டிரன் தான் அரியணை யிலமர்ந்து ஆட்சி புரிய அத்தனை அருகதையும் உடையவன். நான் அவனு டைய அண்ணன் என்பதை யுதிஷ்டிரன் அறிந்துகொண்டால் இந்திரப்பிரஸ்த மணி முடியை என் தலையில் சூட நினைப்பான். நானோ அதனை துரி யோதனனின் சிரசில் சூட்டி மகிழ்வேன்!

__பின்னணிப் பாடல்:__

**எழு கதிர் குணதிசை ஏகி மறைவலாம்**
**முழு நிலா நண்பகலூர்ந்து நகரலாம்**
**கொடைமினுக் கோருயிராகிய கர்ணனும்**
**இடையினில் துரியனை இழந்திடத் துணிவனோ?**

-காட்சி மாற்றம்-

கர்ணன் சூரியதேவனை நோக்கி தனிமையில் வணங்கி நிற்கிறான்.

**கர்ண:** என்னைப் படைத்தவனே! என் விதியை நோவதற்கு இன்று என்னை ஆளாக்கிவிட்டாய்! நான் யார்? ராதேயனா? குந்தியனா? என்னை உருவாக்கிய கதிரவனின் ஒளி மங்கவில்லை. என்னை ஈன்றெடுத்தவள் அரண்மனைவாசி! உங்கள் பாபச் செயலுக்குப் பாத்திரவாளியாக ஏன் என்னை ஆக்கிவிட்டீர்கள்? இது என்ன நீதி? துரியோதனனுக்குக் கடமைப் பட்டவனாக என்னை ஆக்கிவிட்டு, அதே நேரத்தில் என் சகோதரர்களுக்கு எதிராக என்னைப் போர்க்களமேக வைத்துவிட்டீர்களே! இதுதான் நீதியா? இந்நிலைக்கு என்னை ஆளாக்கிவிட்டு அதே நிலையில் விட்டு விடாமல், வாசுதேவ கிருஷ்ணன் மூலம்- இத்தருணத்தில் ஏன் என்னைப்பற்றிய உண்மைகளைக் கூற வைக்கவேண்டும்? இத்தனைக்கும் பின்னரும் என் தம்பி மாருக்கு எதிராக என்னால் சரங்களைத் தொடுக்க முடியுமா? இல்லை-எது எவ்வாறானாலும் நான் துரியோத னனின் அணியை விட்டு மாறமாட்டேன். அதுவே என் முழுமுதற் கடமை! நன்மைக்கும் தீமைக்கும் நடைபெற விருக்கும் போரில் தீமையின் பக்கமே சார்ந்து நிற்க விதித்து- தனித்து விடப்பட்டுள்ளேன். இறைவா! நீ என்னைக் கைவிடலாம்; என் தாய் என்னைத் தூரத்தே வைக்கலாம். ஆனால் நான் துரியோதனனை விட்டுப் பிரியமாட்டேன்!

-காட்சி மாற்றம்-

துரியோதனன் படுத்திருக்கும்போது கர்ணன் அவனைத் தேடி வந்துள்ளதாக காவலன் வந்து கூறுகிறான்.

**துரி:** அங்கத்துக்கதிபனா? இந்த வேளை யிலா? வரச்சொல்...!

கர்ணன் வருகிறான்.

**துரி:** இந்த நடுநிசியில் எனை நாடி வந்த காரணம் என்ன நண்பனே!

**கர்ண:** மன்னிக்கவேண்டும் நண்பனே!

**துரி:** நண்பர்கள் மத்தியில் மன்னிப்புக்கு இடமில்லை. இருப்பினும் இந்த வேளையில் வந்தமைக்கு தகுந்த காரணம் இருக்கவேண்டும்!

**கர்ண:** பெரிதாக ஒன்றுமில்லை நண்பா! உன்னுடைய நிழலே உன்னைவிட்டு அகன்றாலும் இந்த ராதேயன் உன் அணியைவிட்டு அசையப் போவதில்லை என்பதை வலியுறுத்தவே இப்போது வந்தேன்!

**துரி:** அதுதான் நீ கூறாமலே எப்போதோ தெரிந்த விடயமாயிற்றே!

**கர்ண:** நண்பனே! கதிரவன் தன் கதிர் வீச்சினை நிறுத்தலாம்; பூமி முழுவதும் வரண்டு போகலாம்; வில்லை விட்டுக் கிளம்பும் பாணம்கூடக் குறி தவறலாம். ஆனால், இந்த கர்ணன் துரியோதனனை என்றுமே விட்டுப் பிரியமாட்டான்.

இருவரும் அணைத்துக்கொள்ளுகின்றனர்.

-காட்சி மாற்றம்-

துரியோதனனுடன் சகுனி இருக்கும்போது கர்ணன் அங்கு வருகிறான்.

**கர்ண:** நண்பனே துரியோதனா! நலமா! மாமா...என்ன நம்பிக்கை தளர்ந்து காணப்படுகிறீர்களே!

**துரி:** எல்லாவற்றையும் பாதுகாப்பாக காந்தாரம் அனுப்பிவிட்டார்! மாமா! இதுகாலவரை காத்திருந்த போர் இதோ வந்துவிட்டது மாமா-சிரியுங்கள்!

**சகுனி:** யுத்தத்தை நினைத்தால் எனக்கு சிரிக்க முடியாதிருக்கிறது மருமகனே! அன்று அரசவையில் அந்த மாயாவி கிருஷ்ணன் ஆடிக்காட்டிய நாடகத்தில் எத்தனை பேர் அவனுடைய விளை யாட்டில் மயங்கினார்களோ! பக்தி என்ற மாயையில் அவன் மீது-உன்னுடன் மிக நெருக்கமானவர்களே சிக்கியிருக்கக் கூடும். அதனை ஆராய்ந்து- சற்று சிந்தித்துப்பார் துரியோதனா! என்னை யும் ஆராய்ந்து பார்! அங்க நாட்டதிப னையும் ஆராய்ந்துபார்!

**கர்ண:** என் மீதுமா சந்தேகம்? மாமா! நிர்ப்பந்தங்களால் நிர்மூலமாகும் பற்றுறுதி கொண்டவனல்ல இந்த கர்ணன்! உண்மையான வீரன், தான் வைத்த குறியை என்றும் தவறவிட மாட்டான். அன்றும் இன்றும் என்றும் என்னுடைய குறிக்கோள் ஒன்றுதான்! அதுதான் அர்ச்சுனன்மீது நான் வைத்துள்ள குறி! தாங்கள் வேண்டு மானால் தங்களையே பரிசோதித்துப் பார்த்துக்கொள்ளலாம்.

**சகுனி:** சிறுத்தைகூட தன்னுடைய இலக்கி னைத் தடுமாற விட்டுவிடுவதில்லை. பாண்டவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ நான் என்றுமே அனுமதிக்கமாட்டேன்!

**துரி:** இவற்றை விட்டு நடைமுறைப் பிரச்சனைக்கு வருவோம். நமது படைகளுக்குத் தளபதியாக யாரை நியமிப்பது என்பதுதான் எனக்கு பெரும் யோசனையைத் தருகிறது.

**கர்ண:** யாரை நீ மனதில் வைத்திருக்கிறாய் நண்பனே?

**துரி:** நண்பனே! இப்பதவிக்கு நீயே பொருத்தமானவன் என்பதுதான் எனது எண்ணம்!

**சகுனி:** முட்டாள்தனமான எண்ணம்!

**கர்ண:** மாமா கூறுவதுதான் முற்றிலும் உண்மை! தேரோட்டி மகனை தங்கள் தளபதியாக எந்த சத்திரியனும் ஏற்பானா?

**துரி:** நானே சத்திரியன்தானே! நானே ஏற்கும்போது மற்றவர்கள் ஏன் ஏற்க முடியாது? மாமா! பிதாமகரை தானைத் தலைவராக நியமிக்க முடியாது. அவர் என்றும் பாண்டவர் பக்கம் சார்பு டையவர்!

**சகுனி:** கங்கையின் மைந்தரை படைகளின் தலைவனாக நியமித்தால் யுத்தத்தில் பாதி வெற்றி உன்னையே சாரும் துரியோதனா? பிதாமகருக்கு எதிராக குந்தியின் மைந்தன் எவனாவது ஆயுதம் தூக்க முற்படுவானா? கிருஷ்ணன் எத்தனை மாயங்களைச் செய்து உற்சாக மூட்டினாலும் அவர்கள் எவரும் பிதா மகரை எதிர்த்து நிற்கத் துணிய மாட்டார்களே!

**கர்ண:** பிதாமகரைத் தவிர வேறு எவரை யேனும் தானைத் தலைவனாக நியமித் தால் நிச்சயமாக படை வீரர்களுக் கிடையில் பூசல் கிளம்பலாம்.

**சகுனி:** ஆமாம்! கர்ணன் கூறுவதுபோல் படையில் பிளவு தோன்றும்!

-காட்சி மாற்றம்-

பீஷ்மரின் அரண்மனை-துரோணர், கிருபர் ஆகியோர் உரையாடும்போது விதுரர் வருகிறார்.

**பீஷ்ம:** இவ்வாறு அமைதியாகவே இருந்தால் என்னாகும்?

**கிருப:** கங்கையின் மைந்தரே! பேசுவதற்குப் பொருத்தமாக எதுவும் தென்படவில்லை என்பதால்தான் இந்த மௌனம்!

**துரோ:** இங்கு நாம் மட்டும்தானே இருக்கி றோம். மனம் திறந்து பேசலாமே! என்னுடைய துர்ப்பாக்கிய நிலையினைப் பாருங்கள்! எனது மாணாக்கர்களே ஒருவரை ஒருவர் எதிர்த்துக்கொண்டு போர்முனை செல்ல ஆயத்தமாகி விட்டார்கள்!

**பீஷ்ம:** துர்ப்பாக்கிய நிலைக்கு அது காரணமல்ல ஆச்சாரியரே! நாமெல்லாம் இருந்தும் போரை நிறுத்த எம்மால் முடியவில்லையே!

விதுரர் வந்து அனைவரையும் வணங்குகிறார்.

**பீஷ்ம:** வாரும் விதுரரே! இனம் தெரியாத வேதனையில் தவிக்கிறோம். உம்மால் ஏதாவது கூற முடியுமா?

**விதுர:** உண்மையில் ஒரு செய்தி கூறவே இங்கு நான் வந்தேன்! எனது பிரதம மந்திரி பதவியிலிருந்து விலகத் தீர்மானித்துவிட்டேன்.

**துரோ:** தாங்கள் பதவியிலிருந்து விடுதலை பெற முடியும் என்பதனால் உண்மை யில் அதிஷ்டசாலியே!

**விதுர:** ஒவ்வொருவருக்கும் தங்கள் கடமை களிலிருந்து ஒதுங்குவதற்கு உரிமை இருக்கிறதே!

**பீஷ்ம:** இரு வாக்குறுதிகளால் நான் கட்டுப் பட்டுக் கிடக்கும்போது என்னால் எப்படி விலக முடியும் விதுரரே!

**விதுர:** அஸ்தினாபுரத்தைப் பொறுத்தவரை அதனைக் காக்கும் பொறுப்பு மன்ன வருக்குத்தானே அதிகமாக இருக்கிறது?

**பீஷ்ம:** விதுரரே! இந்திரப்பிரஸ்தம் பெட்ட கத்துள் வைக்கப்பட்டுள்ள பொருளா- அதனை பாண்டவர்களிடம் எடுத்துக் கொடுத்து நிலமையைச் சீர்படுத்து வதற்கு...?

**விதுர:** அஸ்தினாபுரத்தை காக்கும் தலையாய பொறுப்பினை ஏற்றுக்கொண்ட தாங்கள் அதனை நிர்மூலமாக்குவோருடன் இணைந்து நிற்கின்றீர்களே! அஸ்தினா புரம் எரிந்து அதனால்உண்டாகும் சாம் பல், மாசுமறுவற்ற தங்கள் வெள்ளை உடைகளில் படிந்து என்றும் அழியாத கறையாக விளங்கப் போகிறதே?

**பீஷ்ம:** உண்மைதான் விதுரா! அஸ்தினாபுரி அரியணையில் எவர் அமர்ந்தாலும் அவருக்குக் கட்டுப்பட்டவனாக இருந்து நாட்டைக் காப்பேன் என்று நான் அன்று வாக்குக் கொடுக்கும்போது, எனது தந்தையின் அரியணையில் திருதராட்டிரனைப்போன்ற ஒருவன் அமர்ந்து ஆட்சிபுரிவான் என்று நான் துளிகூட எண்ணிப்பார்க்கவில்லையே! ஆகவே இந்த இக்கட்டான நிலையில் என்னைத் தனியாகத் தவிக்கவிட்டுப் போய்விடாதே விதுரா... என்னை விட்டுப்போய்விடாதே!

**விதுர:** தங்களைக் குறை கூறவில்லை தாத்தா! என்னுள்ளத்துள் கொழுந்துவிட்டெரியும் நெருப்பின் ஜுவாலையைத் தாங்க முடியவில்லையே! பாயும் வெள்ளத்துள் மூழ்கும் ஒருவன் பாதுகாப்புக்காக ஒரு துரும்பாவது கிடைக்காதா என்று ஏங்குவதுபோல் உள்ளது என் நிலை!

**பீஷ்ம:** மகனே! உன் நிலையில்தான் நாங்களும் இருக்கின்றோம். உன் இஷ்டப்படியே செய்! அஸ்தினாபுரத்துடன் அனைவரும் சேர்ந்து அழிந்து போகாமல் நீயாவது எட்ட நின்று, என்ன நடக்கிறது என்று பார்க்கலாம் அல்லவா? போவதற்குமுன் நம் நாட்டை ஒருமுறை நன்றாகப் பார்த்துவிட்டுப் போ! நீ மீண்டும் இந்நாட்டை இதே கோலத்தில் பார்க்க முடியாதல்லவா?

துரியோதனனும் ஏனையோரும் வருவதாக காவலன் வந்து கூறுகிறான். பீஷ்மரையும் ஏனையோரையும் துரியோதனன், சகுனி, கர்ணன், துச்சாதனன் ஆகியோர் வணங்கு கின்றனர்.

**பீஷ்ம:** வருக மகனே! என்னைத் தேடி வந்த காரணம் யாதோ?

**துரி:** போர் முனை செல்வதென்று முடிவாகி விட்டதை அறிவீர்கள். அஸ்தினாபுரி ஆயுதப் படைகளின் தானைத் தளபதியாக தாங்களே பொறுப்பேற்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கவே தங்களிடம் வந்துள்ளோம்!

**பீஷ்ம:** குரு துரோணாச்சாரியாரிடம் பதவியைக் கொடுத்திருக்கலாமே?

**சகுனி:** தங்களைத் தவிர இந்தப் பதவிக்கு வேறு எவரையும் துரியோதனனால் நினைத்துப்பார்க்க முடியவில்லையே!

**துரி:** தாங்கள் பதவியினை ஏற்காவிடில் இங்கிருந்து நான் அசையவேமாட்டேன்!

**பீஷ்ம:** எழுந்திரு மகனே! நான் பதவியை ஏற்கிறேன்! துரியோதனா! நான் கூறுவதைக் கவனமாகக் கேள்! பல்லா யிரம்பேரை நான் போரில் கொன்று குவிப்பேன்! ஆனால் அர்ச்சுனன் பாணங்கள் தொடுத்து என் உயிரை போக்க நேரிட்டாலும் நான் அவனைக் கொல்லமாட்டேன்!

**கர்ண:** அப்பணிக்காகவே நான் காத்திருக் கிறேன் பிதாமகரே!

**பீஷ்ம:** என் பேச்சை இடைமறிக்காதே! அங்கத்துக்கு அதிபனே! நான் செலுத்தும் படையில் நிச்சயமாக உனக்கு இடம் தரப்போவதில்லை.

**கர்ண:** இதற்காக துரியோதனா நீ வருந்தாதே! அவர் மடிந்ததும் எனது இரதம் உன் அணிக்கு வந்து சேரும்!

**பீஷ்ம:** எனது குறிப்புகள் இன்னும் முடிந்து விடவில்லை! பாண்டுவின் மைந்தர் களையும் நான் கொல்லமாட்டேன்!

**கர்ண:** புதுமையான நிபந்தனை! துரியோத னனின் அணிக்குத் தலைமை ஏற்கும் தாங்கள் அவனுடைய எதிரிகளைக் கொல்லப்போவதில்லை! துரியோதனா! இந்த நிபந்தனையையும் ஏற்றுக் கொள்! இந்தச் சுற்றாடலே என்னைத் திக்கு முக்காட வைக்கிறது- நான் போகிறேன்....!

**சகுனி:** அங்க ராஜனே...!

__பின்னணிப்பாடல்:__

**படையினை நடத்திடும் தளபதிப் பதவியை**
**பிதாமக ரேற்றிடச் சம்மத மளித்தனர்!**
**பாண்டவ ரெவரது உயிரையும் பறித்திட**
**பாணம் தொடுத்திடா பொறுப்பையும் விதித்தனர்!**

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

அருள் ஜுவலர்ஸ்



4363331
வண்ண நகைகளின் கூட்டம்
எண்ணம் முழுதும் அதை நாடி
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

## முகம் வேறு! பாவனை ஒன்று

ஒரே விதமான போஸ். கச்சிதமாக அமைவது கஷ்டம்தான். மனிதர்கள் என்றால் சொல்லிவைத்துவிட்டு வன் டு திரீ ஸ்டார்ட் சொல்லி கிளிக் செய்யலாம். ஆனால் நாயை பயிற்சிகொடுத்து பெண்ணோடு சேர்த்து ஒரே சமயத்தில் "கிளிக்" செய்திருப்பது ஆச்சரியமல்லவா?

Kala



JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேழை
61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
4335686





## மயக்குகிறாள் ஒரு மாது!

ரசிகர்களை மயக்கும் பாடகி மடோனாவுக்கு தற்போதைய ஆசை ஒரு குழந்தைக்கு தாயாக வேண்டும் என்பதுதான். என் குழந்தைக்கு அப்பாவாகக் கூடிய ஆண்மகனை கண்டுவிட்டேன். இனி குழந்தை பெறவேண்டியதுதான் என்று சொல்லுகிறார் மடோனா. அவரது கூற்று அதிர்ச்சியை மட்டுமல்ல அவரது ரசிகர்கள் மத்தியில் கிளு- கிளுப்பையும் ஏற்படுத்தியிருக்கிறதாம். எல்லாம் சரி, தாய் கண்டுபிடித்துள்ள அந்த ஆண்மகன் யார் என்பதை மட்டும் சொல்ல மறுக்கிறார் மடோனா.



## இந்தக் குத்துப் போதுமா?

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 24ம் திகதி இலண்டனில் நடைபெற்ற உலக அதிபார குத்துச் சண்டைப் போட்டியை பல்லாயிரம் ரசிகர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர்.

தன்னோடு மோதிய லெனெக்ஸ் லூயிஸ் என்பவரை இரண்டாவது சுற்றிலேயே வீழ்த்திவிட்டார் மக்கால். உலக அதிபார குத்துச் சண்டை சபையின் விருது அவர் கையில் கிடைத்தது. 13 வருடங்கள் மிக கடுமையான முயற்சியின் பின்னரே வெற்றியை பெறும் தகுதி வந்து சேர்ந்தது.

மக்காலுக்கு இப்போது வயது 29.

தற்போது சிறையிலிருக்கும் மைக்டைசன் எதிர்வரும் மே மாதம் விடுதலையாவார் என்று தெரிகிறது. அவரோடு மோதி மக்கால் வெற்றி பெற்றுவிட்டால் காத்திருக்கும் தொகை எவ்வளவு தெரியுமா? சுளையாக 10கோடி அமெரிக்க டொலர்கள். குத்தால் சேரும் பணம்!





## அம்மா என்றால் நம்பு!

தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு செல்லும் முதல்வர் காலில் விழும் தீவிர பக்தர்! தடுக்கவேயில்லைமுதல்வர்.

தனிநபர் வழிபாடு கொடிகட்டிப் பறக்கிறது. தமிழ் நாட்டில் எங்கு திரும்பினாலும் ஜெயலலிதாவை தெய்வமாக்கி தொழுது புகழும் வாசகங்கள். →

தலைவியை நம்பலாம். விசுவாசம் கொள்ளலாம். விழுந்து வணங்கி வழிபாடு நடத்துவது அன்பல்ல, அடிமைத்தனம்! கடவுளை வணங்காதே என்ற திராவிடர் கழக பாரம்பரியத்தில் வளர்ந்தவர்கள் தங்கள் தலைவர்களையும், தலைவிகளையும் விழ்ந்து வணங்கத் தொடங்கியதுதான் வேடிக்கை.

இந்த துதிபாடல்கள்தான் ஜெயலலிதாவின் கண்களை மறைக்கின்றது. எவரையும் எடுத்தெறியும் குணத்தைக் கொடுக்கிறது. எந்த தனிநபரையும் அளவுக்கு மீறி ஏற்றிப் புகழ்ந்தால் அந்த தனிநபர் மட்டுமல்ல அவரது செயல்களும் பழுதுபடும். இதற்கு சாட்சி ஜெயலலிதாவின் ஆட்சி!

படஉதவி - இந்தியா டுடே.